கல்கி



KALKI
17.11.1963

30 காசு



"த்ஸ, த்ஸ! வீட்டிற்காக வாங்கின
பாரி மிட்டாயில் பாதிக்கு மேல் நானே
சாப்பிட்டு விட்டேனே!"

பாரி மிட்டாய்க்கான ஆசையை அடக்கவே முடியாது. அனைவரும் அதை விரும்புவதின் காரணம் அது ருசி மிக்கதாயும், சத்து நிறைந்ததாயும் இருப்பதால்தான்.

இவ்வகைகளை ருசித்துப் பாருங்கள்
- லாக்டோ பான் பான்ஸ்
- மில்க் டாபி • ஜிஞ்ஜர் காப்ஸ்
- ஹெல்த் ப்ருட்ஸ்

பாரி மிட்டாய்தானா என்று கவனித்து வாங்கவும்.
காகிதஉறை மேல் பெயர் இருக்கும்

Parry's

தயாரிப்பாளர்கள்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்

JWT/PAS/1968

காட்பரீஸ்


டிரிங்கிங் சாக்கலேட்

சூடாகவோ, அல்லது குளிர்ந்ததாகவோ—
மிக ருசியானது
ஒரே நொடியில் தயார்.



Alpers CF. 400 TAM A

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1963 டிசம்பர் 2
1963 டிசம்பர் 26

நாகப்பட்டினத்திலிருந்து

1963 டிசம்பர் 3
1963 டிசம்பர் 27

கம்பெனியின் சென்னைக் காரியாலயத்தின் மூலம் விற்பனை செய்யக்கூடிய பார்த் வசதியற்ற மற்றும் பங்க் வசதியுள்ள மேற்கண்ட கப்பல் பிரயாணத்துக்குரிய டிக்கட்டுகள் எல்லாம் விற்பனை ஆகிவிட்டன. இருந்தாலும் இவ்வகுப்பு டிக்கட்டுகள் கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

C. M. குட்டி	AL. காசி செட்டியார்	கேரளா டிராவல்ஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு சென்னை -1	கத்தோலிக் சென்டர் பில்டிங்ஸ் 6, அரமனைக்காரத் தெரு சென்னை -1	மாஸ்கட்ட் ஹோட்டல் திருவனந்தபுரம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கோ. (மதராஸ்) லிட்.
7. அரமனைக்காரத் தெரு. சென்னை -1

மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.
முதல் லேன் பீச் ரோடு. நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

குணத்தில் சிறந்தவை

ஸ்வஸ்திக் வேதாரணியம் புகையிலை

ஸ்பெஷல் தயாரிப்பு

15 நயா பைசா

பிளாஸ்டிக் பொட்டலங்கள்

கல்கி

பொருளடக்கம்

சோபகிருது, கார்த்திகை 1 - நவம்பர் 17



5 ஜயபுரி புஸ்-வாணம்! ★
7 தென் வியட்நாம் புரட்சி
8 என்ன சேதி?
10 ஜிபுணி குபேரன் செட்டியார் ★
13 தீபாவளி ஹாஸ்யங்கள் ★
19 முதல் மூவர்
20 வூர்ஹிஸ் கல்லூரி ★
24 குண்டுமல்லிகை
35 காஞ்சித் தலைவன்
36 அறிவுக்கனலே, அருட்புனலே!
46 சுல்தானா ரஜியா ★
50 பொன்விலங்கு
58 இவனே அவன்!
66 பத்தினிக் கோட்டம்
75 தீபாவளி கலாட்டா
81 பூட்டிய கடைக்குள்!
85 நிமிஷக் கதைகள்
86 கங்கா ஸ்நானம் ஆச்சா?
90 உள்ளம் கவர்ந்தவன்


பட விளக்கம் 9-ம் பக்கம் பார்க்க

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

புகைபிடிக்கும் இங்கிதம்.

புகைப்பதா? பொறுப்பதா?

எல்லா சமயங்களிலுமே புகைபிடிக்கும் சுதந்திரம் இருந்துவிடாது. உதாரணமாக சிக்காளி அறையிலே அவர் புகைபிடிப்பாரேயானால் உங்களுக்கும் தடையிராது. சம்பிரதாயச் சடங்குகளின்போது—அவை மதச் சடங்குகளாக இல்லாதுபோனாலும்—புகைபிடிப்பதைத் தவிர்ப்பதே நலம்.



உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனமா



இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

பாரதத்தில் இந்தவகை தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 44 TAM. — Grease Advtg.



மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 16

ஜயபுரி புஸ்-வாணம்!


நேயர்கள் யாவருக்கும் நமது தீபாவளி வாழ்த்துக்களை அளிக்கிறோம். நரகாசுரனாக வருணிக்கப்படும் தீய சக்திகள் யாவும் விலகி நம் நாடு எல்லா நலன்களையும் பெறவேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

தீபாவளி வாண வேடிக்கைக்கு முன்பாகவே ஜயபுரியில் வாண வேடிக்கைகளைக் கண்டோம். உபதேர்தல்களில் அபஜயத்தைத் தேடிக்கொண்ட காங்கிரஸ் கட்சி காமராஜ் ரஸாயனம் சாப்பிட்ட தெம்புடன் ஜயபுரியில் மகாநாடு நடத்தியிருக்கிறது. சிறிது நேரம் ஜிலுஜிலு என எரிந்து விட்டுப் பிறகு கரியும் புகையுமாகிவிடுகிற வாணங்களைப் போல் வழக்கமான வார்த்தை ஜாலங்களைச் செய்தனர் காங்கிரஸ் தலைவர்கள்.

சோஷலிஸம், கூட்டுசேராக் கொள்கை என்ற இரு காங்கிரஸ் மகா மந்திரங்களை மீண்டும் கோஷித்திருக்கின்றனர் காங்கிரஸ் தலைவர்கள். இவ்விரண்டிலும் உள்ள தவறுகள் வெளிப்படையானவை. எனினும் காங்கிரஸ் தலைவர்கள் புழுதியைக் கிளப்பி உண்மைகளை மறைக்கப் பார்ப்பதால் தெரிந்த விஷயங்களையே நாம் மீண்டும் மீண்டும் சொல்லவேண்டி யிருக்கிறது.

இரத்தக் களரி உண்டாகாமலே சோஷலிஸத்தை நிறுவுவோம் என்று பிரதமர் பேசி யிருக்கிறார். நேரடியாக ஆயுதப் பிரயோகம் செய்துதான் மக்களின் இரத்தத்தைப் பிழிய வேண்டுமென்பதில்லை. நாளுக்குநாள் உயருகிற விலைவாசிகளும், வரி இனங்களும் மக்களின் ரத்தத்தைப் பிழிந்து கொண்டுதான் வருகின்றன. சமூகத்தின் அபிவிருத்திக்கு ஜீவசாரமான ஊக்கத்தைக் காங்கிரஸ் சர்க்கார் உறிஞ்சிவிட்டது. 'சொத்துக்கும், சலுகைக்கும் இனி சமூகத்தில் இடம் இருக்காது' என்கிறது காங்கிரஸ் தீர்மானம். தனியார் துறை சுதந்திரம் பெற்று, தொழில் துறையினர் போட்டா போட்டியிடும்போது தான் 'சலுகைகள்' இருப்பதில்லை. காங்கிரஸ் சோஷலிஸத்தின் விளைவான பெர்மிட் — லைசென்ஸ் — கோட்டா வரப்பெற்றநிலையிலேயே அநியாயச் சலுகைகள் வளர்ந்திருக்கின்றன. சமூகத்துக்கு ஒரு தீங்கும் செய்யாமல் ஒருவர் சொத்து ஈட்டுவதையோ, ஈட்டிய சொத்தை நிலமாகவும், தொழில் நிறுவனமாகவும், கடையாகவும் காத்து அபிவிருத்தி செய்து கொள்வதையோ குலைப்பதால் ஏழைகளுக்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது. இந்த நாட்டின் தனிகர்களுடைய திரவியத்தை எல்லாம் தேசத்தில் சமவிநியோகம் செய்வதால் அவர்களும் ஏழையாவரே அன்றி, ஏழைகளைப் பணக்காரராக்கிவிட முடியாது. மக்களின் சொத்துரிமை என்பது அரசியல் சாஸனம் பூரணமாக ஒப்புக்கொண்ட விஷயமாகும். அதனை ஆள்கிறவர்கள் இஷ்டப்படி மாற்றுவது அநீதம். அரசியல் சாஸன ஷரத்தைக் குலைக்காமலே குத்தகைதாரருக்கும், மற்ற மத்தியஸ்தர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் உரிய நன்மைகளைச் செய்ய முடியும்—உதாரணமாக, ராஜாஜி நிறைவேற்றிய தஞ்சை பண்ணையாள் சட்டம்போல். ஆனால் மக்களின் சொத்துரிமையை விரும்பாத காங்கிரஸ் மூல சாஸன ஷரத்தை மீறி வரம்பு கடந்து செல்கிறது.

சொத்துரிமைதான் ஒருவரை உற்பத்தியில் அபிவிருத்தி காணத் தூண்டும். இந்த ஊக்கத்தை வேறெதனாலும் அளிக்க முடியாது. அபிவிருத்தியில் எந்தவிதமான ஆர்வமும் கொள்ள முடியாத சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தொழில்களை நடத்த



வேண்டும்; நிலங்களையெல்லாம் வளைத்துப் போட்டு, கூட்டுப் பண்ணைகளை இயக்க வேண்டும் என்ற கதி ஏற்பட்டால் இந்த நாடு பரிதாப நிலையை யடையும். வீணாக ஏழை எளியவர்களின் நல்ல மனத்தில் விஷத்தைக் கலந்து, அருமையை உண்டாக்கி, வோட்டுப் பெறப் பார்க்கும் தந்திரமே காங்கிரஸின் சோஷலிஸம். முதலில் உற்பத்தியைப் பெருக்க வழி தேடட்டும். அப்புறம் அதன் விநியோகத்தைக் குறித்த சித்தாந்தங்களைப் பார்ப்போம்.

1977-ம் ஆண்டில் இந்நாட்டு மக்கள் யாவரும், உணவு, உடை, இடவசதி, கல்வி, தேகாரோக்கியம் இவற்றில் குறைந்த பட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்பது ஜயபுரி தீர்மானம். இப்படிக் காங்கிரஸின் குறிப்பில் கண்டிருப்பதே, எந்த எதிர்க் கட்சி வாதங்களையும்விட ஆளும் கட்சியை வன்மையாகக் கண்டிப்பதாகக் கொள்ளலாம். இன்று காங்கிரஸ்ஆட்சி ஏற்பட்டுப் பதினாறாண்டுகள் ஆகின்றன. இன்னமும் மக்களின் அத்தியாவசியத் தேவைகளை அதனால் நிறைவேற்ற முடியவில்லை; இன்னும் பதினான்கு ஆண்டுகள் காத்திருக்கச் சொல்கிறது. இதுவே அதன் கொள்கைகள் எவ்வளவு உபயோகமற்றவை என்பதற்குச் சான்று.

கூட்டு சேராமை பற்றிக் காங்கிரஸ் தலைவர்கள் செய்துள்ள கோஷ்டிகானம் பிற கட்சிகளின் ஆட்சேபணைக்குப் பதில் கூறவில்லை. ருஷ்யாவும் அமெரிக்காவும் கொண்டிருந்த பேதத்தில் இந்தியா எந்தத் தரப்பிலும் சேரலாகாது என்பதற்காகவே கூட்டு சேராமைக் கொள்கை தோன்றிற்று. நாம் போரில் இறங்காத அப்போது, வல்லரசுகள் போரில் இறங்கினால் நாம் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்று கருதப்பட்டது. இப்போது பிரச்னையே வேறு. ஒரு பெரிய எதிரியின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகி நிற்கிறோம். அபாயத்தில் சிக்கியிருக்கிறோம். இன்றைய பிரச்னையுடன் ஒரு தொடர்பு மற்றது முன்பு உருவான கூட்டுசேராக் கொள்கை. அதை இன்னமும் கட்டி அழுவது வடிகட்டின பேதமையாகும். ஏழை இந்தியா இன்று தளவாடங்களை விலைக்கு வாங்குவது என்றால் மக்கள் மேலும் நசுக்கும் வரிப் பளுவைத் தாங்கி அவதியுற நேரும். எனவே நட்பின் மூலமே ஆயுத உதவி பெற வேண்டும். இவ்வாறு நமது நட்புக்கு உரியவர்கள் மேல்நாட்டு வல்லரசுகள்தான்.


இந்த உண்மையைப் புரிந்து கொண்டு உற்ற நடவடிக்கை எடுக்கக் காங்கிரஸுக்கு மனமில்லை. தம் வழியே வீம்புடன் செல்வதுதான் பெருமை என்று நேருஜி எண்ணுகிறார். ஆனால் அவருடைய ஆட்சியில் நாடு எவ்வளவு அவமானம் அடைந்து விட்டது என்பதை மக்கள் நன்கு கண்டு வருகிறார்கள். எவ்வளவு ஜால வித்தை செய்தாலும் அவர்கள் மயங்கிவிட மாட்டார்கள்!

தென் வியட்நாம் புரட்சி

தென் வியட்நாம் பிரதேசத்தில் ஒன்பது ஆண்டுகளாக ஆட்சி புரிந்து வந்த டீம் சர்க்கார் ராணுவப் புரட்சி மூலம் கவிழ்ந்தது பற்றி ஆச்சரியப்படுவதற்கோ, அனுதாபப்படுவதற்கோ எதுவும் இல்லை. வட வியட்நாமின் கம்யூனிஸ்டு ஆதிக்கத்தை மேலும் விஸ்தரிக்க விடாமல் கட்டுப்படுத்த முயன்றதற்காகவும், சீட்டோ ராணுவக் கூட்டு அணியில் சேர்ந்துள்ளது என்பதற்காகவும், அமெரிக்காவின் ஆதரவையும் பொருள் உதவியையும் தென் வியட்நாமின் டீம் சர்க்கார் பெற்றிருந்தது. அமெரிக்க ராணுவமும் அங்கே வைக்கப்பட்டிருந்தது. ஆனால் டீம் தமது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எதையுமே எடுக்கவில்லை. நல்ல ஆட்சி என்பதில் அவருக்கு நம்பிக்கையே இல்லை. மக்களுடைய நலன் என்பது அரசு ஒச்சும் எவருக்கும் முதல் கவலை என்ற அரிச்சுவடியையே அவர் உணரவில்லை. இதனால் நாட்டின் பல பகுதி மக்களின் ஆதரவைப் படிப்படியாக இழந்து வந்தார். ஜனநாயக ஆட்சிக்குப் பதிலாக, அவர் தமது சகோதரர், அவருடைய மனைவி இவ்விருவருடைய துணைகொண்டு சர்வாதிகார ஆட்சிதான் நடத்தி வந்தார். இத்தகைய அரசாட்சியில் காணும் சுயநலம், கொடுங்கோன்மை, கலகங்கள், ஊழல்கள் முதலிய யாவும் தென் வியட்நாமில் தலைவிரித்தாடின.

புத்த மதத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்துப் பல புத்த சந்நியாசிகள் தீக்குளித்த பின்னரும், அமெரிக்க ஜனாதிபதி அமெரிக்க உதவியைக்கூட நிறுத்தி வைத்து எச்சரிக்கை செய்த பின்னரும், டீம் தமது போக்கை மாற்றிக் கொள்ளாமல் எல்லோருடைய வெறுப்பையும் தேடிக் கொண்டார். இத்தகைய ஓர் அரசு வீழ்ந்தது ஆச்சரியமில்லை.

ராணுவத் தலைவர்கள் அரசைக் கைப்பற்றிக் கொண்டு விட்டால் மட்டும் நாட்டுக்கு நலன் கிடைத்து விடாது. நல்லாட்சி புரிய வகை செய்ய வேண்டுவது அவசியம். கம்யூனிஸ்டுகளின் ஊடுருவலிலிருந்தும் நாட்டைக் காக்க வேண்டும். மக்களுடைய நலனைப் புறக்கணித்தால் எந்த அரசும் நீடித்து நிலைக்காது. ஜனநாயகம் என்பது வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட வேண்டிய அமைப்பு. இதுதான் நமது அரசாங்கம் தென் வியட்நாம் புரட்சியிலிருந்து பெறவேண்டிய படிப்பினை.



என்ன சேதி?


தட்சிண யூனியன்

பிரிவினைக் கோரிக்கையை விட்டு விட்டுத் திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது நல்ல பாதையில் மேலும் ஓர் அடி வைத்திருக்கிறது. தென் ராஜ்யங்கள் ஒன்ருகச் சேர்ந்து மத்திய அரசிடமிருந்து அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்ற புது கோரிக்கையைத் தி. மு. க. வலியுறுத்தப் போகிறதாகத் தீர்மானம் செய்திருக்கிறது. ராஜ்ய சர்க்கார்கள் இன்று உள்ள ஈன நிலை பற்றி ராஜாஜி நீண்ட காலமாகக் குறிப்பிட்டு வந்திருக்கிருர். அதேபோல் மொழிவாரி மாகாணம் தோன்றிய போதே, இதற்குப் பதிலாகப் பல ராஜ்யங்கள் கொண்ட மண்டலங்கள் ஏற்பட வேண்டும் எனக் கூறி வந்தார். அதிர்ஷ்டவசமாக இன்று ஆந்திரத்திலும், கர்நாடகத்திலும், கேரளத்திலும் வடக்கு – தெற்கு என்கிற வெறுப் புணர்ச்சி இல்லை. இவற்றுடன் நெருக்கம் கொள்வது தமிழகத்துக்கு நன்மையே விளைவிக்கும்.

பதவி ஆசை போக வழி

பதவிப் பித்து ஒழிவதற்கு உற்ற விதத்தில் காங்கிரஸின் சாஸனத்தை மாற்ற வேண்டும் என்று கட்சி அங்கத்தினர் ஒருவர் ஜயபுரி மகாநாட்டில் கோரினுராம். உண்மை நிலையை வெளியிட்ட அவரைப் பாராட்ட வேண்டும். எனினும் இந்தத் தீமைக்கு நிவாரணம் கட்சியின் சாஸனத்தைத் திருத்துவதில் இல்லை. ஆட்சியாளர்களின் அதிகாரம் பெருகி, அவர்கள் பல விதங்களில் தங்கள் சுய முன்னேற்றத்தைப் பெற உதவுவது இன்றைய ஆட்சி முறை. இதனுல் பதவி வகிப்பதில் உள்ள கடமைச் சுமையை விட, அதனுல் பெறக் கூடிய சுய நன்மைகளே முன் நிற்கின்றன. இந்த அக்கிரம நன்மைகளை முன்விட்டே ஆளும் கட்சியினர் பதவிக்கா

ஊர் வம்பு



வாகை சூடிய மாணவர்

விம்பிள்டன் டென்னிஸ் போட்டி நடந்து கொண்டிருந்தபோது எல்லோரும் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர் எமர்ஸனே இந்த வருடம் விம்பிள்டனில் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்த்தனர். பத்திரிகைகளும் அவரே ஜயமடைவார் என்று ஜோசியம் கூறின. இந்தச் சமயத்தில் யாரும் எதிர்பாராத வண்ணம் இருபத்திரண்டே வயதுள்ள அமெரிக்க டென்னிஸ் ஆட்டக்காரர் மெக்கென்னி வெற்றி



பெற்றது அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தியது. 1955ம் வருடம் அமெரிக்க ஆட்டக்காரர் டோனி டிராபர்ட் விம்பிள்டனில் வெற்றி பெற்ற பிறகு மெக்கன்னியே இந்த வருடம் அமெரிக்காவுக்கு இந்தப் புகழைத் தேடிக் கொடுத்திருக்கிறார். டெக்ஸாஸிலுள்ள கல்லூரியொன்றில் பயிலும் மெக்கென்னிக்கு இவ்வளவு இளவயதிலேயே இந்தக் கிடைத்தற்கரிய பரிசு கிடைத்தது அதிர்ஷ்டம்தான்.

தற்பொழுது விம்பிள்டன் வெற்றி வீரர் மெக்கென்னியோடு வந்துள்ள அமெரிக்கக் கோஷ்டியினர் பம்பாயில் நவம்பர் 2, 3, 4 தேதிகளில் டேவிஸ் கோப்பைக்காக இந்தியக் கோஷ்டியினரோடு ஆடி எல்லா ஆட்டங்களிலும் வெற்றி பெற்றது அவர்களது திறமையை எடுத்துக் காட்டியது.

பம்பாய் வரையில் வந்த அமெரிக்க டென்னிஸ் ஆட்டக்காரர்களைச் சென்னைக்கு இழுக்காமல் இருப்பார்களா, சென்னை டென்னிஸ் சங்கத்தார்? அவர்கள் பெரு முயற்சி செய்து, அமெரிக்க ஆட்டக்காரர்களைச் சென்னைக்கு ஆட அழைத்து வந்து விட்டனர். விம்பிள்டன் வெற்றிவீரருக்கு எதிராக ஆடும் திறமை மிக்கவர் நம் தேசிய விளையாட்டு வீரர் கிருஷ்ணன்தானே? சென்னை எழும்பூர் ஸ்டேடியத்தில் நடந்த மெக்கென்னி — கிருஷ்ணன் தனியர் ஆட்டம் ரஸிகர்களுக்கு ஓர் அரிய விருந்தாக அமைந்தது. அன்று அமெரிக்க டென்னிஸ் கலைஞர்களுக்கும் திரு கிருஷ்ணனுக்கும் தென்னாட்டுக் கலைச் செல்வமான நடராஜர் சிலைகளைப் பரிசளித்தது மிகப் பொருத்தமாக இருந்தது.

கத் தங்களுக்குள் பூசலிட்டுக் கொள்கிறார்கள். பதவிப் பித்தும் பூசலும் குறைய வேண்டுமானால் அரசாங்கத்தின் அதிகாரம் குறைய வேண்டும். அதாவது, காங்கிரஸின் சோஷலிஸத்துக்குப் பதில், 'அரசாங்கம் குறைந்தபட்ச அதிகாரத்தையே செலுத்த வேண்டும்; மக்கள் அதிகபட்ச சுதந்திரத்தை அநுபவிக்க வேண்டும்' என்ற காந்திஜியின் கொள்கை நிலைபெற வேண்டும்.

பட்நாயக்கின் ஓலம்

"முதலாளிகளிடம் சுமார் முந்நூறு கோடி ரூபாய் கறுப்புப் பணமாக ஒளிந்து கொண்டிருக்கிறது" என்று ஸ்ரீ பட்நாயக் மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கிறார். இப்படிப் பேசுகிறவர் எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை மக்கள் அறிவார்கள்.

இப்படிக் கறுப்புப் பணம் குவியவும், வெளியிட முடியாதபடி தேக்கி வைக்கவும் உதவுகிற நிலையை உண்டாக்கியதே இந்தக் காங்கிரஸின் பெர்மிட்—லைசென்ஸ்—கோட்டா ஆட்சி முறைதானே? உதாரணமாகச் சிமிட்டி வியாபாரத்தைப் பார்ப்போம்.

ஒரு மூட்டை சிமிட்டி வாங்க விரும்புகிறவர்களுக்குச் சர்க்கார் உண்டாக்கும் தொல்லைகளும் கட்டுத் திட்டங்களும் சொல்லி முடியாது. இதைச் சகிக்காமல் நடுத்தர வகுப்பார் இருமடங்கு விலை கொடுத்துக் கறுப்பு மார்க்கெட்டில் சிமிட்டி வாங்குகிறார்கள். ஆனால் வியாபாரி கணக்கில் காட்டுவது கண்ட்ரோல் விலைதான். அதிகப்படியாக வாங்கிய பணம் கணக்கில் வராமலே நிற்கிறது.

பலர், தேவைக்கு அதிகமாகவே மனுச் செய்கிறார்கள். சர்க்கார் பெர்மிட் வந்ததும், தங்களுக்குத் தேவையான அளவு மட்டும் வாங்கிக் கொண்டு அதிகப்படியான கோட்டாவைக் கறுப்பு மார்க்கெட்டில் விற்கிறார்கள். அந்தக் கறுப்புப் பணத்தை எப்படிக் கணக்கில் கொண்டு வருவது? சர்க்காரின் பெர்மிட் — லைசென்ஸ் முறை ஏழைகள், பணக்காரர்கள், வாங்குவோர், விற்போர் யாவரையுமே நியாயத்துக்கும் தர்மத்துக்கும் நேர்மைக்கும் மாறாக வாழும்படி வற்புறுத்துகிறது. இப்படி எங்கும் பொய்ம்மையை வளர்த்து விட்டு, அதில் தங்களுக்குப் பங்கில்லை போல் சமுதாயத்தில் ஒரு சாராரைக் குற்றம் சாட்டினால் மக்கள் ஏற்க மாட்டார்கள்.

ஜிபுணி குபேரன் செட்டியார்

குபேரன் செட்டியார் பெரிய அரிசி வியாபாரி. சமயாசார வாழ்க்கையில் ஒரு குறையுமில்லை. ஆனால் மகா லோபி — யாருக்கும் எந்தக் கஷ்டத்திலும் உதவ மாட்டார். பிச்சைக்காரர்கள் அவர் வீட்டுப் பக்கம் போவதை விட்டுவிட்டார்கள். அவருடைய மகன் கொஞ்சம் செலவாளித்தனம் காட்டினான். உடனே அவனை வேறே வைத்துவிட்டுத் தம் வியாபாரத்திலாவது வீட்டிலாவது நுழைய அவனுக்கு இடமில்லாமல் செய்துவிட்டார்.

குபேரன் செட்டியார் வியாபாரத்தில் மிக சாமர்த்தியசாலி. ஒரு ரூபாய்ப் பண்டத்தைப் பதினைந்து அணாவுக்கு வாங்கவும், ஒன்றேகால் ரூபாய்க்கு விற்கவும் நன்றாகப் பயின்றவர்.

ஃ ஃ ஃ

இப்படியே முப்பது ஆண்டுகள் கழித்தார். திடீரென்று கழுத்தில் பின்புறம் ஒரு கட்டி தோன்றி வரவரப் பெரிதாகி அபாய நிலை அடைந்தது. டாக்டர்களைக் கூப்பிடாமல் ஏதோ பட்டும் ஒத்தடமும் போட்டுப் பார்த்து ஒன்றுக்கும் கேட்கவில்லை. முடிவில் டாக்டர் வைத்தியநாதய்யரை வரச் சொல்லி அனுப்பினார்.

வைத்தியநாதய்யரும் அவருடைய சிஷ்யர் டாக்டர் ராமலிங்கமும் வந்தார்கள். இரண்டு பேர் வந்ததைப் பார்த்துச் செட்டியார் பயந்தார். "இரண்டு டாக்டர்களை ஏன் வரவழைத்தீர்கள்?" என்று மகளைக் கேட்டார்.

மகள் சிறு வயதில் விதவையாகித் தகப்பனார் வீட்டிலேயே இருந்து கொண்டு எல்லா வீட்டுக் காரியங்களையும் பார்த்து வந்தாள். மருமகன் சொத்தும் செட்டியாருக்குச் சேர்ந்தது.

"அவர் வேறே டாக்டர் அல்ல. பெரியவருடன் இவர் கூடவே இருந்து வருகிறார்" என்று சொல்லக் கேட்டதும் செட்டியார் சமாதானமானார்.

சோதனை செய்து பார்த்துவிட்டு டாக்டர் வைத்தியநாதய்யர், "இது இனி மருந்துக்கு வணங்காது. சஸ்திர வைத்தியம்தான் பார்க்க வேண்டும்" என்றார்.

"கத்தி போட்டு அறுக்க வேண்டும் என்கிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆமாம்! ஆனால் அது நான் செய்ய முடியாது. இதோ இருக்கிறாரே இவர் அமெரிக்காவில் படித்து விட்டுத் திரும்பியவர். நல்ல



ராஜாஜி

கெட்டிக்காரரர். இவர் எல்லாம் செய்வார்'' என்ருர்.

'' மகனுடன் பேசுங்கள் '' என்ருர்.

மயக்க மருந்து கொடுத்துத் தான் கட்டியை அறுக்க வேண்டும் என்று முடிவு செய்து மறு நாள் ஆபரேஷன் செய்து விட ஏற்பாடுகள் முடித்தார்கள்.

ஃ ஃ ஃ

அன்றிரவு குபேரன் செட்டியார் மகன் சுப்பையா செட்டியார் டாக்டர் ராம லிங்கம் வீட்டில்வந்து அரை மணி நேரம் டாக்டர் வீடு வந்து சேரும் வரையில் காத்திருந்தார்.



ஒரு ஊசி குத்த வேண்டும் என்று தனக் கிருந்த வியாதியை விளக்கி இஞ்ஜக்ஷன் செய்துகொண்ட பின், ''டாக்டர்வாள்! உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண் டும்'' என்றார். பிறகு கால் மணி நேரம் தனி அறையில் பேச்சு நடந்தது.

''ஒன்றும் பயமில்லை. செட்டியா ருக்கு வயது கொஞ்சம் அதிகமாகத் தான் ஆகியிருக்கிறது. ஆயினும் பய மில்லை. நீரில் கொஞ்சம் சர்க்கரை இருந்தாலும் அதனால் பாதகமில்லை. எல்லாம் சரியாகப் பார்த்துக்கொள் வோம்'' என்றார் ராமலிங்கம்.

''அவருடைய கடுஞ் செட்டைக் கண்டு பயப்பட வேண்டாம். கொடுக்க வேண்டிய பீஸ் எல்லாம் நானும் அக்கா வும் பார்த்துக் கொள்வோம். செட்டி யாருக்கு விஷயம் தெரிய வேண்டிய தில்லை'' என்றார்.

''கடுஞ் செட்டுக்கு ஒரு ரகசிய மருந்து அமெரிக்காவில் கண்டுபிடித் திருக்கிறார்கள். அது இந்த ஊரில் வேறு யாருக்கும் தெரியாது. மண்டை ஓட்டைக் கொஞ்சம் திறந்து செய்ய வேண்டிய பரம ரகசியச் சிகிச்சை உண்டு. அதை வேண்டுமானால் நான் செய்து பார்க்கிறேன் என்ன சொல் கிறீர்கள்?'' என்று கேட்டார் டாக்டர் ராமலிங்கம்.

''அப்படியும் ஒரு அற்புதச் சிகிச்சை இருக்கிறதா? எனக்கு நம்பிக்கை இல்லை'' என்றார் சுப்பையா.

''புது வைத்திய ஆராய்ச்சிகள் டாக்டர்களுக்கே அநேகம் பேருக்குத் தெரியாது. உமக்கு எங்கே தெரியப் போகிறது?'' என்றார் டாக்டர் ராம லிங்கம்.

''உண்மையா அல்லது கேலி செய்கிறீர்களா?'' என்று சுப்பையா மிக ஆவலாகக் கேட்டார்.

''உண்மை, உண்மை. நீர் சம்ம தித்தால் அந்தச் சிகிச்சையைக் கட்டி அறுத்துக் கட்டும்போதே செய்துவிட லாம். என்ன சொல்கிறீர்?'' என்றார்.

''மனிதனுடைய சுபாவமே மாறிப் போகுமா?'' என்றார் சுப்பையா ஆச்சரியப்பட்டு.

ஃ ஃ ஃ

முடிவில் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ''ரகசிய சிகிச்சை செய்யுங்கள். வெற்றி பெற்றால்—''

''சந்தேகமென்ன வெற்றி நிச்சயம்!'' என்றார் ராமலிங்கம்.

''அப்படியானால் உங்களுக்கு ஆயிரம் ரூபாய் தனிப் பரிசு கொடுப்பேன்'' என்றார் சுப்பையா.

ஃ ஃ ஃ

ஆபரேஷன் நடந்தது. சுப்பையா வும் டாக்டரும் மறு நாள் சந்தித் தார்கள்.

''காரியம் முடிந்தது. விஷயம் சீக் கிரம் தெரியும்'' என்றார் ராமலிங்கம். ஒரு மாதம் படுக்கையில் இருந்தார் குபேரன் செட்டியார்.

மகளிடம் பேசும்போது செட்டியார் கண்களில் நீர் வழியும். ''என் வாழ்க் கையைக் கெடுத்துக் கொண்டேன். எனக்காக நீ வெங்கடேசப் பெருமானுக் குப் பிரார்த்தனை முடிகட்டி வைத்து மலைக்குப் போய் வா'' என்றார்.

சொஸ்தப்பட்டதும் மகன் சுப்பையா வுக்குச் சொல்லியனுப்பி, ''அப்பனே! நீ வீட்டுக்கு வா! இனி வேறே இருக்க வேண்டாம். நான் ஏதோ கோபத்தில் அப்படிச் செய்துவிட்டேன்'' என்றார்.

ஃ ஃ ஃ

பிச்சைக்காரர்கள் எல்லாம் வியந் தார்கள். ''செட்டியாருக்கு வியாதி வந்து சொஸ்தமானதும் ஞானோதய மாய்விட்டது'' என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள். சனிக்கிழமை தோறும் செட்டியார் வீட்டில் ஏழைக் கும்பல் சேர்ந்துவிடும். எல்லாரும் சந் தோஷமாகத் திரும்புவார்கள்.

செட்டியாருக்குப் பல ஏழை பந் துக்கள். ''இதுவென்ன ஆச்சரியம்! இப்படி மனம் மாறி விட்டதை நாம் பார்த்ததில்லை'' என்று அவர்களும் வியந்தார்கள்.

'குபேரன் செட்டியார் தருமப் பள்ளிக் கூடம்', 'குபேரன் செட்டியார் பிரஸவ விடுதி', 'குபேரன் செட்டியார் சத்தி ரம்' இவையெல்லாம் உண்டானது இதன் பிறகுதான்.

ஃ ஃ ஃ

இந்த வியப்பான சம்பவம் ஊரெல் லாம் பேச்சு. ஆனால் கூடவே வேறொரு மாறுதலும் நடந்தது. குமாரர் சுப்பையா செட்டியார் மிகவும் லோபி யாக மாறிவிட்டார். ''இப்படியெல் லாம் சொத்து செலவழிந்துபோனால் நமக்கு என்ன பிறகு கதி?'' என்று சகோதரியும் சகோதரனும் அடிக்கடி பேசி வந்தார்கள்.

இந்த ஊதாரித்தனத்தை எப்படி யாவது நிறுத்த வேண்டும் என்று இருவ ரும் தகப்பனாரைப் பல முறை தடுத்துச் சண்டை பிடிக்க ஆரம்பித்தார்கள்.

ஆண்டவன் விளையாட்டே விளை யாட்டு.

ஃ ஃ ஃ

ஆண்டவன் அருளோ டாக்டர் ராமலிங்கம் அவர்களின் வைத்தியமோ குபேரன் செட்டியார் முற்றிலும் மன மாற்றம் அடைந்து விட்டார். ஆயி னும் யாரோ கன்னடியர் கொடுத்த பெயர் ஜிபுணி குபேரன் செட்டியார் என்பது எவ்வளவு தருமங்களைச் செய்த பின்னும் வழக்கத்தில் இருந்து கொண்டே யிருந்தது.



அவர்: என்ன பாம்கார ஐயா! கங்கா ஸ்நானம் ஆச்சா?

அவன்: நீங்க ஒண்ணு! முதல்லே பாலுக்குத் தான் கங்கா ஸ்நானம் ஆகியிருக்கும்.....!



★

''என்ன ஸார்! தீபாவளிப் பட்டாசு, பட்சண வகைகளோடு மாப்பிள்ளைக்கு ஒரு பாட்டில் வைத்திருக்கிறதே, அது என்ன?''

''உங்களுக்குத் தெரியாதா? மாமனார் டாக்டர். மாப்பிள்ளைக்கு முன் கூட்டியே அஜீர்ண மருந்தும் ஒரு பாட்டில் தீபாவளிப் பரிசாக வைத்திருக்கிறார்.''



கலோசனுவுடைய நாத்தனுருக்குத் தலைதீபாவளி. அதனுல் கலோவைத் தீபாவளிக்குப் பிறந்தகம் அனுப்பவில்லை. பக்கத்து வீட்டுப் பங்கஜம் வந்து கலோவைத் துக்கம் விசாரித்தாள். ''நாத்தனுருக்குத்தலை தீபாவளின்னு வேலை எக்கச் சக்கமாயிருக்



கும்! ரொம்ப சிரமம்'' என்று பரிதாபப் பட்டாள்.

''அதை ஏன், கேட்கிருய்! இன்னைக்குப் பாரு, மாமியார் பண்ணின சீடையிலே மாதிரிக்கு இரண்டு எடுத்து வாயில் போட்டுண்டுமென்றுபார்த்து உப்பு ஜாஸ்தின்னு நான்தான் சொல்ல வேண்டியிருந்தது!'' என்ற கலோ உழைத்த சிரமம் தீரப் பெருமூச்செறிந்தாள்.

கோபு ஒற்றை வெடியைக் கொளுத்தி விட்டு இப்பால் ஓடி வந்தான். அப்போது காலிடறி விழுந்து முழங்காலில் நன்ருகச் சிராய்த்து விட்டது. நண்பன் மோகன் ஆச்சரியத்துடன், ''ஏண்டா! முழங்காலில் ரத்தம் வருதே, வலிக்கலேயா?'' என்றான்.



''ஏன், வலிக்கலே? பார்த்துக் கொண்டே இரு. இந்தப் பட்டாசுகளை யெல்லாம் கட்டுத் தீர்த்தானதும் வீடு இரண்டாகிற மாதிரியாகக் கதறி அழப் போகிறேன்!'' என்று பதில் கிடைத்தது.

மாமனுர் வீட்டில் புது மாப்பிள்ளைக்குத்தான் சகல மரியாதைகளும் உபசாரங்களும் தடபுடலாக நடப்பதைக் கண்டான் மூத்த மாப்பிள்ளை ரகுராமன். தன்னைக் கவனிப்பாரில்லை என்பதாக மனைவி மோகத்திடம் குறைப்பட்டுக் கொண்டான் அவன்.



''இதோ, பாருங்க! உங்களை வரச்சொல்லி எழுதினதற்கே இப்போ நான் அப்பா அம்மாவுக்குச் சமாதானம் சொல்லியாகணும். இந்தச் சமயத்திலே நீங்கள் புதுப் பிரச்னை எதையும் கிளப்பாதீங்க!'' என்ருள் மோகம்.



''தீபாவளியும் அதுவுமா எப்படி சந்தோஷமா யிருக்கேன்!''


''என் நகப்பனுர் காலமாகித் தீபாவளி கிடையாது! அது சரி! நீர் ஏன் துக்கத்தில் மூழ்கியிருக்கிறீர்?''


''என் பெண்ணுக்குத் தலைதீபாவளி சார்!''

★

''மாமி! மத்தாப்பூவை அந்தப் பொண்ணு தலையிலே வைச்சுண்டு போருள் பார்த்தேளா!''







தீபாவளி பட்ஜெட்



"அப்பாவுக்கு ரூ. 25; அம்மாவுக்கும் அலமுவுக்கும் வித்தியாசம் இருக்கக் கூடாது. ஆனுக்கு 50(×2)100; அடியேனுக்கு ரூ. 25; குழந்தைகள்: கீதா ரூ. 15; ரமேஷ் ரூ. 15 ஆக மொத்தம் ரூ. 180.

"போனஸ் ரூ. 200. பாக்கி ரூ. 20 அது பட்சணம் பட்டாசு வகையறாவுக்கு" என்று கணக்குப் போட்டு வைத்தான் ராமண்ணு. ஆனல் அவன் அம்மாவே நூறு ரூபாய்க்குப் புடவை ஒன்று எடுத்துக்கொண்டுவிட்டாள். அலமு நல்லவள்; குறைப்பட்டுக் கொள்ளவில்லை. பதினைஞ்சு இருபது ரூபாயிலே ஒரு புடவை எடுத்துண்டு வாங்கோ. எனக்குப் போதும்" என்று கூறி விட்டாள். மறுநாள் தன் மனைவிக்கு எண்பது எண்பத்தைந்து ரூபாயிலே நல்ல பட்டுப் புடவையாக வாங்கி வந்தான் ராமண்ணு. நண்பன் ஒருவனிடம் கடன் வாங்கியதாகச் சொன்னன்.

"கடன் வாங்கித் தீபாவளியைக் கல்யாணமாக நடத்த வேண்ணு என்ன?" என்று பொரிந்து தள்ளிவிட்டுப் போனுள் அவன் தாயார்.

அவள் அப்பால் போன பிறகு இனியும் ரகசியத்தை உள்ளடக்கிக் கொள்ளமுடியாதவனய், "ஆபீசில் கொடுத்தது இரண்டு மாச போனஸ்! இன்னும் நூறு ரூபாய் பாக்கி இருக்கு!" என்றுன் ராமண்ணு. "ஒரு கைக் கடிகாரம் வாங்கிக் கட்டிக் கொள்ளுங்கள்" என்றுள் அன்பு மனைவி.

"அதை வாங்கிக் கட்டிக் கொள்ளுவதற்கு முன்னுல் முதலில் உன்னை......" என்று கூறுமுன்னரே அலமு முகம் சிவக்க உள்ளே ஓடி விட்டாள்!

★



"அடியே! மாப்பிள்ளைக்குக் கடிதம் எழுதறேன், தீபாவளியும் அதுவுமா இங்கே ஒரே காலராவும் டைபாயிடுமா இருக்குன்னு."

"இந்தாங்கோ, பக்கத்து வீட்டு வானரங்கள் எல்லாம் பட்டாசைப் பார்த்து விட்டால் போட்டிக்கு வரும். அதுகள் கண்ணிலே காட்டாமல் கொல்லைப் பக்கத்திலே குழந்தைகளை வைச்சுண்டு ஓசைப்படாமல் வெடிச்சுடுங்கோ!"



"சே! சே! பெண் மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டுமென்று துடித்தாள். மாப்பிள்ளை, பெண்ணைப்பார்க்கவேண்டுமென்று துடிச்சார். கடைசியிலே பார்த்துக்கொள்ள வெளிச்சத்துக்கு வரவேண்டாமோ?"



"எங்க வீட்டிலே நாட்டுப் பெண்ணுக்கு வாங்குறதைத்தான் எல்லாருக்கும் வாங்குறது பழக்கம்."


"இந்தத் தடவை நாட்டுப் பெண்ணுக்கு என்ன வாங்கினீர்கள்?"

"ஒண்ணும் வாங்கல்லே!"





இவர்களுக் கெல்லாம் அதிகமா தீபாவளி இனாம் கொடுக்காதீங்கோ என்று அப்பவே நான் சொன்னேன், கேட்டீங்களா?
சாமா
என்னதானிருந்தாலும் என் கைப்பட தண்ணீர் ஊற்றுகிறது மாதிரி ஆகுங்களா?
கழுதை மகத்தா காரியம் நடக்காமல் போயிடுங்களா! உங்களது 'அர்ஜண்ட்' வேலை யாச்சுங்களா!
இரண்டே நிமிஷத்திலே உங்களை ஸ்டேஷனிலே கொண்டுபோய் விட்டுடறேன். கவலைப்படாதீங்க!
இலுப்பச் சட்டியிலே இன்னிக்கு நீங்க ஒரு அப்பழுக்கு பார்க்க முடியாதுங்க!
மலைக்காதீங்கோ! சாதம் புஷ்பமாயிருக்கு!
தீபாவளிச் செலவுக்கு ஏதோ வாங்கணும் என்றீர்களே! அதுக்காக இவரை அழைத்து வந்துட்டேன்,





"ஆகாயக் கலர் புடவை வேணுமா?"

"அந்தக் கலர் என்கிட்டம் இருக்கே!"

"சரி, இந்தப் புது இங்கிலீஷ் கலர்?"

"அதுவும் இருக்கே!"

"இந்த வெளிர் நீலம்? இந்தப் பாசிப் பச்சை... 'பிங்க்' மத்தாப்புக் கலர்..... இதெல்லாம்.....?"

"இதெல்லாம் என்கிட்டே இருக்கே!"

"அப்படின்னு உங்ககிட்டே எதுதான் இல்லே?"

"பணம்!"

★

"நெக்லஸ் வாணம் புதுசா வந்திருக்கிறது, வேணுங்களா?"

"வேண்டாமய்யா! அதை நான் யார் கழுத்தில் கட்டி வெடிக்கிறது?"

★

செட்டியார் ஜவுளிக் கடையில் பலர் தீபாவளி ஜவுளி வாங்கிக் கொண்டிருந்தனர். ஓர் அம்மாள் நூல் புடவையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டபோது செட்டியார், "அம்மா! தீபாவளிக்குப் பட்டுப் புடவை எடுத்துக்கிடுங்க! அதுதான் நீண்ட நாள் உழைக்கும்" என்றார்.



இன்னோர் அம்மாள் விலையுயர்ந்த பட்டுப் புடவைகளைப் பரிசீலித்துக் கொண்டிருந்தபோது செட்டியார் அவளை நெருங்கி, "விலைவாசி யெல்லாம் ஏறிப் போய்க் கிடக்கு. நூல் புடவை எடுத்துக்கிடறது தான் நல்லது!" என்றார்.

"என்ன செட்டியார்வாள்! எங்களுக்கெல்லாம் பட்டுப் புடவை சிபாரிசு செய்தீர்கள். அந்த அம்மாளுக்கு மட்டும் நூல் புடவை எடுத்துக் கொள்ளச் சொல்றீங்களே! இது நியாயமா?" என்று கேட்டாள் முந்தின அம்மாள்.

"அதுவா? அவங்க என் சம்சாரம். இந்த விலைவாசியிலே அவங்களுக்குப் பட்டுப்புடவை கட்டி வருமா?" என்று கூறி நகைத்தார் செட்டியார்.

★

சபேசன் தலைதீபாவளிக்கு வருமாறு மாப்பிள்ளைக்குக் கடிதம் எழுதி அழைத்தார். "பெண்ணுக்குக் கலியாணத்தின் போதே, காசு மாலை போடுவதாய்ச் சொன்னீர்கள். பதினாறு காரட்டிலாவது செய்ய வேணும்" என்று நினைவூட்டிச் சம்பந்தியிடமிருந்து பதில் வந்தது. "செய்து போடுகிறேன்" என்று பதில் எழுது முன்னால் கடன் வாங்கினார் சபேசன். பிறகு, தலைதீபாவளி கொண்டாடும் வகையில் மாப்பிள்ளைக்குச் செய்ய வேண்டிய சீர்வகைகள் பற்றிப் பட்டியல் ஒன்று தபாலில் வந்தது. "கடிதம் படித்தேன். சீர் வரிசைகள் எல்லாம் தயார்; உடனே கிளம்பி வரவும்!" என்று எழுதி விட்டு இன்னும் கொஞ்சம் கடன் வாங்கக் கிளம்பினார் சபேசன்.

அவர் கூறியபடியே எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டு ஸ்டேஷனுக்குப் போய்ச் சம்பந்திமார்களை அழைத்து வர டாக்ஸியில் ஏறினார் சபேசன்.

"எங்கே சார் போகணும்?" என்றான் டாக்ஸி டிரைவர்.

"மேல் லோகத்துக்கு" என்று ஏதோ ஞாபகமாய்ப் பதிலளித்தார் சபேசன்.



உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இதனை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹேயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-I சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ், பீசாம் (இந்தியா) பிரை. லிட்., பீசாம் ஹவுஸ், மாஹிம், பம்பாய்—16.



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாதகால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்


உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin

சில்விக்ரீன் – கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/6/63



32

திருமாலின் கையிலே இருக்கிற சக்கரத்தினுடைய ஜோதியைக் கண்டு சூரியன் என்று எண்ணி நாபிக்கமலம் மலர்கிறதாம்! அடுத்த கணம் வெண் சங்கத்தைக் கண்டு சந்திரன் என்று எண்ணிக் குவிகிறதாம்!

ஆங்கு மலரும்
குவியுமால் உந்திவாய்
ஓங்கு கமலத்தின்
ஒண்போது —

[மலரும்—இதழ் விரியும். குவியும்—இதழ் மூடும். மால்—திருமாலின். உந்திவாய்—நாபியிலே. ஓங்கு—எழுந்து நிற்கிற. கமலத்தின் ஒண்போது—அழகிய தாமரை மலர். போது—மலர். ஒண்போது—அழகிய மலர்.]

— ஆங்கைத்
திகிரி சுடர் என்றும்
வெண்சங்கம் வானில்
பகரும் மதி என்றும்
பார்த்து!

[ஆங்கைத் திகிரி—அழகிய கையிலேயுள்ள சக்கரத்தை. சுடர் என்றும்—சூரியன் என்றும். வெண் சங்கம்—வெண்மையான சங்கினை. வானில் பகரும்—ஆகாயத்தில் ஒளி வீசுகிற. மதி என்றும் பார்த்து—சந்திரன் என்றும் ஏமாற்றம் அடைந்து.]


சக்கரமாகிய சூரியனையும், வெண் சங்கமாகிய சந்திரனையும் கண்டு, திருமாலின் நாபியிலே தோன்றிய கமலம் மலர்ந்தும் குவிந்தும் மாறி மாறி விளங்குவதாகக் கவியின் கற்பனை! திருமாலின் அங்க சௌந்தரியத்தில் இவ்வாறு மூழ்கிக் களிக்கிறார் ஆழ்வார்.

ஆங்கு மலரும்
குவியும்மால் உந்திவாய்
ஓங்கு கமலத்தின்
ஒண்போது — ஆங்கைத்
திகிரி சுடர் என்றும்
வெண்சங்கம் வானில்
பகரும் மதியென்றும்
பார்த்து!

கலை வளர்க்கும் கோயில்கள்

ஊர்ஹீஸ் கல்லூரி





மேலே: கல்லூரி முதல்வர் டாக்டர் ஏ. என். கோபால்.
கீழே: பௌதிகப் பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்கள்.

மன்னன் இல்லாத கோட்டையும் மூர்த்தி இல்லாத கோயிலும் வேலூரின் தனிச் சிறப்புக்கள் என்று பழைய தலைமுறைகளில் வேலூர்த் தல புராணம் சொல்பவர்கள் உண்டு. ஆனால் கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளாகவே இன்றைய மாணவர்களிலிருந்து இந்த நாட்டின் வருங்கால மன்னர்களை உருவாக்கும் நற்பணியை ஒரு கலைமகளின் திருக்கோயில் கீர்த்தியுடன் வேலூரில் செய்து வருகிறது என்பதை இந்தத் தலைமுறைப் புராணிகர்கள் சொல்லாத போனாலும் ஒப்புக் கொண்டு தானாக வேண்டும். ஊர்ஹீஸ் கல்லூரிதான் அந்தத் திருக்கோயில்.

ஜனநாயக யுகத்தில் மன்னர்கள் உண்டா என்ற கேள்வி எழலாம். ஜனநாயகத்துக்குப் பொறுப்பேற்ற பிரதிநிதியாக விளங்கும் ஜனாதிபதியும் பழங்கால சம்பிரதாய முறையில் நாட்டின் நல்வாழ்வின் பிரதிநிதியாக விளங்கும் மன்னனும் சமம் என்ற கருத்து அங்கீகரிக்கப்படுமானால் ஊர்ஹீஸ் கல்லூரி ஒரு மன்னனையே உருவாக்கி நாட்டுக்கு அளித்த பெருமைக்குப் பாத்திரமாகிறது. ஆம்! இன்றைய நவ பாரதத்தின் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் இந்தக் கல்லூரியில் படித்த மாணவர்! 1898ம் ஆண்டில் இக் கல்லூரி தோன்றிய போது அதற்கு இடப்பட்ட பெயர் ஆர்க்காடு மிஷன் கல்லூரிதான். தோன்றி ஏழு ஆண்டுகள் ஆன பிறகுதான் அதற்கு என்று ஒரு சொந்தக் கட்டடத்துக்கான அஸ்திவாரம் போடப்பட்டது. அந்த வேளை நல்ல வேளையாக இருக்க வேண்டும்! ஏனென்றால், அதே 1905ம் ஆண்டில்தான் ரால்ப் ஊர்ஹீஸ் என்னும் அமெரிக்கக் கனவான் இந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்காக இருபத்தையாயிரம் ரூபாய் நன்கொடையாக வாரி வழங்கினார். நன்றி மறவாத நிர்வாகம், கல்லூரிக்கே அந்த நன்கொடையாளரின் மனைவியாரின் பெயரைச் சூட்டி, எலிஸபெத் ஆர். ஊர்ஹீஸ் கல்லூரி என்று அழைக்கத் தொடங்கியது. இப்பொழுது ஊர்ஹீஸ் கல்லூரி என்று சுருங்கிவிட்டது.

கல்லூரி முதல்வர் டாக்டர் ஏ. என். கோபால் (ரெவரன்ட். டாக்டர் அபெர் வீ. என். கோபால்) சாந்தம் ததும்பத் தம் அறையில் உட்கார்ந்திருக்கிறார். வெளியில் சக்கைப்போடு போட்டுக் கொண்டிருக்கும் மழையோ, வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுமுன் பிற்பகல் இடைவேளையில் நிலவும் மாணவர்களின் சந்தடியோ முன்னாலிருக்கும் ஆபீஸ் அறையிலிருந்து ஒலிக்கும் டைப்ரைட்டர் ஓசையோ அவர் சிந்தனையையும் பொறுமையையும் கலைக்கக் கூடிய சக்தி வாய்ந்தவையாகத் தெரியவில்லை.

அவர் அறைக்குள் நுழைகிறோம். கனிவுடன் தலையை அசைத்து வரவேற்று அமரச் செய்கிறார்.

''எங்கள் கல்லூரி கடந்த அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாகவே வேலூர் மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றாகக் கலந்து விட்டது'' என்று ஆரம்பிக்கிறார்.

''இது பொது மக்களுக்கான கல்லூரி. அவர்களுடைய ஆசைகளுக்கும் பொருளாதாரத்துக்கும் எட்டக் கூடியது. பல மாணவர்களுக்குக் கானல் நீராக, அவர்களை விட்டுத் தள்ளித் தள்ளி உயரே போகும் சில 'மார்க்கு லட்சிய'க் கல்லூரிகளின் ரகத்தைச் சேர்ந்தது அல்ல'' என்னும் விஷயங்கள் அவருடைய முகவுரையிலிருந்தே ஊகிக்கக் கூடியவையாக இருக்கின்றன.

சமீப காலம் வரை இண்டர்மீடியட் வகுப்புக்கான வசதியுடன் கூடிய கல்லூரியாகத்தான் இருந்து வந்தது. மேலே படிக்க விரும்பிய மாணவர்களுக்கு வெளியூர் போகவேண்டிய நிர்ப்பந்தம். ஆனால் புகுமுக வகுப்பு முறை அமுலுக்கு வந்தவுடன் இந்தக் கல்லூரியின் தரத்தை உயர்த்தி மூன்று வருடப் பட்டப் படிப்பு வசதியையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பொருளாதாரம், கணிதம், பௌதிகம், உயிரியல் ஆகியவற்றைக் கற்று

நாட்டைக் காக்க நல்ல பயிற்சி பெற்று வரும் இளைய பாரதத்தினர்



பி. ஏ. அல்லது பி. எஸ்ஸி. பட்டம் பெற இங்கு வாய்ப்பு உண்டு.

சுமார் தொள்ளாயிரத்து முப்பது மாணவர்கள் படிக்கும் இக் கல்லூரியில் பெரும் பகுதியினர் புகுமுக வகுப்பு மாணவர்கள்தான். ஆறு பகுதிகளாக மொத்தம் ஐந்நூற்றுப் பத்து மாணவர்கள் அந்த வகுப்பில் படிக்கிறார்கள். இந்த ஆண்டு இந்த வகுப்புக்கு ஏகப்பட்ட கிராக்கியாம். நூற்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் இடம் கிடைக்காமல் ஏமாந்து திரும்ப வேண்டியதாயிற்று.

தேவையைப் பொறுத்துக் கட்டடமும் வளர்ச்சியடைந்து கொண்டு வருகிறது. 1944ம் ஆண்டில் நடந்த அபிவிருத்தியை ஒட்டி 1955ம் ஆண்டில் புது அசெம்பிளி மண்டபமும் எழுந்திருக்கிறது. ஹாஸ்டல் வசதிகளை அதிகப்படுத்த ஒரு புதிய பெரிய கட்டடத்தை எழுப்புவதற்கான திட்டமே தயாராக இருக்கிறது. பதின்மூன்று ஏக்கரா விஸ்தீரணமுள்ள இடத்தை வாங்கிப் போட்டிருக்கிறார்கள். அமெரிக்கக் கிறிஸ்துவ சங்க நிர்வாகிகளும் சென்னை அரசாங்கமும் சர்வகலாசாலை மான்யக் கமிஷனும் இதற்கான நிதி உதவி செய்ய முன் வந்திருக்கின்றன.

மேலும், நவீன வாசக சாலைக் கட்டடம், மாணவர்கள் பகல் நேரத்தில் ஓய்வு எடுத்துக் கொள்வதற்கான மண்டபம் முதலியவைகளை இன்றையத் தேவைக்கு ஏற்பப் பொதுமக்களின் தாராள மனப்பான்மையை நம்பி எதிர்பார்த்து, 'ஊர்ஹிஸ் கல்லூரி அபிவிருத்தி நிதி' ஒன்றைத் தொடங்கி யிருக்கிறார்கள்.


சமீப காலம் வரையில் இந்தக் கல்லூரியில் ஆண் பெண் இருபாலரும் கல்வி கற்க வசதியிருந்தது. ஆனால் காட்பாடி டவுன் எக்ஸ்டென்ஷன் பகுதியில் பெண்களுக்கு என்று ஆக்ஸிலியம் கல்லூரி திறக்கப்பட்டு விட்டதால், அந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் மாணவிகளை இந்தக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளச் சர்வ கலாசாலை அனுமதிப்பதில்லை. ஆக்ஸிலியம் கல்லூரியில் இல்லாத பட்டப் படிப்புக்கான பாடங்களை இந்தக் கல்லூரியில் எடுத்துப் படிக்கலாமாம்! ஏற்கனவே இரண்டு வருடங்களாகப் படித்து வரும் மாணவிகள் சுமார் இருபத்தி ஐந்துபேர்கள்தான் இங்கு தொடர்ந்து இந்த ஆண்டு படித்து வருகிறார்கள்.

ஆண்டு தோறும் இங்கு நடக்கும் முத்தமிழ்க் கலை விழா மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒருங்கே மகிழ்ச்சியளிக்கக் கூடிய நிகழ்ச்சியாம். இந்த ஆண்டில் நடந்த விழாவின் இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகப் பகுதிகளில் பல வெளிக் கலைஞர்களும் அறிஞர்களும் கலந்து கவி மழையும் சொல் மாரியும் பொழிந்து தள்ளினார்களாம். 'கடமை' என்ற நாடகத்தைக் கடமை வழுவா முறையில் மாணவ திலகங்கள் நடித்துக் காட்டிப் பாராட்டுப் பெற்றிருக்கிறார்கள்.

'பொழுது போக்குத் தொழிற் கூடம்' என்ற பகுதி இந்தக் கல்லூரியில் கவனத்தைக் கவரக் கூடியதாக இருக்கிறது. கல்லூரி வேலை நேரம் முடிந்த பிறகு வாரத்தில் இரண்டு நாட்கள் மாலை வேளைகளில் ஆர்வம் காண்பிக்கும் மாணவர்களுக்குப் புகைப்படம் எடுக்கும் வித்தையையும் சுயமாகவே ரேடியோப் பகுதிகளை இணைத்துப் பாட வைக்கும் கைத் தொழிலையும் கற்றுக் கொடுக்க வகை செய்திருக்கிறார்கள். அதற்குத் தேவையான போதனைகளைத் திங்கள், புதன் மாலைகளில் ஐந்திலிருந்து ஏழுவரை கல்லூரி விஞ்ஞான ஆசிரியர்கள் உற்சாகத்துடன் அளிக்கிறார்கள். எதிர்பார்த்த அளவுக்கு மாணவர்கள், தங்கள் ஓய்வு நேரங்களை இந்த உபயோகமான பொழுது போக்கில் ஈடுபடுத்துவதாகத் தெரியவில்லை. அப்படி ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் மாணவர்கள், கல்லூரியை விட்டு, படிப்பை முடித்துக் கொண்டு கிளம்பும் போது, ஓரளவு புகைப்படத் தொழிலையோ வாழ்க்

மேலிருந்து கீழாக: 1. பழைய மாணவர்கள் தினத்தன்று கல்லூரியின் முன்னாள் மாணவர் வி. புல்லா ரெட்டி பேசுகிறார். 2. கல்லூரியில் படித்துவரும் மாணவி. 3. கல்லூரியைப் பார்வையிட அயல் நாட்டிலிருந்து வந்த இரு மாணவிகள்.







கைக்குத் துணையாகவும் மேற்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் செல்வார்கள். இந்தப் பகுதியை நிர்வகிக்கும் பொறுப்பேற்றிருக்கும் ஆசிரியர் திரு பி. எஸ். ஹரிஹரன், கல்லூரி மேல்தளத்தில் இந்த இரண்டு பகுதிகளையும் எதிர் எதிரே அமைத்து, பார்ப்பவர்கள் உள்ளங்களில் ஆர்வம் தோன்றும் வகையில் பணி புரிகிறார்.

கல்லூரியின் வளர்ச்சிக்கேற்ப ஹாஸ்டல் கட்டடமும் வசதிகளும் அபிவிருத்தி யடையக் காத்திருக்கின்றன. இப்போதிருக்கும் பிரதான ஹாஸ்டலில் நூற்றிஇருபது மாணவர்கள் தங்கியிருக்கிறார்கள். மற்ற இரண்டு சிறு கட்டடங்களில் தலா நாற்பது பேர் தங்க வசதி உண்டாம்.

நகரத்தின் நடு மையத்திலேயே ஹாஸ்டல் இருப்பதால், ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்து சரித்திரப் புத்தகத்தை வைத்திருக்கும் மாணவனின் கவனத்தைச் சரித்திர நாயகர்களைவிட, சாலை நாயகர்களாக ஓடும் லாரிகளும் கார்களும் அதிகமாகக் கவர வாய்ப்பிருக்கும்போல் தோன்றுகிறது.

ஹாஸ்டல் மாணவர்கள் ஓரளவு சாதுக்களாகவே காணப்படுகிறார்கள். சுற்று வட்டாரக் கிராமங்களிலிருந்து வந்து தங்குவதன் காரணமாகவும் இருக்கலாம். அல்லது எங்கள் தாத்தா தங்கிப் படித்த ஹாஸ்டல்! எங்கள் தந்தை தங்கியிருந்து படித்த இடம்' என்ற மன நிறைவின் காரணமாகவும் இருக்கலாமல்லவா?

''எங்கள் வார்டன் மிகுந்த நல்லவர் சார்! அறிவை விருத்தி செய்யக் கூடிய நல்ல ஆங்கிலப் படங்கள் ஊரில் ஓடினால், அவராகவே எங்களை அழைத்து அந்தப் படங்களைப் பார்த்து விட்டு வரச் செய்வார். அதற்காக அவர் கண்டிப்புக்காரரல்ல என்று சொல்லிவிட முடியாது. கண்டிக்க வேண்டிய போது தயங்கவே மாட்டார்!'' என்று பெருமையாகவே கூறினார் ஒரு மாணவர்.



கல்லூரி முதல்வரும் அப்படித்தானாம். ஏதாவது சந்தர்ப்பத்தில் மாணவன் மீது ஆசிரியர்கள் யாரும் புகார் கொண்டு வந்தால், பிரஸ்தாப மாணவனையும் வரவழைத்து ஆசிரியர் முன் வைத்துத்தான் விசாரித்து முடிவு செய்வாராம். ஒருதலைப் பட்சமாக அவர் எந்த முடிவுக்கும் வருவதில்லையாம்!


இந்த விஷயமும் மாணவர்களுக்கு வெகுவாகத் திருப்தி யளிக்கக் கூடியதாகத்தான் இருக்கிறது.

கல்லூரி முதல்வர் மனத்தத்துவ பாடத்தில் பயிற்சி பெற்றவர். மாணவர்களின் மனத் தத்துவத்தை அனுசரித்துப் போக அவருக்குத் தெரியாதா, என்ன?

ஜனத் தொகை ஆராய்ச்சி நிபுணர் டாக்டர் சந்திர சேகரும், டாக்டர் மால்காம் ஆதிசேஷய்யாவும், இரு புல்லா ரெட்டியும் இந்தக் கல்லூரித் தயாரிப்புக்கள்தான்!

தம் தந்தையின் பெயரில் ஒரு ஸ்காலர்ஷிப் வழங்க டாக்டர் சந்திர சேகர் இந்தக் கல்லூரிக்கு இரண்டாயிரம் ரூபாய் நிதி வழங்கியிருக்கிறார். 'சாரங்கபாணி ஞாபகார்த்த ஸ்காலர்ஷிப்' என்ற பெயரில் அந்த உதவி மாணவர்களுக்கு வழங்கப்பட விருக்கிறது.

கல்லூரியைச் சுற்றிப் பார்த்து விட்டு டாக்டர் கோபால் அவர்களிடம் விடை பெற்ற போது, ''இது வரை செய்திருப்பதைப் பற்றிச் சொல்லிக் கொள்வதைவிட, இன்னும் எவ்வளவோ சேவை செய்ய இந்தக் கல்லூரி காத்திருக்கிறது'' என்றார் அடக்கமாக. வணிகத் துறையில் வெகுவாக முன்னேறிக் கொண்டு வரும் வேலூர் நகரத்தில் அத்துடன் போட்டி போட்டுக்கொண்டு கல்வித்துறையும் அபிவிருத்தியடைய இந்தக் கல்லூரியில் ஆராய்ச்சி வகுப்புகளுக்கான வசதிகள் சீக்கிரமே ஏற்படுமானால், ஊக்கமுள்ள பல வேலூர் மாணவர்கள் வெளியூர் சென்று தங்கிப் படிக்க வேண்டிய சிரமம் குறையுமல்லவா?




OSTERMILK

அத்தியாயம் பத்தொன்பது

முதலுதவி

பிச்சமணியின் 'பேபி ஆஸ்டின்' காரைச் சூழ்ந்துள்ள ஜனக் கும்பலைப் பிளந்து கொண்டு முன்னால் வந்த டாக்டர் ஜகந்நாதன், அந்தக் காருக்குள் தலையை நீட்டிப் பார்த்தார். காரின் உள்ளே பின் சீட்டில் பிச்சமணி, அசையாமல் உட்கார்ந்திருந்தான். அவன் தோள் மீது உமாவின் தலை துவண்டு தொங்கியது. ''பிச்சமணி நீயா?.... உமா ஏன் இப்படிக் கிடக்கிறாள்? நீ என்ன செய்தாய்?'' என்று ஜகந்நாதன் பரபரப்புடன் அதட்டலான குரலில் கேட்டார்.

அவரை வெறுப்புடன் பிச்சமணி ஏறிட்டு நோக்கி, ''மிஸ் உமா ஓடும் போது கீழே விழுந்து விட்டாங்க!'' என்று முணுமுணுத்தான்.

''ஓ! ஓடிப் பிடித்து விளையாடினீர்களா?'' என்று வெடுக்கெனக் கேட்ட ஜகந்நாதன், ''உன் விஷமத்தனம் வர வர அதிகரிக்கிறது என்று உன் தாத்தா அலட்டிக் கொள்வது சரியாகத்தான் இருக்கிறது!'' என்று கூறியபடி அவனை முறைத்துப் பார்த்தார்.

பிச்சமணி அவரை எரித்து விடுவது போல் பார்த்தான்.

குழந்தைகள் எல்லோரும் ''சித்தப்பா, சித்தப்பா!'' என்று கூவியபடி அவரைச் சூழ்ந்து கொண்டு, ''பாவம், எங்கள் டீச்சரக்கா!'' என்று கண்ணைக் கசக்கினார்கள்.

சிறுவன் ரவி ஆத்திரத்துடன் ஜகந்நாதனின் சட்டை நுனியைப் பிடித்திழுத்து, ''சித்தப்பா! அந்த மணி மாமா விஷமம் பண்ணலே. நான்தான் நீங்கள் சொல்லிக் கொடுத்தபடி, 'யானை வருகிறது' என்று கத்தினேன். அதனால்தான்....'' என்று வாய் வெடவெடக்க ஆரம்பித்து உமாவின் வலது காலுக்கு ஏற்பட்ட விபத்தைப் பற்றிச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தான்.

''மணி மாமா இல்லாவிட்டால் எங்கள் டீச்சரக்காவை அந்தக் குழியிலிருந்து தூக்கியிருக்கவே முடியாது'' என்று கூறிய சிறுமி ராஜி மெல்லப் பிச்சமணியின் பக்கம் திரும்பி அவனைச்



சரித்திரக் கதைகளில் வரும் வீர தீரக் கதாநாயகனைப் போல் பாவித்து வெகு ரசனையுடன் பார்த்தான்.

டாக்டர் ஜகந்நாதன் உமாவின் காலைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, ''காலில் ஒரு சிறு பிராக்சர் (முறிவு) ஏற்பட்டிருக்கு!'' என்றார் யோசனையுடன்.

பிறகு அவர் சுற்றிலும் சூழமியிருக்கும் ஜனக் கும்பலை நோக்கி, ''என்னய்யா வேடிக்கை பார்க்கிறீங்க? இதென்ன சினிமா ஸ்டார் காரா? தெருக் கூத்தா? காற்றை அடைத்துக் கொண்டிராமல் போங்களய்யா!'' என்று அதட்டி விரட்டினார்.

பிச்சுமணி அழுகை பீறிடும் குரலில், ''மிஸ் உமா இப்படிப் பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறாங்களே!'' என்று பரிதவித்தான்.

''கவலைப்படாதே, தம்பி! அதிர்ச்சியினால் கொஞ்சம் மூர்ச்சை ஏற்பட்டிருக்கு. இதோ தெளிந்து விடும்!'' என்றார் ஜகந்நாதன்.

அவர் சொல்லி வாய் மூடுவதற்குள் பிச்சுமணியின் தோளில் துவண்டு தொங்கும் உமாவின் தலை மெல்ல அசைந்து, கருவிழிகள் அகலத் திறந்து பிச்சுமணியின் முகத்தையே வெறித்து நோக்கின. அவ்விழிகளில் பொங்கும் நன்றி கலந்த ஓர் உணர்ச்சி 'விர்'ரென்று பிச்சுமணியின் நெஞ்சில் பாய்ந்தது. அதனால் பிச்சுமணி மனம் நெகிழ்ந்தவனாய், உமாவின் முகத்தருகில் குனிந்து, உணர்ச்சி வேகத்தோடு ''உமா!...உமா!...'' என்று உரக்கக் கூவினான்.

உமா அப்போதுதான் தன் நிலை உணர்ந்தவளாகக் கூச்சத்துடன் எழுந்திருக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை. சிறிது அசைந்தாலும் வலி வேதனை பிராணனைக் கிள்ளியது. உமா பல்லைக் கடித்துக் கொண்டும், அதைப் பொறுத்துக் கொள்ள முடியாதவளாய் முனகினாள்.



''கால் ரொம்ப வலிக்கிறதா, உமா?'' என்று பிச்சுமணி பரிவுடன் கண்களில் நீர் ததும்பக் கேட்டான்.

'ஆம்' என்பது போல் உமா மெல்லத் தலையசைத்தாள்.

''அப்படியானால் அசையாதீர்கள், உமா!'' என்று பிச்சுமணி கெஞ்சும் குரலில் கூறினான்.

ராஜி அந்தக் காரினுள் தலையை நீட்டிக் கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்தாளாகையால், ''டீச்சரக்கா! கவலைப்படாதீங்க! இதோ எங்கள் சித்தப்பா இருக்கிறார்! அவர் பெரிய டாக்டர்!'' என்று கூறினாள்.

டாக்டர் ஜகந்நாதன் புன்முறுவலுடன் உமாவின் வெளிறிய முகத்தை நோக்கி, ''உமா! ஆக்ஸிடெண்டுக்கு அப்புறம் நீ நடக்கவில்லையே?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்று உமா தலையசைத்தாள்.

''நல்ல வேளை!'' என்று பெருமூச்சு விட்ட ஜகந்நாதன் ஏதோ யோசனையுடன், ''ஆனால்... இந்தக் காருக்குள் நீ எப்படி வந்து சேர்ந்தாய்?'' என்று கேட்டார்.

சிறுவன் ரவி குறுக்கிட்டு, ''மணி மாமாதான் எங்கள் டீச்சரக்காவைத் தூக்கிக் கொண்டு வந்தார்'' என்றான்.

''ஓ!'' என்றார் ஜகந்நாதன் ஒரு விஷமப் புன்முறுவலுடன்.

அது உமாவுக்கு அதிக நாணத்தை உண்டுபண்ணியது. கூச்சத்தோடு நெளிந்தாள். ஆனால் அடுத்த கணமே வலியால் இழுப்புண்டு துடித்தாள்.

டாக்டர் ஜகந்நாதன் அவளைக் கனிவுடன் பார்த்தபடி, ''உமா! உன் காலில் எலும்பு கொஞ்சம் பிசகியிருக்கிறது. அதை இப்போதே சரிப்படுத்த வேண்டும். பின் என் நர்ஸிங் ஹோமுக்குப் போய்க் கட்டுப் போட்டுக்கொள்ளலாம். அங்கே நீ இரண்டொரு வாரம் தங்கும்படி நேரலாம்!'' என்றார்.

''ஜெனரல் ஆஸ்பத்திரிக்கே போகலாம்!'' என்று பிச்சுமணி கூறினான்.

''ஏன்? என்மேல் நம்பிக்கை இல்லையா? நான் வெறும் கலர்த் தண்ணீர் கொடுக்கிற டாக்டர் என்று நினைத்துக் கொண்டாயா?'' என்று ஜகந்நாதன் கடுகடுத்தார்.

அவருக்கு ஆதரவாக உமா முக்கி முனகும் குரலில், ''நர்ஸிங் ஹோமுக்கே போகலாம்!'' என்றாள்.

அதற்கு மேல் பிச்சுமணியால் மறுப்பு ஏதும் சொல்ல முடியவில்லை.

ஜகந்நாதன் வெற்றிப் புன்முறுவலுடன் அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''உமா, கொஞ்சம் வலிக்கும். பொறுத்துக் கொள்கிறாயா?'' என்றார்.

'இம்!' என்று உமா தன் தலையை அசைத்தாள்.

டாக்டர் ஜகந்நாதன் உடனே உமாவின் கணுக்காலைப் பிடித்துப் பிசகிய எலும்பை அமுக்கிச் சிகிச்சை அளிக்கலானார்.

உமா பிராணாவஸ்தையுடன் அதைப் பொறுத்துக் கொள்ள முயன்றவளாய்த் தன் இரு கண்களையும் மூடி அப்படியே பிச்சுமணியின் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு தன் னடக்கத்துக்காகப் போராடினாள்.

அது மிகவும் கடுமையாக இருந்ததால் அவள் துடிதுடித்துத் தன்னையும் மீறித் தலையை அங்கும் இங்கும் பிச்சுமணியின் தோள்களுக்கிடையே ஆட்டிக் கொண்டே விம்மி விம்மி அழுதாள்.

அவளைப் பிச்சுமணி அளவு கடந்த அன்புடன், ''உமா! கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்! பொறுத்துக்கொள்ளுங்கள்! ஒரு நிமிஷத்தில் எல்லாம் சரியாகப் போய்விடும்'' என்று தேற்றியபடி அவளுடைய கண்ணீரைத் தன் கைகளால் துடைத்தான். ஆனால் உமாவின் அவஸ்தை அவனுக்குப் பெரும் சோதனையாக இருந்ததால் அவனும் கண் கலங்கினான்.


உமாவின் கணுக்காலைப் பிடித்து டாக்டர் ஜகந்நாதன் சட்டென்று ஒரு புறமாக வளைத்துத் திருப்பினார்.

உமா புழுப்போல் துடித்து நெளிந்து 'வீல்' என்று கத்திவிட்டு அப்படியே பிச்சுமணியின் கைக்குள் மூர்ச்சையாகிவிட்டாள்.

''பிச்சுமணி! உமாவின் மூர்ச்சையைப் பற்றி நீ அலட்டிக் கொள்ளாதே! அபாயம் ஒன்றும் இல்லை. ஆனால் சீக்கிரமாக என் நர்ஸிங் ஹோமுக்குக் கொண்டு போக வேண்டும். உன்னுடைய இந்த 'பேபி' காரை நான் ஓட்டிக் கொண்டு போகிறேன். நீ மற்ற பேபிகளை என் காரில் ஓட்டிக்கொண்டு போய் அவர்களை வீட்டில் விட்டு வா! என் காரை ஸ்பீடாக ஓட்டி எதிலாவது மோதி விடாதே! அவசரம் ஒன்றும் இல்லை!'' என்று டாக்டர் ஜகந்நாதன் இராணுவத் தளபதிபோல் உத்தரவிட்டார்.

பிச்சுமணிக்கு அது சம்மதமில்லை என்றாலும் வேறு வழியின்றி அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தான்.

ஆராய்ச்சியும்
தரக் கட்டுப்பாடும் இணைந்து செல்கின்றன



எஸ்ட்ரெலா ஸ்தாபனத்தில ஆராய்ச்சியும் தரக் கட்டுப்பாடும் இணைந்து செல்கின்றன.

ஆராய்ந்து அறிவதற்கு உகந்த ஆராய்ச்சிக்கூடத்தின் நிசப்தமான சூழ்நிலையிலே எஸ்ட்ரெலாவின் ஆராய்ச்சிக் குழுவினர், உங்கள் தேவைகளைச் சிறந்தவாறு திருப்தி செய்வதற்கெனப் பொருள்களைச் சிறந்த வகையிலும், மேலும் புதியவைகளையும் தயாரிப்பதற்கான முறைகளைக் காண ஓயாது முயன்று வருகிறார்கள். அவர்கள் நம் நாட்டிலேயே கிடைக்கும் மூலப்பொருள்களை நன்கு பயன்படுத்துவதற்கும் அதன் மூலம் தேசத்தின் அன்னிய செலாவணியை மிச்சப்படுத்துவதற்குமான வழிகளையும் காண்கிறார்கள்.

எஸ்ட்ரெலாவின் நற்பெயர் அதன் உயர்தரத்தைப் பொறுத்திருப்பதால், மிகவும் கண்டிப்பான தரக் கட்டுப்பாடு மிக்க இன்றியமையாததாகிறது. எஸ்ட்ரெலாவின் தரக்கட்டுப்பாடு வல்லுனர்கள் எப்பொழுதும் கவனமாகக் கண்காணித்து... சோதித்து.. நிராகரித்து...தரத்தை உயர்த்தி...நீங்கள் நிச்சயமாக மிகச் சிறந்த தயாரிப்பையே பெறுகிறீர்கள் என்று நிச்சயப்படுத்துகிறார்கள்.


ஓர் எண்ணம், அதுவே ஒரு தேசியத் தொழிலாயிற்று.

எஸ்ட்ரெலா

பாட்டரீஸ் லிமிடெட்

பம்பாய் • டில்லி • கல்கத்தா • மதராஸ் • கான்பூர்

EB-G-24. T/



துள்ளி
விளையாடும்
பொழுதோ



ஓய்வு பெறும்
பொழுதோ...
அவர்கள்
எப்பொழுதும்
வளர்ந்து
கொண்டே
இருக்கிறார்கள்!



கல்ஸாணு-டி

வைட்டமின் தீவிரச் சேர்க்கையுடைய கால்சியம்

கர்ப்பிணிகள், குழந்தையை அரவணைக்கும் அன்னைகள் மற்றும் வளரும் குழந்தைகள் இவர்களுக்கு ஏற்றது

குழந்தைப்பருவம் வேகமாக வளரும் பருவம். மற்றெல்லா காலத்தையும்விட—இப்பொழுது வலிமை பொருந்திய பற்களையும், எலும்புகளையும் வளர்க்கவும்......வாழ்க்கைக்கு வேண்டிய வலிமையையும் சக்தியையும் பெறவும், குழந்தைகளுக்கு கல்ஸாணு-டி தேவைப்படுகிறது. எனவேதான் வளர்ச்சிபெறும் இந்த வருஷங்களில், உங்கள் குழந்தைகளுக்கு கல்ஸாணு-டியைக் கொடுக்கவேண்டும். நற்சுவைமிக்க கல்ஸாணு-டி, அவசியமான கால்சியமாகும். வியாதிக் கிருமிகளுக்கு பாதிக்கப்படாதிருப்பதற்கும்....... கால்சியம் சத்து நன்கு உடலில் சேர்வதற்கும்.......மிகுந்த வலிமை பெறுவதற்கும்... இதில் வைட்டமின்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உங்கள் குழந்தைகளுக்கு கல்ஸாணு-டி-யைக் கொடுத்துப்பாருங்கள். அவர்கள் புதுச் சக்தியுடனும் புதுமலர்ச்சியுடனும் தோற்றமளிப்பார்கள்

GR.AD.AG. TAM.

டாக்டர் ஜகந்நாதன் தமது நர்ஸிங் ஹோமை அடைந்ததும் உமாவுக்கு வேண்டிய சிகிச்சைகளெல்லாம் அளித்து அவளது வலது காலில் ஒரு பெரிய கட்டுப் போட்டு, ஒரு தனி வார்டில் விசேஷ அறையில் கிடத்தச் செய்தார்.

கட்டிலில் படுத்திருக்கும் உமாவின் கால் கட்டு ஒரு கயிற்றில் தொங்க விடப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது பிச்சுமணிக்கு அழுகை அழுகையாக வந்தது. ஆனால் அவன் ஆண்பிள்ளையாகையால் அழுகையை அடக்கிக் கொண்டு, உமா எப்போது மயக்கம் தெளிந்து கண் விழிப்பாள் என்று ஏங்கியவனாய், அவளுடைய அறை வாசலிலேயே குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

''பிச்சுமணி! நீ ஏன் அநாவசியமாக இங்கு சுற்றிக் கொண்டிருக்கிறாய்?'' என்று டாக்டர் ஜகந்நாதன் விநயமாக ஒரு புன்சிரிப்புடன் கேட்டார்.

''மிஸ் உமா எப்போது கண் விழித்துப் பார்ப்பார்கள்?''

மயக்க மருந்து கொடுத்திருக்கிறேன். மயக்கம் தெளிய ராத்திரி ஒரு மணிக்கு மேலே ஆகலாம். அப்புறம் வலி தெரியாமல் இருப்பதற்காகத் தூக்க மருந்து கொடுக்கும்படி நர்ஸிடம் சொல்லியிருக்கிறேன். அது வரையிலுமா நீ இங்கே காத்திருக்கப் போகிறாய்?''


''உன் வீட்டில் பாவம், உன் தாத்தா உனக்காக உண்ணாவிரதம் இருப்பார்! நான் அவரைப் பார்க்கத்தான் போகிறேன். நீயும் என்னுடன் வருகிறாயா?''

''இல்லை! நாளைக் காலையில்தான் வீட்டுக்கு வருவேன். என் தாத்தாவிடம் நீங்களே சொல்லிவிடுங்கள்!'' என்று கண்டிப்பாகக் கூறிய பிச்சுமணி ஏதோ ஒன்றை யோசித்துவிட்டு, ''ஆமாம்! என் தாத்தாவை நீங்கள் எதற்காக அடிக்கடி பார்க்கப் போகிறீர்கள்? அவருக்குத்தான் உடம்புக்கு ஒன்றும் இல்லையே?'' என்று ஒரு முறைப்புடன் கேட்டான்.

''உடம்பில் என்ன இருக்கிறது, என்ன இல்லை என்பது டாக்டர்களுக்குத்தான் தெரியும்!''

''என் தாத்தாவுக்கு ஒரு வியாதியும் இல்லை! நீங்கள் கொடுக்கிற மருந்தையும் சாப்பிட மாட்டார்! அப்புறம் நீங்கள் எதற்கு?''

''தம்பி! உன் தாத்தாவின் உடம்புக்கு மருந்து தேவைப்படாவிட்டாலும், அவருடைய மூளைக்கு அடிக்கடி மருந்து தேவைப்படுகிறது. மேலும் நாங்கள் இருவரும் புது நண்பர்கள்.''



''நண்பர்களா? என் தாத்தாவுக்கு என்ன வயசு? உங்களுக்கு என்ன வயசு?''

''தம்பி! நட்புக்கு வயது வித்தியாசம் முக்கியமல்ல.''

''ஆனால் என்னைப் பற்றி என் தாத்தாவிடம் கோள் சொல்லுகிற பழக்கத்தை மட்டும் விட்டுவிடுங்கள்!''

''நீயும் ஒட்டுக் கேட்கிற பழக்கத்தை விட்டுவிடு!'' என்று டாக்டர் ஜகந்நாதன் பட்டென்று சொல்லி விட்டு 'விர்'ரென்று போய்விட்டார்.

மறு நாள் அதிகாலையில் உமா கண் விழித்துப் பார்த்தபோது வாடிய ரோஜா போன்ற பிச்சுமணியின் அழ



''எங்கள் பத்திரிகையின் தீபாவளி மலரில் நீங்கள் எழுதியதாக ஒரு கதை வெளியிட்டோம் அல்லவா? அதற்கு அன்பளிப்பு. இதை வாங்கிக்கொண்டு இந்தரசீதில்கைநாட்டுக் கட்டை விரல் அடையாளம் போட்டுவிடுங்கள்!''

ஙிய முகம்தான் அவள் கண்களுக்கு முதலில் தென்பட்டது. அவளுடைய கட்டிலுக்கருகில் பிச்சுமணி கவலையே உருவாக உட்கார்ந்து முகத்தில் ஒரு கேள்விக் குறியுடன் அவளையே கண் கொட்டாமல் கவனித்துக் கொண் டிருந்தான். இரவு முழுதும் அவன் தூங்கவில்லை என்பதற்கு அடையாள மாக அவன் கண்ணிமைகள் இரண்டும் கனத்துச் சோர்ந்து போயிருந்தன.

அவனைப் பார்த்து உமா ஒரு புன் முறுவல் செய்தாள்.

உடனே புது ஜீவன் பெற்றவன் போல் பிச்சுமணி துள்ளி, ''மிஸ் உமா! இப்போது எப்படி இருக்கு?'' என்று அளவு கடந்த பாசப் பரிவுடன் கேட்டான்.

''வலி பரவாயில்லை! ஆனால் காலை அசைக்க முடியாமல் உடம்பெல்லாம் ஒரே பாரமாக இருக்கு!'' என்று சொன்ன உமா, தன் கருவிழிகளின் பார்வையைச் சுற்றிலும் செலுத்தினாள்.

அவளுடைய கட்டிலுக்கு மறு பக்கத்தில் இளம் நர்ஸ் ஒருத்தி அவளுக்குச் சிசுருஷை செய்வதற்காகப் பதுமை போல் நின்று கொண்டிருந்தாள். அந்த நர்ஸ் அவளை விட இன்னும் அழகாகவும், சிவப்பாகவும், சதா புன்முறுவலிடனும் குழி விழும் கன்னங்களுடனும் விளங்கினாள்.

''என் பாட்டி...?'' என்று உமா மெல்லக் கேட்டாள்.

பிச்சுமணி அவளைக் கனிவுடன் நோக்கி, ''உங்கள் பாட்டி தகவல் தெரிந்ததும், உடனே அலறியடித்துக் கொண்டு ஓடிவந்து உங்களைப் பார்த்தாங்க. அப்போது நீங்க மூர்ச்சித்துக் கிடந்தீங்க. இந்நேரம் வரை பாட்டி இங்கேதான் காத்திருந்து விட்டு, இன்னும் நீங்கள் கண் விழிக்கவில்லையே என்று பதறி டாக்டரை அழைத்து வரப் போயிருக்காங்க!'' என்றான்.

அடுத்த நிமிஷம் டாக்டர் ஜகந் நாதனை அழைத்துக் கொண்டு உமாவின் பாட்டி பரபரப்புடன் அந்த அறைக்குள் நுழைந்தாள். டாக்டரின் கைப்பையை இன்னொரு அழகான இளம் நர்ஸ் எடுத்துக் கொண்டு, பார்வையில் புன்முறுவல் மின்னலிட, 'ஜம்'மென்று நடந்து வந்தாள்.

உமா கண் விழித்திருப்பதைப் பார்த்ததும், அவளுடைய பாட்டி, ''என்னடி, உமா? காலை இப்படி ஆக்கிக்கொண்டுவிட்டாயே? கல்யாணமாகவேண்டிய பொண்ணு! உன் காலுக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்னடி பண்றது?'' என்றாள்.

டாக்டர் ஜகந்நாதன் குறுக்கிட்டு, ''உங்கள் பேத்தியின் காலுக்கு ஒன்றும் ஆகிவிடாது, பாட்டீ! அநேகமாக இரண்டொரு வாரங்களில் குணமாகிவிடலாம்! டாக்டரின் வார்த்தையை நீங்கள் நம்பாவிட்டாலும் உங்கள் பேத்தி கும்பிடுகிற சின்னப் பிள்ளையாரையாவது நம்புங்கள்!'' என்று சொல்லிவிட்டு உமாவைப் பார்த்து மெல்லச் சிரித்தார்.

உமா வியப்புடன் அவரை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் தன் வீட்டிலுள்ள ஒரு சிறு மாடத்தில் வைத்திருக்கும் ஒரு சின்னப் பிள்ளையாரைப் பற்றிக்கூட ஜகந்நாதன் விசாரித்துத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாரே என்று அவளுக்கு அளவில்லாத ஆச்சரியம் உண்டாயிற்று. பிச்சுமணிக்கோ அவ்வளவுக்கவ்வளவு பொறாமையும், ஆத்திரமும், ஏக்கமும் கிளம்பின. அவனுடைய மன நிலையை உணர்ந்து ஜகந்நாதன் சுவாரசியமாகச் சிரித்துக்கொண்டார்.

பாட்டி ஏதோ யோசித்துவிட்டு, ''உமா! உன் அப்பாவுக்கும் சித்திக்கும் உடனே தகவல் கொடுக்கணும். இல்லாட்டா இதையே ஒரு குறையாகச் சொல்லி உன் சித்தி ஊரெல்லாம் தமுக்கடிப்பாள்!'' என்றாள்.

''சித்தியைப் பற்றி அப்படியெல்லாம் தப்பாக நினைக்காதே பாட்டி!'' என்று உமா கண்டித்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, ''நம் வசந்திக்குத் தகவல் தெரிவித்தாலே போதும்! அவளே அப்பா அம்மாவிடம் சொல்லிவிட்டு, அக்கா அக்கா என்று என்னிடம் பறந்தோடி வருவாள்!'' என்று பாசப் பெருக்கோடு சொன்னாள்.

''உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிற வரை உன் சித்தி வீட்டு வாசற்படியை மிதிக்கிறதில்லை என்று விரதம் வைத்திருக்கிறேன்.''

டாக்டர் ஜகந்நாதன் ஒரு புன்முறுவலுடன் குறுக்கிட்டு, ''பிச்சுமணியே தன் வீட்டுக்குப் போகிற வழியில் வசந்தியைப் பார்த்துச் சொல்லட்டும்!'' என்று ஒரு வழியாகப் பிச்சுமணியை அங்கிருந்து கிளப்பி வெளியே அனுப்பினார்.

பிறகு அவர் உமாவின் பாட்டியிடம், ''உங்கள் பேத்தி கொஞ்சம் அமைதியாக 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ள வேண்டும் பாட்டீ! நீங்கள் தொண தொணவென்று இங்கேயே பேசிக்கொண்டிராமல் வீட்டுக்குப்போய் உங்கள் ஸ்நானம், ஜபதபம், ஆகாராதி எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு, உமாவுக்குத் தேவையான துணிமணிகளை எடுத்துக் கொண்டு நீங்கள் மெதுவாகச் சாயந்திரம் வந்தால் போதும்'' என்றார்.

''உமாவுக்கு டிபன், சாப்பாடு கொண்டு வர வேண்டாமோ?''

''அதையெல்லாம் நாங்கள் கவனித்துக்கொள்வோம் பாட்டி!''

''பத்திரமாகப் பார்த்துக்கோ! கல்யாணமாக வேண்டிய பொண்ணு!''

''அதைப் பற்றி நீங்கள் கவலைப் பட வேண்டாம் பாட்டி!'' என்று ஒரு சிரிப்புடன் சொன்ன ஜகந்நாதன் கடைக் கண்ணால் உமாவைப் பார்த்தார். உமா தன் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

உமாவின் பாட்டி வெளியே போனதும், .அந்த அறையிலுள்ள இரு நர்ஸுகளையும் கூட ஜகந்நாதன் வெளியே அனுப்பி விட்டு, உமாவை நோக்கி, ''என் மீது உனக்குக் கொஞ்சம் கோபம் இருக்கும் உமா! யானை வருகிறது என்று பயமுறுத்தி அமைதியே உருவான உன்னை அதிர்ந்து ஓட வைத்துப் பார்த்தால் தமாஷாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் நீயே எனக்குப் 'பேஷண்டாக' வந்து சேர்வாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை!'' என்றார்.

''அதிருக்கட்டும், மிருகக் காட்சிசாலையில் நீங்கள் ஏன் திடீரென்று மறைந்தீர்கள்? புலிக் கூண்டுக்குப் பின்னால் ஒரு மீசைக்காரத் தாத்தா ஒளிந்திருந்து, உங்களை வரும்படி சொல்லியனுப்பினாரே, அந்தத் தாத்தா யார்?''

''பிச்சுமணியின் தாத்தாதான்! அவர் தம் பேரன் யாரோ ஒரு பெண்ணைச் சுற்றிக் கொண்டு திரிவதாகச் சந்தேகப்பட்டு, அவனைப் பின் தொடர்ந்து அங்கே வந்தாராம். அந்தப் பெண் யாரென நான் கண்டு பிடித்துச் சொல்வதாக அவரைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டுத் திரும்பி வந்தேன்! அதற்குள் உனக்கு இந்த 'ஆக்ஸிடெண்ட்' நடந்து விட்டது.''

''அந்தப் பெண் யாரெனக் கண்டு பிடித்துவிட்டீர்களோ....?'' என்று உமா பரபரப்புடன் கேட்டாள்.

''அது மட்டுமல்ல! அந்தப் பெண்ணின் மனத்தை மாற்ற வேண்டிய பொறுப்பும் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் இந்தப் பெண்ணைப் பிச்சுமணியின் தாத்தா தன் பழங் காலத்துத் துப்பாக்கியாலே சுட்டுத் தள்ளிவிடுவார். ஆகவே நான் செய்யக் கூடிய முதலுதவி இதுதான்!'' என்று அமைதியாகக் கூறிய ஜகந்நாதன் சட்டென்று உமாவின் வலது கையைத் தம் கையால் இறுகப் பற்றினார்.

(தொடரும்)

சுலேகா

ஸ்பெஷல்

பவுண்டன் பேனா

இங்க்



4 நிரந்தரமான கலர்களில்

கிடைக்கும்

- புளு பிளாக்
- ராயல் புளு
- கருப்பு
- பிரவுன்

சுலேகா ஒர்க்ஸ் லிட்.

கல்கத்தா

அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

கமலாலய நிதி லிட்.

(ஸ்தாபிதம் 1925)

244, ராஜ வீதி, கோவை

மாதாந்திர ஏலச் சீட்டு
மற்றும் சேமிப்பிற்கும்
நம்பிக்கையான ஸ்தாபனம்

★

20-11-63ல் நடக்கும் புதிய ஏலச் சீட்டுகள் - 20 மாதம்

பிரிவு	சந்தா	மொத்தம்
A	ரூ. 100	ரூ. 2000
B.	ரூ. 50	ரூ. 1000
C	ரூ. 25	ரூ. 500

S. H. Badari Madhva Rajan
Secretary

சீஸனின் சிறந்த
பரிசுப்
பொருள்கள்!

(Registered)

அயல்நாடுகளில் உள்ள உங்கள் நண்பர்களுக்கு தீபாவளி - கிறிஸ்மஸ் வெகுமதி பார்சல்களை அனுப்ப

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் 777

திடீரெக்ஸ் Dhideerex

(FOR INSTANT PREPARATION)

திடீர் இட்லி, சாம்பார் ஊறுகாய்கள்

மற்றும் பல தென்னிந்திய உணவுத் தயாரிப்புகளை அனுப்பி வைப்பதைவிட சிறந்ததாக வேறு எதுவும் இருக்க முடியாது!

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.

(போன்: 23665)


46, தம்பு செட்டித் தெரு, சென்னை-1




பம்பாய் ஷண்முகானந்த சபையில் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகள். 1. ஸ்ரீமதி எம். எல். வி. 2. படே குலாம் அலி கான். 3. காருகுறிச்சி அருணாசலம். 4, 5. ரசிகப் பெருமக்கள். 6. குமாரி கமலா சகோதரிகளுடன் சபை நிர்வாகிகள். 7. ஸ்ரீ ஜி. என். பி. 8. டி. கே. எஸ். சகோதரர்களின் சிவகாமியின் சபதம் நாடகம்.






















ஜாம்-பெக் புண்ணையாற்றி இதமளிக்கிறது

ஜாம்-பெக் உபயோகிக்கும்பொழுது புண்பட்ட இடங்களில் எரிச்சல் ஏற்படுவதில்லை, ஏனெனில் அதில் மூலிகை மருந்துகளும், ஆன்டிசெப்டிக்குகளும் சேர்ந்துள்ளன. சரும உபாதைகளுக்கும் சொரி பொடுகுகளுக்கும் மற்றும் தசைவலிகளுக்கும் உலகப் புகழ்பெற்ற ஜாம்-பெக் உபயோகியுங்கள். இது மிருகக் கொழுப்பு மற்றும் எண்ணெய்கள் சேர்க்கப்படாதது என்பதற்கு உத்திரவாதம்.

Zam-Buk

ஜாம்-பெக்
மூலிகைக்
களிம்பு



எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

வி.இ. புல்போர்ட் (இந்) பிரைவேட் லிமிடெட், பம்பாய்

சென்னை ராஜ்ய [பூரண] விநியோகஸ்தர்கள்

மோதி அண்டு கம்பெனி
சென்னை - 3

காஞ்சித் தலைவன்



மாமல்ல நரசிம்ம பல்லவன்; அவன் அருமைத் தங்கை பூங்குழலி; அவளைக் காதலிக்கும் தளபதி பரஞ்சோதி; மாமல்லனை ஒடுக்க நினைக்கும் வாதாபிப் புலிகேசியால் அனுப்பப்பட்ட அழகி சோழக் குமரி. இவர்கள்தான் இப்படத்தின் முக்கியமான பாத்திரங்கள். சோழக் குமரியை மணக்க விரும்பும் மாமல்லனுக்கும் பரஞ்சோதிக்கும் அதன் காரணமாக மனவேற்றுமை ஏற்படுகிறது. மாமல்லனை அழிக்க ஏற்படுத்தப்பட்ட சதி பூங்குழலியைக் கொன்று விடுகிறது. நண்பர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு வாதாபி மேல் படையெடுத்து வெற்றி பெறுகின்றனர்.

மாமல்லனாக வரும் எம். ஜி. ஆர். பாத்திரத்துக்கு ஏற்ற ராஜ கம்பீரத்துடன் வந்து நன்றாய் நடித்திருக்கிறார். மணி மகுடம் அவருக்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது. மல்லனோடு பொருது புறமுதுகிடச் செய்யும் காட்சியில் எம். ஜி. ஆரின் சாகஸங்கள் அவருக்கே உரித்தானவை. நண்பனின் மனைவியினுடைய கற்பைச் சோதிக்கப் புகுந்து வேதனைப்படும் கட்டத்தில் அவர் நடிப்பு உருக்கமாயிருக்கிறது. ஆனால் அந்தக் கட்டம் மனதுக்கு அருவருப்பாக இருக்கிறது.

நரசிம்மனை ஒழித்துவிடும் நோக்கத்துடன் நஞ்சு கலக்கப்பட்ட விருந்தை அவன் அருந்தி விடக் கூடாதே என்று சோழக் குமரி அவனுக்குக் கோபமூட்டி வெளியேறச் செய்தகாட்சியில் பானுமதியின் நடிப்பு மிகவும் உயர்வாயுள்ளது.

விஜயகுமாரி பூங்குழலியாக நன்றாய் நடிக்கிறார். போருக்குப் போகக் காதலனைத் தூண்டும் கட்டத்தில் துடிப்பும் நடிப்பும் நிறைந்திருக்கின்றன. பரஞ்சோதியின் பாத்திரம் சரியாக உருவாகவில்லை. மன்னனிடம் ஏற்பட்ட மனமாற்றம் காரணமாகப் போருக்குச் செல்ல மறுத்துக் காதலையும் கைசோர விட்டவன், அவன் இறந்ததும் போர்க்களம் புகுகிறான்.

புலிகேசியாக வரும் அசோகன் நடிப்பு நன்றாயிருக்கிறது. சதிகாரனாக வரும் எம். ஆர். ராதா வழக்கம் போல் சதி செய்கிறார்.

பிரசித்தி பெற்ற சரித்திரப் பாத்திரங்களைக் கையாண்டவர்கள் பெண்மைக்கும், ஆண்மைக்கும் மதிப்பும், வாளுக்கும் தோளுக்கும் பெருமையும் ஏற்படும் விதத்தில் புதிதாகவே ஒரு கதை புனைந்திருக்கலாம்.

பானுமதி பாடும் 'மயங்காத மனம்யாவும் மயங்கும்' என்னும் பாட்டு நன்றாயிருக்கிறது. மு. கருணாநிதியின் வசனம் படத்துக்குத் தனிச் சிறப்பைத் தருகிறது. 'சரித்திர காலத்து வீரப் போராட்டத்தை மையமாக வைத்துப் பல சரித்திரக் குறிப்புக்களுடன் எழுந்த கற்பனைத் திரை ஓவியம்' என்று பெருமிதம் கொள்ளக் ''காஞ்சித் தலைவனி''ல் ஒன்றுமேயில்லாமல் போனது வருந்தத் தக்கது.



அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி

40

நரேந்திரரைப் பிரிந்திருக்க முடியாதபடி அப்படி ஒரு பிரியம் குருதேவருக்கு அவர்பால் ஏற்பட்டு விட்டது. மகான்களால்தான் அப்படி ஓர் அன்பு கொள்ள முடியும் போலும்! பாமரர்களாகிய நமக்கு அந்த அன்பின் வேகம் புரியக் கூட இல்லை.

நரேந்திரர் சில நாட்கள் தட்சிணேசுவரத்துக்கு வராவிட்டால் பரமஹம்ஸரால் தாள முடியாது. அவரைத் தம்மிடம் கொண்டு வருமாறு அம்பிகையிடம் குழந்தை போல் முறையிடுவார். அவள் வேறு எப்படி ஆறுதல் தந்தாலும் ஆறுதல் அடையாமல் பிடிவாதம் செய்வார். இது மற்ற பக்தர்களுக்குப் புரியாததோடு நரேந்திரருக்குமே புரியவில்லை. ராமகிருஷ்ணரின் பிரேமையைக் கண்டு அவர் பிரமை பிடித்தவர் என்றே சில சமயங்களில் நரேன் எண்ணினார். எனினும் அந்தக் கங்கு கரையற்ற அன்பில் தம்மையறியாமல் முழுகத் தொடங்கினார். ஏதோ ஒன்று தம்மைப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பது போல உணர்ந்தார் நரேந்திரர். "அவருடைய அன்புதான் என்னை அவரோடு கட்டிப் போட்டிருக்கிறது" என்று ஒரு முறை அவர் கூறினார்.

பல நாட்களாகியும் நரேந்திரர் தட்சிணேசுவரத்துக்குச் செல்ல முடியாமல் ஒரு சமயம் நேரிட்டது. அன்றைக்கு இரவு பதினொரு மணி இருக்கும். எல்லோரும் படுத்தாயிற்று. ராமகிருஷ்ணர் துணியைச் சுருட்டிக் கக்கத்தில் இடுக்கியபடி ராமதயாள், பாபுராம் என்ற இரு பக்தர்களை அணுகினார். அவர்கள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார்கள்.

"தூங்கிப்போனாயா?" என்று ராமதயாளரைக் கேட்டார் குருநாதர்.

"இல்லையே!" என்றார் அவர்.

"நல்லது. இதோ பார்! ஈரத் துணியை முறுக்கிப் பிழிவது போல் என் இதயத்தை யாரோ முறுக்கிப் பிழிவதாகத் தோன்றுகிறது. இதை நரேந்தரிடம் சொல்லி அவனை இங்கே வரச் செய்" என்றார் பரமஹம்ஸர். அவருடைய கைகள் வஸ்திரத்தைப் பிழியும் பாவனையில் சுழன்று கொண்டிருந்தன.

நரேந்திரரைக் காணாத இன்னொரு நாள் குருதேவரால் தம்மைக் கட்டுப் படுத்திக் கொள்ளவே முடியாமல் போயிற்று. வராந்தாவுக்கு ஓடினார். "சர்வேசுவரி! அவனைக் காணாமல் என்னால் உயிர் வாழ முடியவில்லை" என்று கதறினார். மீண்டும் அறைக்குத் திரும்பியவர், சோகம் நிறைந்த குரலில், "அவனைக் காணாமல் இதயத்தில் காணும் நோவு, அப்பா! என் இதயத்தை யாரோ கசக்குவது போல இருக்கிறது. ஆனால் அவன் இதையெல்லாம் இலட்சியம் செய்யவே இல்லை" என்றார். மீண்டும் வெளியே ஏகினார். சிறிது போதில் திரும்பியவர், "வயசான ஒருவன் ஓர் இளம்பிள்ளைக்காக இப்படிப் பிரலாபித்து அழுகிறேன். என்னைப் பற்றி ஜனங்கள் என்ன நினைப்பார்கள்? நீங்களெல்லாம் எனக்குச் சொந்தமான ஜனங்கள். உங்களிடம் உண்மையைப் பகிரங்கப்படுத்த நான் வெட்கப்படவில்லை. ஆனால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? என்னால் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லையே!" என்றார். நரேந்திரரைக் கண்டபோது இதே அளவுக்குக் குருநாதர் இன்பத்தில் இறும்பூது எய்தினார்.

பரமஹம்ஸரின் ஜயந்தி கொண்டாடப்பெற்றபோது நரேந்திரர் நடுப்பகல் வரையில் வரவில்லை. பரமஹம்ஸரோ அவரைப் பற்றியே கேட்டுக் கொண்டிருந்தார். கடைசியில் நரேந்திரரும் வந்து சேர்ந்தார். ராமகிருஷ்ணருக்குத் தண்டனிட்டார். ராமகிருஷ்ணர் அப்படியே தண்டம்போல அவர் தோள் மீது சாய்ந்தார். தம் நினைவிழந்து சமாதியில் ஆழ்ந்தார். சுயப் பிரக்ஞை வந்த பின் நரேந்திரருக்கு உணவூட்டி அணைத்துக் கொண்டார். நரேனைப் பார்த்த மாத்திரத்திலேயே குருநாதருக்குச் சமாதி கூடிய சந்தர்ப்பங்கள் அநேகம்.

ஒரு முறை தட்சிணேசுவரத்துப் படித்துறைக்கே சென்று சீடனை எதிர் கொண்டழைத்தார் குரு. நரேனுடைய முகத்தைத் தொட்டார். வேதத்திலிருந்து பரம பாவனமான மந்திரங்களை மொழிந்தபடி சமாதி நிலையடைந்தார்.

வேத மந்திரங்களை மொழிந்தபடி கார்த்திகேயனின் மூவிரு சிரங்களையும்

பரமேசுவரன் மோந்து பார்த்ததாக 'சுப்ரமண்ய புஜங்கம்' என்ற உத்தமமான துதியில் வரும். உமை தனது கோமள விரல்களால் குமாரஸ்வாமிக்குத் திலகம் தீற்றுவதாக ஜைமினி மகரிஷி பாடுகிறார். ராமகிருஷ்ணர் நரேந்திரரிடம் அன்பைப் பொழிந்த நிகழ்ச்சிகளைப் படிக்கும்போது ஈசுவரனும் அம்பிகையும் ஆறுமுகனிடம் அருமை பாராட்டியது தான் நினைவில் வருகிறது.

ஒருசமயம் ராமகிருஷ்ணர் சொல்லியனுப்பியும் நரேந்திரரால் தட்சிணேசுவரத்துக்கு வர முடியவில்லை. பரமஹம்ஸரே சிஷ்யரைத் தேடிக்கொண்டு புறப்பட்டு விட்டார். கல்கத்தாவில் பிரம்ம சமாஜத்தினர் சந்தியா ஆராதனை நிகழ்த்தும் இடத்துக்கு வந்து விட்டார் தட்சிணேசுவரத்துத் தபஸ்வி. பாதி சுய உணர்வுடனும் பாதி அவசமாகவும் ராமகிருஷ்ணர் அங்கு பிரவேசித்தவுடன் பிரசங்கம் புரிந்து கொண்டிருந்தவர் சட்டென்று நிறுத்திக் கொண்டார். கூட்டத்தினர் இனம் விளங்காமல் பரமஹம்ஸரின் விசித்திர நிலையையே நோக்கலானார்கள். அவரோ தம்மால் நேர்ந்த குழப்பத்தைச் சிறிதும் கவனியாமல் மேடையை நோக்கிச் சென்று சமாதியில் ஆழ்ந்தார். குழப்பம் அதிகமாயிற்று. ராமகிருஷ்ணர் வேண்டுமென்றே வந்து இவ்வாறு செய்ததாகவும் சிலர் கருதினார்கள். ராமகிருஷ்ணரின் பரிசயம் காரணமாகக் கேசவ சந்திர சேனரும், விஜயரும் மூர்த்தி வழிபாட்டில் சிறிது நம்பிக்கை கொண்டு பிரம்ம சமாஜத்திலேயே ஒரு தனி வகுப்பை ஏற்படுத்தியிருந்ததால் சமாஜத்தினர் சிலருக்கு ராமகிருஷ்ணரைக் குறித்து இப்படித் தகாததொரு சந்தேகம் எழுந்தது. அவர்கள் விளக்குகளையெல்லாம் அணைத்தனர். இதனால் குழப்பம் குறைவதற்குப் பதில் அதிகமாயிற்று. நரேந்திரர் பரமஹம்ஸரைக் காக்க விரைந்தார். பின்வாயில் வழியாக அவரை வெளியேற்



றிக் கொண்டு வந்து தட்சிணேசுவரத்தில் சேர்த்தார். தம்மைக் கண்டதால் தான் பரமஹம்ஸர் அப்படி விசித்திரமாக நடந்து கொண்டார் என்பது நரேந்திரருக்குத் தெரியும்.

பரவசமுற்றதற்காகப் பரமஹம்ஸரை மிகவும் கடிந்து கொண்டார் நரேந்திரர். அவரோ அதைப் பொருட்படுத்தவேயில்லை. பொருட்படுத்தினால்தான் என்ன பயன் இருந்திருக்கப் போகிறது? ராமகிருஷ்ணர் தம் நினைவு இழந்தது தாமே செய்த காரியமா என்ன?

விவேகாநந்த ஸ்வாமி சொல்வார்: ''அவருக்கு என்னிடமிருந்த கண் மூடித்தனமான அன்புக்காக அவரை நான் கடும் சொற்களால் கண்டிக்கத் தயங்கியதில்லை. இப்படி அவர் செய்து வந்தால் என் நிலைக்கே அவரும் வந்து விடுவார் என்று நான் எச்சரிப்பேன். பரத மகாராஜன் தம்முடைய செல்ல மானிடம் வைத்த பிரியம் காரணமாகச் சாகும் தறுவாயில் அதையே நினைந்திருந்து மறு பிறவியில் மானாகப் பிறந்தார் என்று பழைய கதை உண்டல்லவா? அதை நான் அவருக்கு நினைவூட்டினேன். இதைக் கேட்ட குருநாதர் — அவர்தான் எவ்வளவு எளியவராக இருந்தார்? — மிகவும் கலவரமடைந்து விட்டார். 'நீ சொல்வது ரொம்பவும் நிஜம் போலிருக்கிறதே!' என்றார். மனக தளர்ந்து போய்ச் சோகமயமாகக் காளி மாதாவின் சந்நிதிக்கு விரைந்தார்.

''சில நிமிஷங்களுக்குப் பின் அவர் திரும்பியபோது அவர் முகத்தில் புன்னகை பூத்திருந்தது. 'அயோக்கியப் பயலே! இனி உன் பேச்சைக் கேட்கிறேனா, பார்! அம்மா என்ன சொல்கிறாள் தெரியுமா? நான் உன்னிடம் ஈசுவரனைக் காண்பதால் தான் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறேனாம். உன்னிடம் ஈசுவரனைக் காண முடியாத ஒரு நாள் வருமானால் அதன் பின் உன்னைக் கண்ணால் காண்பதைக் கூட என்னால் தாங்க முடியாதாம்' என்றார்.''

மற்றொரு நாள் நரேந்திரர் மாடியிலிருந்த தமது படிப்பறையில் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். 'நரேன் நரேன்' என்ற குரல் ஆர்வமும், ஆதுரமும் மிக அவர்களிடை பாய்ந்தது. எல்லோரும் எழுந்திருந்தார்கள். சில நாட்களாக நரேன் தட்சிணேசுவரம் செல்லாததால், 'இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி' என்று இறைவனைக் குறித்து மணிவாசகர் பாடுவது போல அவரைத் தேடிக் கொண்டு வந்து விட்டார் குருநாதர். படியிறங்கிச் சென்று அவரை வரவேற்றார் நரேந்திரர். குருநாதரது நயனங்களில் நீர் நிறைந்திருந்தது.

''இப்போதெல்லாம் ஏன் நரேன், நீ என்னைப் பார்க்க வருவதே யில்லை?'' என்று சின்னஞ் சிறு குழந்தை போல் விசித்துக் கொண்டே கேட்டார் பரமஹம்ஸர். ''வா, நரேன், வா! வந்து உன் பாட்டுக்களைப் பாடிக் காண்பி'' என்று கூறி, மாடியறைக்குச் சென்றார்.

நரேந்திரர் தம்புராவை மீட்டலானார். 'ரீம் க்லீம்' என்ற தம்புராவின் நாதமே தேவியின் பீஜாக்ஷரங்களாக ஒலிக்கலாயின. தேவியைக் குறித்த ஒரு பாடலை உள்ளம் உருகப் பாடலானார் நரேந்திரர். என்ன விந்தை! கண்களால் தேவியின் பிரதிமையைக் காணும்போதும், காதுகளால் அவளது மகிமையைக் கேட்கும்போதும், ஸகுணப் பிரம்மம் உண்டா என்று ஐயப்பாடுற்ற அதே நரேந்திரர் இசை என்று வந்தவுடன் தாமாகவே தாயிடம் கசியத் தொடங்கினார்.

நரேனின் சங்கீதம் ராமகிருஷ்ணருக்குச் சமாதி அநுபவத்தை அளித்து விட்டது!

இன்னொரு நாள்.


ஏணி வழியே ஏறிச் சென்று அடையக்கூடிய மச்சு அறையில் நரேந்திரரும் அவரது ஒரு நண்பருமாகப் படித்துக்கொண்டிருந்தனர். அன்றும் சீடரைத் தேடிக் கொண்டு அவரது இல்லத்துக்கு எழுந்தருளிவிட்டார் குருமஹராஜ். அவருக்கு எப்போதும் குற்றேவல் செய்யும் லாடுவும் உடன் வந்திருந்தார். பரமஹம்ஸர் ஏணியில் சில படிகள் ஏறியபோதே மேலே கதவைத் திறந்த நரேந்திரரின் முகம் தெரிந்தது. 'என் அன்பான நரேன்!' என்று கூறிய ராமகிருஷ்ணர் தம் வயமிழந்துவிட்டார். லாடுவும் நரேந்திரரும் ஒருவாறாக அவரைத் தாங்கிப் பிடித்து மேலே கொண்டு வந்து விட்டனர். மேலே வந்ததும் பரிபூரணமாக சமாதியில் ஆழ்ந்து விட்டார் பரம ஹம்ஸர். சமாதி, பரவசம் — இவையெல்லாம் என்னவென்றுகூட அறிந்திராத நரேந்திரரின் நண்பருக்கு ஒரே திகைப்பாகி விட்டது.

''யார் இவர்?'' என்று நரேந்திரரைக் கேட்டார் அவர்.


''இந்த மனிதர் ஒரு இடியட். சரி, நீ வீட்டுக்குப் போ'' என்று அவரிடம் கூறினார் நரேன்.

புதியது

ப்ரோடெக்ஸ் ஒரு சர்வ-காரிய டால்க். அது குடும்பத்தினர் அனைவருக்கும் மிகச்சிறந்தது.



ப்ரோடெக்ஸ் ஒரு உயர்ந்த ரக, மனோரம்மிய நறுமணமுடைய, சர்வ-காரிய டால்க். எல்லாக் குடும்பத்தினருக்கும், குளித்தபிறகும், கோடைக்காலத்தில் குளிர்ச்சிக்கும் மிகச் சிறந்தது. ப்ரோடெக்ஸ் வாங்குங்கள்—மிக மிகப்பெரிய டப்பா—மிகமிகக் குறைந்த விலை.



ப்ரோடெக்ஸ்

ஆல்-பர்ப்பஸ் டால்கம் பௌடர்

PTP-8-7-TAM



சக்தி ஸில்க்குகள் மற்றும் ஸூட்டிங்குகள் • ஒரு போதார் தயாரிப்பு

அணிவதற்கு ஆனந்தம், துவைப்பதற்கு சுலபம்—சக்தி ஸில்க்குகள்! நொடியில் உலரக்கூடிய இவை எத்தனை முறை துவைத்தாலும் சுருக்கம் விழாமல் புதுமைப் பொலிவுடன் விளங்குபவை!- நீடித்து உழைக்கும், மடிப்புக் கலையாத சக்தி ஸூட்டிங்குகளை அணிந்து, நாள் முழுவதும் மலர்ந்த முகத்துடனும், தன்னம்பிக்கையுடனும், திகழுங்கள்!

SHILPI-SM-347A TAM

சிறிதுபோது சென்ற பின் ராமகிருஷ்ணருக்கு இக உலகப் பிரக்ஞை வந்தது. அப்போதுதான் அப்பாவியான லாடுவுக்கும் நரேந்திரர் கூறியது நினைவு வந்தது.

''இடியட் என்றால் என்ன?'' என்று அவர் கபடமில்லாமல் கேட்டார்.

தாம் சற்று முன் கூறியது நினைவில்லாத நரேந்திரர் ''இடியட் என்றால் முட்டாள் என்று அர்த்தம்'' என விளங்கி வைத்தார்.

லாடுவுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

''குருமஹராஜை எப்படி ஐயா, இடியட் என்பீர்'' என்று நரேந்திரரிடம் சண்டைக்குக் கிளம்பினார் அவர்.

நரேந்திரர் அவரைச் சமாதானப்படுத்தினார். ''என் நண்பனுக்குச் 'சமாதி' 'கிமாதி' எல்லாம் விளங்கி வைக்க முடியாத விஷயம். அவனிடம் உண்மையைச் சொல்வதானால் எத்தனையோ விவகரிக்க நேரிடும். இவரோ தன் வயமிழந்திருக்கிறார். ஆகவே அவன் எப்படியோ வீடு போய்ச் சேர்ந்தால் போதும் என்றுதான் ஒரே வார்த்தையில் அப்படிச் சொன்னேன்'' என்றார் நரேந்திரர்.

பித்தன் என்று தன்னைச் சுந்தரமூர்த்தி தூஷித்ததையே பூஷித்ததாகக் கருதிய பெருமான், 'பித்தா பிறை சூடி' என்று அவர் தன்னைப் பாடச் செய்தான். ராமகிருஷ்ணரும் தம்மைப் பித்தராகக் கருதிய நரேந்திரனைத்தான் 'தம்பிரான் தோழராக'ச் செய்துகொண்டார்.

நரேந்திரர் ராமகிருஷ்ணரைப் பற்றிப் பேசும்போது 'அந்தக் கிழவர்' என்று குறிப்பிடுவார். உண்மையில் ராமகிருஷ்ணர் மனித உடலில் வாழ்ந்ததே ஐம்பதாண்டுகள்தான் எனினும் காயக்கிலேசம் செய்ததன் காரணமாக அவர் கிழவராகவே தோற்றமளித்தார். 'பித்தராயினும் அவர் சுத்தர்; கிழவராயினும் அவர் பச்சைப் பசும் குழந்தை' என்றறிந்துதான் அவருடைய குழந்தையானார் நரேந்திரர். பரமஹம்ஸரை நரேந்திரர் எப்பெயரிட்டுஅழைத்தாலும் அவரது அன்பை முற்றிலும் புரிந்துகொண்டு ரசித்தார்; ருசித்தார்.

''உலகத்து மாந்தர்கள் அன்பை எங்கே கண்டபடி? அவர்களுக்கு அன்பை ஒரு காட்சிப் பொருளாக அரங்கேற்றத்தான் தெரியும். குருமஹராஜ் ஒருவர் தான் உண்மையாக அன்பு செய்பவர்'' என்று நரேந்திரர் கூறுவார்.

இந்த அன்பை அறிந்தே அவரிடம் மிகவும் ஸ்வாதீனமாகப் பழகினார் நரேந்திரர். தமக்குத் தாயாக இருக்கும் பரமஹம்ஸர் யாரிடம் குழந்தையாகி விடுவாரோ அந்தக் காளி மாதாவைப் பற்றிக்கூடப் பரமஹம்ஸரிடமே பரிகசிப்பார்.



''என்னப்பா இது! இவ்வளவு நேரமா 'ஓ'ன்னு கத்தி வியாபாரம் பண்ணிக்கிட்டிருந்தே....என்னைப் பார்த்ததும் சட்டுன்னு நிறுத்திட்டே, என்ன விக்கறே?''

''பெல்டுங்க...''

''என் அன்னையான காளியை ஏற்காத நீ எதற்காக இங்கே வருகிறாய்?'' என்று ஒரு நாள் நரேந்திரரைக் கேட்டுவிட்டார் ராமகிருஷ்ணர்.

''பேஷ்! இங்கே நான் வருகிறேன் என்றால் அவளை நான் ஒப்புக்கொள்ள வேண்டுமா, என்ன? நான் இங்கே வருவதற்குக் காரணம்....உங்கள்மேல் எனக்கு அன்பு இருப்பதுதான்'' என்று தம் இதயத்தில் ஊறும் அமுதத்தை வார்த்தையில் வெளியிட்டார் நரேந்திரர்.

''ரொம்ப சரி, இன்னும் கொஞ்ச நாளிலேயே நீ அவளை ஏற்கப் போகிறாய். ஏற்பது மட்டுமல்ல; அவள் பெயரைச் சொன்னாலே கதறி அழப் போகிறாய்'' என்றார் முக்காலமும் உணர்ந்த முனிவர்.

மற்றச் சீடர்களை நோக்கிப் பரமஹம்ஸர் கூறுவார்: ''பரம்பொருளின் உருவங்களில் இந்தப் பிள்ளைக்கு நம்பிக்கை இல்லை. அது என் கற்பிதத் தோற்றமே என்கிறான். பிரத்தியட்சமாக நிருபணமானால் ஒழிய இவன் எதையும் ஒப்புக் கொள்ள மாட்டான். நிறையப் படித்தவன் இவன் — நன்றாகப் பாகுபாடு செய்து முடிவுகட்டும் ஆற்றல் இவனுக்கு உண்டு.''

பாகுபாடு செய்து சரியான முடிவுக்கு வருவதுதான் விவேகம் எனப்படும். ஆத்மாவுக்கு உகந்தது எது, உகவாதது எது என்று இப்படிப் பகுத்துப் பார்த்து, கொள்ள வேண்டியதைக் கொண்டும் தள்ள வேண்டியதைத் தள்ளியுமே ஜீவ பிரம்ம ஐக்கியம் என்ற சாதனையில் முதற்படி வைக்கிறான் சாதகன். ஆதி சங்கரர் வகுத்துள்ள நான்கு படிகளில் விவேகமே முதலாவது. இந்த விவேகம் தம்மிடம் இருப்பதாகக் குருநாதன் சொன்னதை நினைந்தே பிற்காலத்தில் நரேந்திரர் விவேகாநந்தர் என்று நாமம் தரித்தார் போலும்!

ஒவ்வொருவரையும் அவரது மனச் சார்புகளுக்கேற்ற வேறு வேறு வழிகளில் அழைத்துச் செல்லுவதில் மிகவும்தேர்ந்தவர் ராமகிருஷ்ண முனிவர். ஒரு நோவுக்கு ஔஷதமாக இருப்பது இன்னொரு நோவுக்கு விஷமாகிறது. இதே போல உள்ளத்தில் ஒவ்வொரு விதமான சார்புள்ளவர்களையும் வெவ்வேறு மார்க்கங்களைக் கொண்டு உயர்த்தியவர் தட்சிணேசுவரத்துத் தவ முனிவர்.

நரேந்திரர் தமது இளமைத் துடிப்பில் மற்றவர்களையும் தம் வழிக்கே திருப்ப முயன்றார். உருவ வழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த ராகாலை பிரம்ம சமாஜத்தில் சேருமாறு தூண்டினார் நரேன். எனினும், ராகாலால் பவதாரிணி அன்னையைக் காணும் போது அவள் முன்பு தண்டனிட்டு எழாமல் இருக்க முடியவில்லை. ராகால் மூர்த்தி வழிபாடு செய்வதைக் கண்டு விட்ட நரேந்திரர் அவரைக் கண்டிக்கலானார். ராகால் கோபமறியாத இனிய ஜீவன். எனவே, அவர் நரேந்திரரிடம் வாதம் புரியவில்லை; அவரிடமிருந்து பதமாக விலகலானார்.

பரமஹம்ஸருக்கு இது எப்படியோ தெரிந்து விட்டது. நரேந்திரரை அழைத்து அவரிடம், ''ராகாலை அச்சுறுத்தாதே! அவன் உன்னிடம் பயந்து கிடக்கிறான். உருவங்கள் தரித்துத் தோன்றும் பரம்பொருளிடம் அவன் நம்பிக்கை கொண்டிருக்கிறான். அவனை நீ எப்படி மாற்ற முடியும்? ஆண்டவனின் உருவமற்ற நிலையை ஆரம்ப காலத்திலேயே உணர்வது எல்லோருக்கும் சாத்தியமல்ல'' என்றார்.

எனினும், அவ்வப்போது நரேந்திரருக்குத் தம் ஒருவரின் கோணமே சரியானது என்ற அபிமானம் உண்டாகி விடும். அப்போதெல்லாம் ராமகிருஷ்ண தேவர் அவரிடம், ''என் பிள்ளாய், சத்தியத்தை எல்லாக் கோணத்திலிருந்தும் பார்க்க முயல்வாயாக'' என்று கூறுவார். அந்த நாளும் வரத்தான் போகிறது!


தம் மனசுக்குச் சரி என்று தோன்றியதை எடுத்துரைக்க நரேந்திரர் தயங்கியதே கிடையாது. ராதா — கிருஷ்ண சரிதம் நரேந்திரருக்கு ஏற்கவில்லை. சரித்திரபூர்வமானதல்ல அது என்பது அவரது கருத்து. அதோடு கிருஷ்ணனுக்கும் ராதைக்குமிடையே இருந்த தொடர்பு நெறி பிறழ்ந்தது என்றும் அவர் எண்ணினார். பரமஹம்ஸரால் எத்தனை முயன்றும் நரேந்திரரிடம் நம்பிக்கையைத் தோற்றுவிக்க முடியவில்லை. எனவே ஒரு நாள் அவர் சொன்னார்: ''சரி, ராதை என்று ஒருத்தி வாஸ்தவத்தில் இல்லை என்றே வைத்துக் கொள். ஆனால் நீ ஏன் ராதையைப் பற்றி எண்ண வேண்டும்? ராதையும், மற்ற கோபிகளும் கண்ணன் மீது கொண்ட எல்லையற்ற அன்பில் நீ ஏன் மனசைச் செலுத்தக் கூடாது?''

நரேன் 'அடங்காப் பிடாரி'யாக இருப்பதில் ராமகிருஷ்ணருக்கு உள்ளூற ஒரு திருப்தி. புத்திபூர்வமாக உழைத்து உழைத்துப் பாடுபட்டு, ஐயங்களைப் போக்கிக் கொள்வது அந்தப் புத்தியின் எல்லையை அறிந்து கொள்வதற்கு உதவும் என்று அவர் கருதினார். ஐயம் தோன்றி விட்டால் அதை மூடி மறைப்பது தவறல்லவா? இன்றைக்கு நரேந்திரரிடம் இப்படியெல்லாம் எதிர்மறைக் கருத்துக்கள் தோன்றி அவற்றை அவர் தீர்த்துக் கொண்டால் தானே நாளைக்கு இதே போன்றவர்களை அவர் திருத்த முடியும்?

நரேந்திரர் பரமஹம்ஸரையே சந்தேகித்து, துணிவுடன் பரீட்சை பார்த்தார்.

ஒரு நாள் ராமகிருஷ்ணர் கல்கத்தாவுக்குச் சென்றிருந்த போது நரேந்திரர் தட்சிணேசுவரத்துக்கு வந்திருந்தார். குருநாதர் சொல்லியிருந்த ஒன்று அவருக்கு நினைவு வந்தது. 'பொன்னையும் பொருளையும் என்னால் ஏற்கவே இயலாது; என்னுடைய உடலமே செல்வத்தைத் தொட்டால் தாங்காது துடிக்கும்' என்று ராமகிருஷ்ணர் கூறியதுண்டு. இது உண்மைதானா என்று பரிசோதிக்கத் தலைப்பட்டார் நரேந்திரர். ராமகிருஷ்ணருடைய படுக்கையின் அடியில் ஒரு நாணயத்தை வைத்தார்.

குருதேவர் திரும்பி வந்தவுடன் படுக்கையில் அமர்ந்தார். உடனே ஏதோ விஷ ஜந்து தீண்டியது போல அதிலிருந்து துள்ளிக் குதித்தார். நரேந்திரர் பேசாது நிற்க, பணியாள் ஒருவர் படுக்கையை உதறினார். நாண




தீபாவளி வெளியீடு
சென்னை பாரகன், சயானி
மற்றும் தென்னாடெங்கும்
MAV
எம்.ஏ.வி
பிக்சர்ஸ்
துளசி மாடம்
கதை, வசனம் - தமிழ்மாறன் • பாடல்கள் - கா.மு.ஷெரீப், திருச்சி தியாகராஜன்
சங்கீதம் - K.V. மஹாதேவன் • ஸ்டுடியோ - ரத்னா சேலம்.
டைரக்ஷன் - K.B. சீனிவாசன்
ELEGANT

யம் உருண்டோடிற்று. நரேந்திரர் தலை குனிந்து வெளியேறினர்.

பரமஹம்ஸரும் நரேந்திரரைப் பல முறை பரிசோதித்ததுண்டு. ஒரு நாள் அவர் நரேந்திரரின் உடல் முழுவதையும் அணு அணுவாகச் சோதனையிட்டார். உடலமைப்பு, நடை, பேச்சு, சிரிப்பு இவற்றைக் கொண்டே ஒருவரின் உள்ளத்தைப் படிக்கத் தெரிந்திருந்தவர் பரமஹம்ஸர். அவர் நரேந்திரனின் தேகத்தைப் பரீட்சை செய்து பார்த்து, "உன் உடலமைப்பு சரியாகவே இருக்கிறது. ஒரே குறை என்னவெனில், நீ உறங்கும் போது சற்றே 'புஸ்' 'புஸ்' என மூச்சு விடுகிறாய். இப்படி மூச்சு விடுபவர்கள் அல்பாயுள்காரராக இருப்பரென யோகிகள் சொல்லுகிறார்கள்" என்றார்.

நரேந்திரரைக் காணா விட்டால், பரமஹம்ஸர் என்ன பாடுபட்டார் என்பதை நாம் முன்பு கண்டோம். எனினும் அவர் நரேந்திரரை எப்படிப் பரிசோதனை செய்தார் பாருங்கள்:

ஒரு நாள் நரேந்திரர் தட்சிணேசுவரத்துக்கு வந்த போது அவரைக் கண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை பரமஹம்ஸர். நரேந்திரர் குருநாதரை வணங்கினார். அப்போதும் அலட்சியமாகவே இருந்தார் குரு. அவர் பக்கவில் அமர்ந்தார் சிஷ்யர். அப்படி ஒருவர் அருகில் உட்கார்ந்திருப்பதை குருமஹராஜ் கவனித்ததாகவே தெரியவில்லை. அவர் ஏதோ தீர்க்கமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார் போலும் என்றெண்ணிய நரேந்திரர் அறைக்கு வெளியே வந்தார். உள்ளே பரமஹம்ஸர் மற்றவர்களுடன் உரையாடிக் கொண்டிருப்பது கேட்டது. உடனே நரேந்திரர் ஆர்வத்துடன் அவரது திருமுன்னர் சென்றார். என்ன ஆச்சரியம்! இம்முறை ராமகிருஷ்ணர் அலட்சியம் செய்தது மட்டுமில்லை. நரேந்திரருக்கு எதிர்ப்புறமாகச் சுவரை நோக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டார்.

ஒரு வாரம் சென்றது. நரேந்திரர் மீண்டும் தட்சிணேசுவரத்துக்கு வந்தார். மாலை மங்கிய பின்தான் வீட்டுக்குக் கிளம்பினார். 'வந்தாயா, போனாயா?' என்ற வார்த்தையே ஆசானிடமிருந்து வரவில்லை.

மூன்றும் முறையாக தட்சிணேசுவரத்துக்கு வந்தார் நரேந்திரர். நான்காம் முறையும் வந்தார். அவர் வராத இடைக்காலத்தில் ராமகிருஷ்ணரும் நரேந்திரரின் சௌக்கியத்தைப் பற்றிக் கேட்டறிந்து வந்தார். எனினும் அவர் வந்த போது ஏனோ கல்லாகச் சமைந்திருந்தார் குருதேவர்.

இப்படியே ஒரு மாதமாகி விட்டது. நரேந்திரர் முன்போலவே வந்து கொண்டுதான் இருந்தார். குருநாதர் தம்மைப் புறக்கணிப்பது பற்றி அவர் யாரிடமும் குறையும் கூறவில்லை.

அதற்கு மேலும் பரமஹம்ஸர் எப்படிப் பொறுக்க முடியும்? சிஷ்யரால் அவரது அலட்சியத்தை எவ்வளவு காலம் வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்ள முடிந்திருக்கும்; ஆனால் பரமஹம்ஸராலேயே தாம் செய்யும் அந்த அலட்சியத்தை அதற்கு மேல் தாங்க முடியவில்லை. "நரேன், உன்னோடு நான் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் இருக்கிறேன். அப்படியும் நீ வந்து கொண்டிருக்கிறாயே! இது எப்படி?" என்று சிஷ்யனைக் கேட்டே விட்டார் ஆசான்.

"நீங்கள் பேசி நான் கேட்க வேண்டும் என்பதற்காக நான் இங்கே வருவதாகவா எண்ணுகிறீர்கள்? நான் அதற்காக வரவில்லை. எனக்கு உங்களிடம் அன்பு இருக்கிறது. அந்த அன்பினால் உங்களைக் காண விரும்புகிறேன்" என்றார் நரேந்திரர். (தொடரும்)

நாடாண்ட நங்கையர்

சுல்தானா ரஜியா

இந்தியாவின் மீது பல தடவை படையெடுத்து வந்து வெற்றி கண்டு முஸ்லிம் ஆட்சிக்கு அடிகோலி விட்டு 1206-ம் வருஷம் இறந்து போன முகம்மது கோரிக்குப் பிறகு டில்லியைத் தலைநகராகக் கொண்டு ஆளத் தொடங்கிய அடிமை அரசர்கள் முதல் மொகலாயர் ஆட்சி முடியும்வரை மொத்தமாகப் பார்த்தோமானால், ஒரே ஒரு பெண்ணரசிதான் தென்படுகிறாள். அவள்தான் சுல்தானா ரஜியா. ரஜீயாவுத்தீன் என்றும் அழைப்பர் இவளை. இவள் அடிமை அரசர்களின் வரிசையில் நான்காமவள். இவள் ஆண்டது 1236 முதல் 1240ம் வருஷம் வரையில். இங்கே ஒரு வார்த்தை. அடிமை அரசர்கள் என்று சரித்திர நூல்கள் சம்பிரதாயமாக அழைத்து வருகின்றனவாயினும் உண்மையில் இது சரியில்லை. அடிமைத்தனமும், அரசத்தன்மையும் எப்படி ஒன்றுசேர முடியும்? உண்மைக் கருத்து என்னவென்றால், ஒரு காலத்தில் அடிமைகளாயிருந்து, பிறகு தங்கள் திறமையைக்காட்டி, விடுதலை



பெற்று அரச பீடத்தை அடைந்தவர்கள் என்பதுதான். இதைச் சிறிது விரித்துக் கூறுவது அவசியம். யுத்தத்தில் பிடிபட்டவர்களையும், வறுமைகாரணமாகப் பெற்றோர்களால் காப்பாற்றமுடியாத நிலையிலுள்ள இளைஞர்களையும் அடிமை கொள்ளும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்து வந்தது. இங்ஙனம் அடிமை கொள்ளப்பட்டவர்களில் அநேகர், தங்களுடைய அறிவினாலும், உழைப்பினாலும் அடிமை கொண்ட எஜமானர்களின் விசுவாசத்தைப் பெற்று, விடுதலையடைந்து மேலான பதவியை அடைந்தார்கள். ஒரு சிலர் இந்த எஜமானர்களுடைய குடும்பத்துப் பெண்களை மணந்து கொண்டும் இருக்கிறார்கள். இப்படி முன்னுக்கு வந்தவன்தான் அடிமை அரசர்களில் முதல்வனான குத்புத்தீன் ஐபெக். இவனையும், இவனுக்குப் பின்னால் இவன் வழி வந்தவர்களையும் அடிமை அரசர்கள் என்று அழைப்பது சம்பிரதாயமாகி விட்டது.

குத்புத்தீன் ஐபெக், டில்லி சிங்காதனத்தில் நான்கு வருஷ காலம் (1206 முதல் 1210ம் வருஷம் வரை) வீற்றிருந்தான். ஒரு நாள் குதிரை மீதேறிப் பந்தாடிக் கொண்டிருக்கையில்—இந்த விளையாட்டை 'போலோ' என்று ஆங்கிலத்தில் அழைப்பர். - குதிரையிலிருந்து கீழே விழுந்து இறந்து போனான்.

இவனுக்குப் பிறகு இல்டுட் மிஷ் என்பவன் பட்டத்துக்கு வந்தான். இவனை அல்டாமிஷ் என்றும் சிலர் அழைப்பர். இவனும் ஓர் அடிமையாயிருந்தவனே. இவனுடைய அழகையும், சாதுரியத்தையும் பார்த்துக் குத்புத்தீன் இவனை ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கித் தன் ஆதரவில் வைத்துக் கொண்டான். இவனும் படிப்படியாக, தன் சாமர்த்தியத்தினால் குத்புத்தீன் மதிப்பிலே வளர்ந்து வந்து கடைசியில் அவனுடைய மகளை மணந்து கொண்டான். அவனுக்குப் பிறகு ஆளும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டான்.

இவன் 1211 முதல் 1236ம் வருஷம் வரை சுமார் இருபத்தாறு வருஷ காலம் ஆண்டான். இவன், பல போர்கள் நடத்தி, தன் அதிகார எல்லையை விஸ்தரித்துக் கொண்டான்; கலைஞர்களையும், புலவர்களையும் வெகுவாக ஆதரித்தான். இவன்தான் டில்லியைச் சேர்ந்தாற் போல் இருக்கும் குதுப்மினார் என்ற ஸ்தூபியையும், சுற்றியுள்ள கட்டிடங்களையும் விரிவுபடுத்தி 1230-ம் வருஷத்துக்குப் பிறகு பூர்த்தி செய்தான்.

இல்டுட்மிஷ் மன்னன் 1236ம் வருஷம் ஏப்ரல் மாதம் இருபத்தொன்பதாம் தேதி இறந்து போனான். இவன் மரணப் படுக்கையில் இருந்த பொழுது சுற்றியிருந்த ஆஸ்தானிகர்கள், ''தங்களுக்குப் பிறகு அரச பதவியில் யார் அமர வேண்டும்? தங்கள் உத்தேசம் என்ன?'' என்று கேட்டார்கள். ''என்னுடைய பிள்ளைகளில் யாருக்கும் அரச பதவியை வகிக்கும் தகுதியில்லை. ஆகையால், என்னுடைய மகள் ரஜியாவை அரச பதவிக்கு நியமிக்கிறேன்'' என்று கூறினான். இதைக் கேட்ட ஆஸ்தானிகர்கள், ''ஒரு பெண் அரசபீட பதவியை வகிப்பதாவது?'' என்று முணுமுணுத்தார்கள். இதைக் கேட்ட இல்டுட் மிஷ், ''உங்களுக்குத் தெரியாது அவளுடைய திறமை. என் ஆண் பிள்ளைகளைக் காட்டிலும் மேலான ஆண் பிள்ளையாக இருந்து அவள் அரசு நடத்துவாள்'' என்று சொல்லி விட்டுக் கண் மூடிக் கொண்டான்.

ஆனால் ஆஸ்தானிகர்கள் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றத் தயாராக இல்லை;

இடமிருந்து வலமாக: சுல்தானா ரஜியா, குதுபுத்தீன், மகமத் கோரி

சரித்திர மாணுக்கள்



ஒரு பெண் பிள்ளைக்குத் தலை வணங்குவதாவது என்று சொல்லி இல்டுட்மிஷினுடைய மூத்த மகன் ருக்னுத்தீன் பீருஸ் என்பவனை அரச பீடத்தில் அமர்த்தினார்கள். அவன் சுகபோக வாழ்க்கைக்கு மட்டுமே தகுதியுடையவனாக இருந்தான். தன் பதவிக்குத் தகுந்தபடி நடந்துகொள்ளவும் அவனுக்குத் தெரியவில்லை; சுமார் ஆறுமாத ஆளுகையோடு இவன் வாழ்வு முற்றுப் பெற்று விட்டது.

பிறகு ரஜியா அரச பீடத்தில் அமர்ந்தாள். இவள் அரச பதவியை ஏற்கக் கூடாது என்று முதலில் ஆட்சேபித்தவர்களே, இப்பொழுது இவளுக்கு ஆதரவு தந்தார்கள்.

ரஜியா சிறு வயதிலேயே குர்ஆனை நன்றாக மனப் பாடம் பண்ணியிருந்தாள். இவளுடைய ஞாபக சக்தியைக் கண்டு இல்டுட்மிஷுக்கு ஒரே ஆச்சரியம். வேறு பல துறைகளிலும் இவள் பயிற்சி பெற ஏற்பாடு செய்தான். அவற்றில் இவள் நல்ல தேர்ச்சி பெற்றாள்.

இவள் பட்டமேற்றவுடன், பீருஸ் ஆண்ட போது கலகத்துக்குக் கிளம்பியவர்கள் மீது படை யெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இவளுக்கு ஏற்பட்டது. அப்படியே சென்று கலகம் செய்தவர்களில் முக்கியமானவர்களைத் தலை தூக்க முடியாதபடி செய்தாள்.

இங்ஙனம் தனக்கு எதிர்ப்பு இல்லாமற் செய்து கொண்டு, ராஜ்ய நிர்வாகத்தின்மீது கவனம் செலுத்தினாள். சிங்காதனத்தில் அமர்ந்து அரச காரியங்களைக் கவனிக்கிற போதும்சரி, வெளியில் போர்க்களங்களுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ செல்ல நேர்கிற போதும் சரி, முகமூடி இல்லாமலும் ஆண் உடையிலுமே இருப்பாள். இவள் சுறுசுறுப்பாக அரச அலுவல்களைக் கவனித்து வருவதைப் பார்த்து ஆஸ்தானிகர்கள் பிரமித்துப் போனார்கள். ஆனால் இவர்களில் ஒரு சிலருக்கு இவள் ஒரு பெண்தானே என்ற அலட்சியம் இருந்தது; உள்ளூற இவள் மீது பொறாமையும் கொண்டிருந்தார்கள். அரசவையில் இப்படிப்பட்டவர்களுடைய செல்வாக்கு வர வர வளர்ந்து வந்தது.

ரஜியாவுக்கு இது தெரியாமல் இல்லை. இவர்களுடைய செல்வாக்கை மேலும் வளர விடாதபடி செய்ய, இவர்களுக்குப் போட்டியாக அபிசீனிய நாட்டினனான ஜலாலுதீன் யாகூப் என்ற ஓர் அடிமையை மேலான ஒரு பதவியில் வைத்து, அவனுக்கு எல்லா ஆதரவுகளையும் காட்டி வந்தாள். இவள் குதிரை மீது ஏறிக் கொண்டு வெளியே புறப்பட முற்படுகிற போது, அவன் இவளைக் குதிரை மீது ஏற்றி விடுவான். இவள் கூடவே எப்பொழுதும் இருப்பான். ஓர் அந்நியனுக்கு இவள் இப்படிப் பரிவு காட்டி வருவது இவளிடத்தில் விசுவாசம் காட்டி வந்த ஆஸ்தானிகர்களுக்குக் கூடப் பிடிக்கவில்லை. இவர்களும், ஏற்கனவே இவள்மீது பொறாமை கொண்டிருந்தவர்களும் சேர்ந்து இவளைச் சிங்காதனத்திலிருந்து அப்புறப்படுத்த முனைந்தார்கள்.

முதலில், பஞ்சாப் மாகாணத்தை இவளுடைய பிரதிநிதியாயிருந்து ஆண்டு வந்த அயாஸ் என்பவன் ரஜியாவுக்கு விரோதமாகக் கிளம்பினான். அவன் மீது இவள் படையெடுத்துச் சென்று அடக்கினாள்.

இதற்குப் பிறகு பாட்டிண்டா என்ற ஒரு பிரதேசத்தின் தலைவனாகிய அல்ட்டூனியா என்பவன், ரஜியாவுக்கு விரோதமாகக் கிளம்பினான். இவனை அடக்க ரஜியா யாகூப்பின் துணைகொண்டு பெரும்படையுடன் சென்றாள். ஆனால் சென்று போர் தொடங்க முற்பட்ட சமயத்தில் இவளுடைய ஆஸ்தானிகர்களில் சிலர் எப்படியோ கபட நாடகம் நடித்து யாகூப்பைக் கொலை செய்து விட்டனர். அது மட்டுமன்று; ரஜியாவையும் சிறைப்படுத்தி, அல்ட்டூனியாவின் வசம் ஒப்புவித்து விட்டு இவளுடைய சகோதரன் பஹ்ராம் என்பவனைச் சுல்தானாகப் பிரகடனம் செய்தனர்.

ஆனால் ரஜியா, சிறைப்பட்டிருந்த நிலையிலும் மனந் தளர்ச்சியடையவில்லை. இதிலிருந்து விடுதலைபெறச் சமயம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். கடைசியில், தன்னுடைய சாமர்த்தியத்தினாலும், இனிய சுபாவத்தினாலும் அல்ட்டூனியாவைத் தன் வசமாக்கிக் கொண்டு அவனை விவாகம் செய்து கொண்டு விட்டாள். பிறகு இவளும், அல்ட்டூனியாவும் சேர்ந்து ஒரு பெரும் படை திரட்டிக் கொண்டு டில்லி சிங்காதனத்தைக் கைப்பற்ற பஹ்ராம் மீது படையெடுத்துச் சென்றார்கள். இவர்களுடைய படையைக் காட்டிலும் பஹ்ராமின் படை மிகப் பலமுடையதாயிருந்தது. எனவே, அந்தப் படையை இவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை; தங்கள் படையுடன் பின்வாங்கி விட்டார்கள். இப்படிப் பின்வாங்கி வருகையில், பஹ்ராமின் ஆட்கள் வசம் அகப்பட்டுக் கொண்டார்கள். 1240ம் வருஷம் அக்டோபர் மாதம் பதின்மூன்றும் தேதி இருவரும் கொலை செய்யப்பட்டு விட்டனர். இதனோடு ரஜியாவின் ஆட்சி முற்றுப் பெற்று விட்டது.

பார்க்கப் போனால் ரஜியா ஆண்டதெல்லாம் சுமார் மூன்றரை வருஷ காலம்தான். இந்தச் சொற்ப காலத்துக்குள், நாட்டில் தன்னால் இயன்ற வரையில் அமைதியை நிலைநாட்ட முயன்றாள். இவளுடைய ஆளும் திறனைப் பற்றி ஒரு சரித்திராசிரியன் பின்வருமாறு வியந்து பாராட்டுகிறான்: ''இவள் ஒரு சிறந்த அரசி; நிதானமும் நேர்மையும் படைத்தவள்; எல்லோருடைய நன்மைக்காகவும் பாடுபட்டாள்; அறிஞர்களை ஆதரித்தாள்; எல்லாருக்கும் ஒரே மாதிரியான நீதி கிடைக்கும்படி செய்தாள்; குடிமக்களின் நலன் ஒன்றையே தன் சிந்தனையில் கொண்டிருந்தாள்; எல்லாவற்றுக்கும் மேலாக இவளுடைய போர்த்திறம் வியக்கத்தக்கதாயிருந்தது. ஆண் மகனாயுள்ள ஓர் அரசனுக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ, அவை யாவும் இவளிடம் குடி கொண்டிருந்தன. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஓர் அரசனைப் போலவே நடந்து கொண்டாள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவள் ஒரு பெண்ணாக இருந்து விட்டபடியால் இவளுடைய ஆட்சி சீக்கிரத்தில் முடிவு பெற்றுவிட்டது.''

உங்கள் நினைவுடன் செய்த புதிய மெர்ரிட்* ஸ்டைல்-ஆர்ம்


நவீன அமைப்போடு நேர்த்தியாக வேலை செய்யக்கூடியது

இதன் நவீன மிடுக்கான தோற்றத்தை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்... மிகவும் எளிதாக கடினமின்றி தைக்கக்கூடிய புதிய மெர்ரிட் ஸ்டைல் ஆர்ம் கண்ணைக்கவரும் இரண்டு டோன் பழுப்பு அல்லது சாதாரண கருப்பு நிறங்களில் கிடைக்கும். மெர்ரிட் ஸ்டைல்-ஆர்ம் எல்லாவகையிலும் அலங்காரத் தோற்றமளிக்கிறது...சிறந்த கவனத்துடன் மெர்ரிட்டிற்கே உரிய வேலைப்பாடுகளுடன் கூடியது. தனிப்பெருஞ் சிறப்புகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

...ஸிங்கரின்* சிறப்புகளுடன் தரம் குறையாது தயாரிக்கப்பட்டது. விற்பனைக்குப் பின் உடனடியாக வழங்கப்படும் தவருத சேவை.

புதிய இலக்கமிட்ட டென்ஷன் ரெகுலேடர்

சீர்திருத்தி செம்மையாக்கப்பட்ட புதிய லாக்கிங் நையல் ரெகுலேடர்



முழு விபரங்களையும் உங்கள் அருகாமையிலுள்ள அங்கீகாரம்பெற்ற ஸிங்கர் வியாபாரியிடமோ அல்லது ஸிங்கர் கடையிலோ கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்

S.G.&TAN

நாற்பத்தைந்தாவது அத்தியாய

காலமே அடங்கி ஒடுங்கி இயக்கமற்றுப் போய் விட்டது போல் மல்லிகைப் பந்தல் நகரமெங்கும் ஒரு வகை அசதி தெரிந்தது. மென்று சுவைத்து நிதானமாகச் சாப்பிடுகிறவனுக்குச் சோற்றில் உள்ள கல் தெரிகிறாற் போல் நின்று நிதானித்துப் பார்க்கிறவனுக்கு வாழ்க்கையின் துன்பங்கள் தெரிகின்றன. தன் வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் துன்பங்கள் எதிர் கொண்டு தெரிவதைச் சத்தியமூர்த்தி உணர்ந்தான். பிறர் பொறாமைப்படுவதற்கும் சிந்திப்பதற்கும் காரணமில்லாமலே தான் 'ஆளாகி விடுவதைப் பல சமயங்களில் அவன் புரிந்து கொண்டிருக்கிறான்.

பூபதியின் மரணத்துக்கு அநுதாபம் தெரிவித்துக் கல்லூரி மாணவர்கள் நடத்திய இரங்கற் கூட்டத்தில் தான் மனம் உருகிச் சொற்பொழிவாற்றியதற்கும் வம்புக்காரர்கள் என்ன அர்த்தம் கற்பித்துப் பேசிக் கொள்ளுகிறார்கள் என்பதைக் கேட்டு அவன் மனம் வருந்தினாலும் பொறுத்துக் கொண்டான். மிருகத் தன்மைகள் மனிதனிடம் இருக்கக் கூடாது என்றுதான் இலட்சியவாதிகள் ஆசைப்படுகிறார்கள். ஆனால் மிருகத் தன்மைகள் இல்லாத மனிதர்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வாழ்வில் தென்படுகிறார்கள் என்று எண்ணத் தோன்றியது அவனுக்கு. அநுதாபஊர்வலமும், கூட்டமும்முடிந்து அவன் அறைக்குத் திரும்பிய போது மாலை ஐந்து மணிக்கு மேல் ஆகி விட்டது. மழை 'இதோ வந்து விட்டேன்' என்று பயமுறுத்துவது போல் மேகங்கள் கவிந்து இருட்டிக் கொண்டிருந்தது. மழையை உறுதியாக எதிர்பார்த்துப் பாதுகாப்புச் செய்து கொண்டதுமாதிரி மனிதர்கள் கரும் பூதங்களைப் போல் மழைக் கோட்டுக்குள் புகுந்து நடமாடிக் கொண்டிருந்தார்கள். 'லேக் அவென்யூ'வில் மரங்களின் உச்சிகளில்கூட மேகங்கள் வந்து தழுவினாற்போல்தெரிந்தன. சத்திய





மூர்த்தி நேரே மாடிப் படியேறி அறைக்குப் போகாமல் — குமரப்பனுடைய கடைக்குள் நுழைந்தான். குமரப்பன் ஏதோ பெரிய விளம்பரப் பலகை ஒன்றைத் தரையில் வைத்துக் கீழே படுத்து விட்டாற் போல் சாய்ந்து அதில் எழுதிக் கொண்டிருந்தான்.

சத்தியமூர்த்தி கடைக்குள் வருவதைப் பார்த்துவிட்டு, ''ஒரு பதினைந்து நிமிஷம் அந்த நாற்காலியில் உட்கார்ந்து செய்தித் தாளைப் படித்துக் கொண்டிரு சத்தியம்! இந்த வேலையை முடித்து விட்டு வருகிறேன். இது ஒரு ஜவுளிக் கடை போர்டு. தீபாவளி சீஸனுக்காக எழுதச் சொல்லியிருக்கிறார். விரைவில் முடித்துக் கொடுத்துவிட வேண்டும்'' என்றான் குமரப்பன்... ''ஆகா! தாராளமாக உன் வேலையை முடித்துவிட்டு வா! நான் நீ வரும் வரை காத்திருக்கிறேன்'' என்று நண்பனுக்கு மறுமொழி கூறிய சத்தியமூர்த்தி நாற்காலியில் அமர்ந்து சிறிது நேரம் செய்தித் தாளைப் படித்தான். அப்புறம் நண்பனுடைய அந்தச் சிறிய

கடையை நன்றாக உற்றுப் பார்த்துக் கவனிப்பது போல அங்கும் இங்குமாக உலாவினேன். ஒரு மூலையில் 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற சிறிய எச்சரிக்கைப் பலகைகள் — எழுத்துடனும் நடுவில் ஒரு நாய்த் தலைப் படத்துடனும் பளபளவென்று புதியவண்ணம் மின்னிடக் கிடந்தன. இன்னொரு மூலையில் சிவப்பு வண்ணத்தில் 'தொடாதே அபாயம்' என்ற எச்சரிக்கைப் பலகைகளும் சில இருந்தன. சத்தியமூர்த்தி இந்த விளம்பரப் பலகைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே குமரப்பன் தன் வேலையை முடித்துக் கொண்டு கைகழுவி விட்டு அவனருகே வந்து நின்றான். அப்போது குமரப்பனுடைய முகத்தில் குறும்புத்தனமானதொரு மலர்ச்சி தெரிந்தது.

''என்னடா சத்தியம்! நமது கலைக்கூடத்தில் உருவாகும் அமர இலக்கியங்களையெல்லாம் இவ்வளவு கவனமாகப் பார்க்கிறாயே? இந்தக் கடை ஆரம்பமான நாளிலிருந்து இங்கே அதிகமாகச் செலவழிந்திருக்கிற போர்டுகள் என்ன தெரியுமா? 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற போர்டுதான். பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன் இங்கே ஒரு 'டாக் — ஷோ' (நாய்க் காட்சி) நடந்ததே, அந்த நாய்க் காட்சியில் பலர் புதிய நாய்கள் விலைக்கு வாங்கினார்கள். அதோடு நம் கடைக்கு வந்து இந்தப் 'போர்டி'லும் ஒன்று வாங்கிக் கொண்டு போனார்கள். ஒவ்வொரு பங்களாவிலும் நாய்கள் இருக்கும் என்பதும் அவை கடிக்கும் என்பதும் — எங்கும் எல்லாருக்கும் தெரிந்த உண்மைதானே? அப்படி இருக்கும் போது 'நாய்கள் ஜாக்கிரதை' என்று இரண்டு வார்த்தைகளை எழுதி ஏன் நேரத்தை வீணாக்க வேண்டும்? சும்மா — 'ஜாக்கிரதை' என்று மட்டும் ஒவ்வொரு பங்களாவின் வாசற் கதவிலும் போர்டு போட்டால் போதுமே? அந்தப் போர்டைப் பார்த்ததுமே அது ஒரு பங்களா என்பதையும் — அதற்குள் நாய்கள் இருக்கும் என்பதையும்— அவை கடிக்கும் என்பதையும் பார்த்தவன் தெரிந்து கொள்ள முடியாதோ? என்று முந்தா நாள் போர்டு வாங்க வந்த ஓர் பணக்கார ஆளிடம் விளையாட்டாகப் பேசப் போய் அவன் என்னிடம் பழியாகச் சண்டைக்கு வந்து விட்டான். நானும் அவனைச் சும்மாவிடவில்லை. உடனே 'தொடாதே! அபாயம்' என்ற போர்டைக் கையில் எடுத்துக் காண்பித்தேன். அவ்வளவுதான்! ஆள் வாலைச் சுருட்டிக் கொண்டு பேசாமல் போய்ச் சேர்ந்தான். இதே போல் 'டாக் ஷோவுக்கு' — நானும், இந்த ராயல் பேக்கரி ரொட்டிக் கடை நாயரும் போயிருந்த போது ஒரு பெரிய வம்பு வந்து சேர்ந்தது. பகுதி பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் நாய்களை அணிவகுத்து அந்தந்தப் பகுதிக்கு மேல் — அங்கு உள்ளேயிருக்கும் — நாயின் இனம் — பெயர், வயது, அது எந்த நாய்க் 'கிளப்'பின் பிரதிநிதியாக 'ஷோ'வில் கலந்து கொள்கிறது என்பன போன்ற விவரங்களைக் குறிக்கும் அறிவிப்புப் பலகையும் போட்டிருந்தார்கள். ஒரே ஒரு பகுதியில் மட்டும் அங்கு இருக்க வேண்டிய நாய் வெளியே எங்கோ கொண்டு போகப்பட்டிருந்ததனாலோ என்னவோ—அந்த நாய்க்குச் சொந்தக்காரி போல் தோன்றிய ஓர் முரட்டு ஆங்கிலோ—இந்தியப் பெண்மணி மட்டும் உள்ளே உட்கார்ந்திருந்தாள். மழையினால் போர்டில் நாயின் பெயர் அழிந்து போய் 'ஷீலா ராணி' என்று அந்த நாய்க்கு உடைமைக்காரியின் பெயர் மட்டும் அறிவிப்புப் பலகையில் தெரிந்தது. ''நாயர்! இது ரொம்ப நல்ல வெறைட்டியாயிருக்கும் போல் தெரிகிறது. 'ஷீலா ராணி' என்று பெயர் போட்டிருக்கிறது. ஏறக்குறைய ஒரு பெண் மாதிரியே இருக்கிறது பார்த்தீர்களா?'' என்று நான் சிரிக்காமல் உடன் வந்திருந்த நாயரிடம் காதருகே சொன்னேன். நாயருக்கோ அடக்க முடியாத சிரிப்புப் பொங்கிக் கொண்டு வந்து விட்டது. மனிதர் அந்த இடத்திலேயே சிரித்துத் தொலைக்கப் போய், அந்தப் பெண்மணி என்னை முறைத்துப் பார்த்தாள். அவளுக்கு என்னுடைய பயங்கரமான நகைச்சுவை புரிந்து அதன் விளைவாக 'வாட் டூ யூ மீன்......?' என்று சீறிப் பாயத் தொடங்கி விட்டாள். தப்பித்தோம், பிழைத்தோம் என்று நாயரை இழுத்துக் கொண்டு ஓட்டமெடுத்தேன் நான். அதற்கு இரண்டு மூன்று நாளைக்கு முன் இந்த மல்லிகைப் பந்தலில் வழக்கமாக வருடா வருடம் நடைபெறும் ஃப்ளவர் ஷோ (மலர்க் காட்சி) ஃப்ரூட் ஷோ (பழக் காட்சி) ஆகியவற்றில் அந்தந்தப் பூக்களுக்கும், பழங்களுக்கும் அருகே அவற்றின் பெயரை எழுதி வைக்க வேண்டும் என்று இந்த ஊர் நகர சபை கமிஷனர் என்னைக் கூப்பிட்டனுப்பினான். முதல் காரியம் அவன் கூப்பிட்டனுப்பியதே எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் நகர சபை அதிகார அடக்குமுறைக்குப் பயப்படாவிட்டால் நானும் என் கடையும் காலந்தள்ளிக் குப்பைக் கொட்ட முடியுமா? அதற்காக அவனை சந்திக்கப் போனேன். 'டிசைன்' 'போர்டு' எழுதுகிற 'பெயிண்டர்' என்றால் ஏதோ கைகட்டி வாய் பொத்தி 'எசமான் உத்தரவுக்கு, அடிமை காத்திருக்கேனுங்க' என்பது



போல் வந்து நிற்பேன் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"இந்த ஊர்க்காரர்களுக்குப் பூக்காட்சியிலும் பழக் காட்சியிலும் மல்லிகைப் பூவுக்குக் கீழே 'இதுதான் மல்லிகைப் பூ' என்றும், ஆரஞ்சுப் பழத்துக்குக் கீழே, 'இதுதான் ஆரஞ்சுப் பழம்' என்றும் எழுதி வைத்தால்தான் புரியுமோ சார்?" என்று பேச்சுப் போக்கில் சிரித்துக் கொண்டே மெதுவாக வாழைப் பழத்தில் ஊசி இறக்குவது போல் அந்தக் கமிஷனரிடம் ஒரு கேள்வியைக் கேட்டு விட்டு வந்தேனடா சத்தியம்! அப்புறம்தான் ஆள் என்னை யாரென்று புரிந்து கொண்டான். ஒழுங்காகக் கேட்ட தொகையைக் கொடுத்துப் போர்டுகளை எழுதி வாங்கிக் கொண்டான்."

சத்தியமூர்த்தி சிரித்தபடியே நண்பன் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தான். அப்போது தற்செயலாக அங்கு ஒரு மூலையில் அரை குறையாக எழுதி வைக்கப்பட்டிருந்த ஒரு போர்டு சத்தியமூர்த்தியின் கண் பார்வையில் தென்பட்டுச் சிரிப்பு மூட்டியது. "என்னடா குமரப்பன்! இதற்கு என்ன அர்த்தம்?" என்று சிரித்தபடி கேட்டுக் கொண்டே நண்பனிடம் அந்தப் போர்டை எடுத்துக் காட்டி வினவினான் சத்தியமூர்த்தி. அந்தப் 'போர்டில்' "உத்தரவின்றி உள்ளே பிரசவிக்கக் கூடாது" என்று குண்டு குண்டாக எழுதியிருந்தது. அதைப் பார்த்துக் குமரப்பனும் விழுந்துவிழுந்து சிரித்தான்.

"இதில் ஒரு சுவாரசியமான கதையே அடங்கியிருக்கிறது சத்தியம்! நம்முடைய ராயல் பேக்கரி நாயர் சிபாரிசு செய்தார் என்று அவருக்காக ஒரு மலையாளிப் பையனை — மாதம் அறுபது ரூபாய் சம்பளம் பேசி என் கடையில் எனக்கு உதவியாகச் சிறு போர்டுகள் டிசைன்கள் எழுத அமர்த்திக் கொண்டேன். அவனுக்குத் தமிழ் கொஞ்சம் தகராறு. நன்றாகத் தமிழ் பேசவோ எழுதவோ வராது. 'செகண்ட் அவென்யூ'வில் பிரபலமான மெடர்னிட்டி ஹோம் (பிரசவ ஆஸ்பத்திரி) வைத்து நடத்தி வருகிறாளே — ஒரு இங்கிலீஷ்கார டாக்டர் அம்மாள், அந்த அம்மாளுடைய பிரசவ ஆஸ்பத்திரியில் — உபயோகத்துக்காக 'உத்தரவின்றி உள்ளே பிரவேசிக்கக் கூடாது' என்று நான்கு போர்டுகள் வேண்டும் என்று எழுதித் தரச்சொல்லிக் கேட்டிருந்தார்கள். அந்த நான்கு போர்டுகளையும் எனக்கு வேறு வேலை இருந்ததனால் என்னுடைய 'அஸிஸ்டெண்டாக' வந்திருந்த புத்திசாலியை எழுதச் சொல்லப் போக அவன் நான்கு பலகைகளிலுமே 'உத்தரவின்றி உள்ளே பிரசவிக்கக் கூடாது' என்று எழுதி எடுத்துக் கொண்டு போய்ப் பிரசவ ஆஸ்பத்திரியில் அவர்கள் சொன்ன இடங்களில் எல்லாம் ஆணியடித்து மாட்டிவிட்டும் வந்து விட்டான். இரண்டு நாள் கழித்து மூஞ்சியில் எறியாத குறையாகப் போர்டுகளைத் திருப்பிக் கொண்டு வந்து எறிந்து விட்டுப் போனாள் அந்த இங்கிலீஷ் டாக்டரம்மாளுடைய நர்ஸ். 'என்னடா சங்கதி' என்று போர்டுகளைப் பார்த்தால் படுபாவிப் பயல், 'உத்தரவின்றி உள்ளே பிரசவிக்கக் கூடாது' என்று எழுதிப் பிரசவ ஆஸ்பத்திரியின் பிழைப்பிலேயே மண்ணைப் போட்டிருக்கிறான். முதல் வேலையாகப் பையனைக் கணக்குத் தீர்த்து வீட்டுக்குஅனுப்பி வைத்தேன்" என்று தன்னுடைய அனுபவத்தை மிகவும் இரசித்துச் சொன்னான் குமரப்பன்.

பொன் விலங்கு

> "ஒவ்வொரு மனத்திலும் ஒரு சோகக் கதை உண்டு. அது கதையாக வெளிப்படாத வரை உலகத்துக்குக் கிடைக்க வேண்டிய சுவாரசிய அநுபவம் ஒன்று நஷ்டமாகி விடுகிறது."

கடையைப் பூட்டிய பின் நண்பர்கள் தேநீர் பருகி விட்டு அறைக்குப் போனார்கள். மழையினால் எங்கும் வெளியில் உலாவப் போக முடியவில்லை. பேசிக் கொண்டிருந்தபோது நடுவில் மோகினியைப் பற்றி விசாரித்தான் குமரப்பன். சத்தியமூர்த்தியின் அந்தரங்கத்திலோ — அவளைப் பற்றிய கவலைகளும் தவிப்புமே நிரம்பியிருந்ததனால் யாராவது மோகினியைப் பற்றி ஞாபகப்படுத்திப் பேசினால்கூட வேதனையாக இருந்தது அவனுக்கு. சிறிது நேரம் தயங்கியபின் மதுரையில் நடந்தவற்றைப் பற்றிய விவரங்களைக் குமரப்பனிடம் கூறினான் சத்தியமூர்த்தி. எல்லாவற்றையும் கேட்டு விட்டுக் குமரப்பன் சிறிது நேரம் மலைத்தாற் போல் உட்கார்ந்திருந்தான். அப்புறம் சற்று நேரத்துக்குப் பின் ஒரு பெருமூச்சையும் விட்டு விட்டு வெளிப்படையாக வேடிக்கையானதும், ஆனால், கூர்ந்து கவனிக்கும் போது ஆழ்ந்த துயரம் தெரியக் கூடியதுமான ஒரு வாக்கியத்தைச் சத்தியமூர்த்தியிடம் கூறினான் அவன்:



''பக்கத்து வீட்டுக்குப் போய் ஒரு அஞ்சு நிமிஷம் பேசிட்டு வர்றேன். அடுப்பிலே சாதத்துக்கு அரிசி போட்டிருக்கேன். அரை மணிக்கு ஒரு தடவை போய்க் கிளறி விட்டுட்டு வாங்க.''

''கடைசியில் கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்தேவிட்டார்கள் என்று சொல்!......''

இதைக் கேட்டுச் சத்தியமூர்த்தி நண்பனுக்குப் பதில் சொல்லாமல் கீழே குனிந்து தரையைப் பார்த்தபடி இருந்தான். மனத்துக்குப் பிடித்தமான வாத்தியத்தில் மனத்துக்குப் பிடித்தமான இராகத்தை வாசித்தது போல் மோகினியோடுஉரையாடிய வேளைகளை இப்போது நினைந்து மனமுருகினான் அவன். அவன் பதில் பேசாமல் சும்மா இருப்பதைப் பார்த்துக் குமரப்பனே மேலும் கேட்டான். ''என்ன? பதில் பேசாமல் திகைத்து உட்கார்ந்து விட்டாய்?''

''பதில் பேச என்ன இருக்கிறது? கூண்டில் அடைபட்டு விட்டதாகச் சொல்கிறாயே; அந்தக் கிளியின் மனத்தில் உள்ள நினைவுகள் ஒவ்வொன்றும் ஒரு சோகக் கதையாயிருக்கிறது...''

''ஒவ்வொரு மனத்திலும் ஒரு சோகக் கதை உண்டு. அது கதையாக வெளிப் படாத வரை உலகத்துக்குக் கிடைக்க வேண்டிய அபூர்வமான அநுபவம் ஒன்று நஷ்டமாகி விடுகிறது சத்தியம்!......''

''ஆனால் மோகினியின் சோகம் கதைகளை எல்லாம் விடப் பெரியது குமரப்பன்...!''

''என்ன செய்யலாம்? வசீகரமான நினைவுகளோடு வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கிறோம். ஆனால் அங்கு மிகவும் குரூரமான நினைவுகளை எதிர்கொள்ள வேண்டி யிருக்கிறது. தனியாக இருந்து சிந்திக்கும் போது அழகாயிருக்கிற இந்த வாழ்க்கையே — பலரோடு கலந்து வாழும் போது—தடைகளும் — இடையூறும் நிறைந்ததாயிருப்பதை மிகவும் கசப்போடு நீயும் நானும் புரிந்து கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சமயங்களில் மேலே என்ன செய்வதென்று தெரியாமல் தயங்கித் தளர்ந்துதான் நிற்க வேண்டியிருக்கிறது....''

''இடையூறுகளையும் — தடைகளையும் பற்றி நான் கவலைப்பட வில்லை குமரப்பன்! அவைதான் என்னுடைய தைரியத்தையும் சிந்தனையையும் வளர்க்கின்றன. பிரச்னைகள் சூழ்ந்து நின்று உறுத்தும் போதுதான் நான் பலசாலியாயிருக்கிறேன். ஆனால் என்னை நினைத்து எனக்காகத் தவித்து என்னை அடையவும் முடியாமல் — அடைய வேண்டும் என்ற ஆசையை விடவும் முடியாமல் இன்னொருவர் வேதனைப்படுவதைத்தான் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.....''

''இன்னொருவருடைய தூய்மையான அன்பு என்பது வாழ்க்கையில் மனிதன் அடைகிற விலை மதிப்பற்ற பண்டங்களில் ஒன்று. எந்த விலை மதிப்பற்ற பண்டத்தையும் கவலையோ பாதுகாப்போ இல்லாமல் அடைய முடியாது என்பது வாழ்க்கைத் தத்துவம்!''

''உண்மைதான்! நம்முடைய ஒவ்வொரு விருப்பமும் — அப்படி விருப்பமாகப் பிறக்கும் போதே — கவலையோடும் — ஏமாற்றத்தோடும் சேர்ந்துதான் பிறக்கின்றது.'' — தங்களுக்குள் இப்படி நீண்ட நேரம் வரை பேசிக் கொண்டிருந்தார்கள் நண்பர்கள்.

அடுத்த நாள் காலை கல்லூரி வகுப்புக்கள் வழக்கம்போல் தொடங்கி விட்டன. மாணவர்களின் அன்பையும் ஆர்வத்தையும் கண்டு சில நாழிகை நேரம் அவன் தன் கவலைகளை மறக்க முடிந்தது. மறுதினம் காலையில் — பூபதியின் மகள் பாரதியும், ஜமீன்தாரும், கண்ணாயிரமும் மல்லிகைப் பந்தலுக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

''இன்று காலையில் அவர்கள் வந்ததும் வராததுமாக நாம் போய் நிற்க வேண்டாம். வர்த்தகப் பிரமுகர்களும், நண்பர்களுமாகத் துக்கம் விசாரிக்கிற கூட்டம் இன்னும் இரண்டு நாளைக்கு அங்கே நிறைந்திருக்கும்..... எனவே, நாம் நாளை அல்லது நாளன்றைக்குப் போய் அந்தப் பெண்ணிடம் ஒரு மரியாதைக்காகத் துக்கம் விசாரித்து விட்டு வரலாம்'' என்று கல்லூரி முதல்வர் ஆசிரியர்களிடம் எல்லாம் கூறியிருந்தார். பூபதியின் மகளைத் துக்கம் விசாரிக்கப் போகிற வேளையில் அதே வீட்டில் மஞ்சள்பட்டியாரையும், கண்ணாயிரத்தையும் சந்திக்க நேரிடுமோ என்று கூசித் தயங்கிக் கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. இரண்டு நாட்களுக்குப் பின்பு ஒரு நாள் மாலை

கல்லூரி வகுப்புக்கள் முடிந்து ஆசிரியர்களும், முதல்வரும் — கூட்டமாகப் பாரதியைச் சந்திக்கப் புறப்பட்டபோது அவனும் சேர்ந்து செல்ல வேண்டியிருந்தது. கூட்டத்திலிருந்து தன்னை அவனால் பிரித்துக் கொள்ள முடியவில்லை. ஆசிரியர்களை எல்லாம் பார்த்ததும்— பாரதி பெரிதாகக் கதறி அழுது விட்டாள். கல்லூரி முதல்வரும், துணை முதல்வரும், அவள் அருகே வீற்றிருந்தனர். சத்தியமூர்த்தி சிறிது தொலைவு தள்ளி அமர்ந்திருந்தான். அத்தனை பேருக்கும் நடுவிலும் அவளுடைய கண்கள் அவனிடமிருந்து தனியாக ஏதோ அநுதாபத்தைத் தேடுவதுபோல் அடிக்கடி அவனை நிமிர்ந்து பார்த்தன. அவனும் அவளுடைய துயரத்துக்காக மனம் வருந்தினான். வாடி இளைத்து முகம் கறுத்துக் களையிழந்து போயிருந்தாள் அந்தப் பெண். அங்கே பூபதியின் படம் ஒன்று பெரிதாக்கப்பட்டுச் சுவரில் மாட்டி மாலை சூட்டப் பெற்றிருந்தது. கல்லூரி முதல்வர் — ஜமீன்தாரையும் சந்தித்துத் துக்கம் கேட்க வேண்டும் என்று விரும்பியவராகப் பாரதியிடமே அவரைப் பற்றி விசாரித்தார். அவரும் சண்ணுயிரமும் எஸ்டேட்டுகளைச் சுற்றிப் பார்க்கக் காரில் புறப்பட்டுப் போயிருப்பதாகத் தெரிவித்தாள் அவள். ''நாளைக்குச் சாயங்காலம் காலேஜ் போர்டு மீட்டிங் இருக்கிறதே? அதற்குள் திரும்பி வந்து விடுவார்களோ இல்லையோ?'' என்று பாரதியைக் கேட்டு விட்டுப் பின்புறம் சிறிது தள்ளினாற் போல் நின்றிருந்த ஹெட்கிளார்க்கை ஜாடை காண்பித்து அருகில் வரவழைத்து..... ''மீட்டிங் சர்க்குலர் எல்லோருக்கும் கையெழுத்துக்குப் போய் வந்து விட்டதா இல்லையா ?'' என்று விசாரித்தார் கல்லூரி முதல்வர். 'ஆமாம்' என்று தலையை ஆட்டினார் ஹெட்கிளார்க். பாரதியிடம் தனியாக இரண்டு ஆறுதல் வார்த்தைகள் மனத்தைத் தொடும்படியாகப் பேச வேண்டும் என்று சத்தியமூர்த்தி நினைத்திருந்தது வீணாயிற்று. இதே போல அவனைப் பார்த்ததும் தனியே கதறியழ வேண்டுமென்று அவளும் நினைத்து அந்த நினைப்பைச் செயலாக்க முடியாமல் வீணாகியிருக்கலாம். துக்கம் விசாரிக்கிற சடங்கை முடித்துக் கொண்டு ஆசிரியர்கள் புடைசூழத் திரும்பிப் புறப்பட்டு விட்டார் கல்லூரி முதல்வர். சத்தியமூர்த்தியும் அவர்களோடு புறப்பட்டு விட்டான். அந்த வீட்டின் கடைசிப் படியிலிருந்து அவன் திரும்பிப் பார்த்துத் தன் கண்களின் பார்வையையும் உட்புறம் திருப்பிய போது — கதவருகே அவனையே பார்த்தபடி பாரதி கண் கலங்க நின்றிருந்தாள். ஒரு கணம் தயங்கி விட்டுக் கூட்டத்தோடு கூட்டமாக விரைந்து நடந்தான் அவன். ஆனால் அவனுடைய மனம் மட்டும் இன்னும் ஒருகணம் அதிகமாக அங்கே தயங்கியது.

''ஏன் சார்? உங்களைத்தானே? உங்களுக்கு இந்த விவரம் நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டுமே? பாரதிக்குத் திருமணமாகி அவள் கணவன் வீடு போகிற வரை — பூபதியின் சொத்துக்களுக்கும், பெண்ணுக்கும் ஜமீன்தார் தான் 'கார்டியனாமே'? நிஜம்தானா அது?'' என்று சத்தியமூர்த்தியை விசாரித்தார் வம்பளப்பதில் ஆர்வம் உள்ள ஒரு பேராசிரியர். 'தனக்கு அந்த விவரம் ஒன்றும் தெரியா'தென்று அவருக்கு அடக்கமாக மறுமொழி கூறினான் அவன். ''இத்தனை வயசுக்கு மேலே இந்த ஜமீன்தார் யாரோ ஒரு நாட்டியக்காரியிடம் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறாராமே! அது தெரியுமா உங்களுக்கு?'' என்று அதே வம்புக்காரப் பேராசிரியர் இன்னொருவரிடம் சொல்லிக் கொண்டு சென்ற போது சத்தியமூர்த்தி உடனே அருகில் ஓடிப் போய் அவரைக் கன்னத்தில் அறைய வேண்டும் போலப் பொறுமை இழந்திருந்தான். ஆனால் அவன் தன் கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. (தொடரும்)



இன்ஸ்பெக்டர் துரைசாமி அறையில் கீழே விழுந்து கிடந்த தடித்த மனிதனை உற்று நோக்கினார். அவன் குப்புற விழுந்து கிடந்ததாலும் முகத்தின் ஒரு பக்கம் கீழே இருந்ததாலும் அவரால் அவனை முழுதும் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அவன் பக்கத்தில் இருந்த இரும்பு பீரோவின் இரண்டு கதவுகளும் நன்றாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தன. அதன் தட்டுகளில் இருந்த புடவைகளும், கடிதங்களும் கலைக்கப்பட்டுத் தாறுமாறாகக் கிடந்தன. பீரோவுக்கு அப்பால் சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய ரப்பர் பைக்குள் வெள்ளிப் பாத்திரங்களும், ஒன்றிரண்டு சிறிய தங்கப் பாத்திரங்களும் இருந்தன. இவற்றைத் தவிர ஒரு சாவிக் கொத்தும், ஒரு சிற்றுளியும், ஒரு சிறிய டார்ச்சு லைட்டும் கீழே கிடந்தன. டார்ச்சு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. துரைசாமியின் கூரிய கண்கள் இந்த அலங்கோலக் காட்சியை நோட்டமிட்டன.

''நல்ல வேளை! நாங்கள் சமயத்தில் வந்து விட்டோம். இல்லாவிட்டால் எல்லாவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டு போயிருப்பான்'' என்று மாணிக்கம் கூறினார். அவர் வெளியில் போவதற்குத் தயாராக இருப்பவர் போல் உடை தரித்திருந்தார்.

''பணமும், பாத்திரமும் போனாலும் போகட்டும். அந்த ஆள் திரும்பி அடிச்சிருந்தால் இவங்க கதி என்ன ஆகும்?'' என்று மாணிக்கத்தின் பக்கத்தில் நின்றிருந்த ஒரு ஸ்திரீ துக்கம் தொண்டையை அடைக்கக் கூறிவிட்டுத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவளும் நன்றாக உடை தரித்திருந்தாள்.

துரைசாமியுடன் வந்திருந்த இரண்டு போலீஸ்காரர்கள், கீழே கிடந்த ஆளை மெதுவாகப் பிடித்து மல்லாக்காகப் போட்டார்கள். அவன் இடுப்பில் ஒரு டிராயர் தரித்து மேலே பனியன் போட்டிருந்தான். அவன் மூக்கில் அவர் கையை வைத்துப் பார்த்தார். உயிர் இருக்கிறதோ, இல்லையோ என்று பயப்படும்

இவனே அவன்!

கே. என். சம்பத்



படியாக அவ்வளவு இலேசாகச் சுவாசம் விட்டுக் கொண்டிருந்தான். நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு, மார்பின் மீதும் கையை வைத்துப் பார்த்தார். அவர் முகத்தில் திருப்திக் குறி தோன்றிற்று. ''உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே!'' என்று அந்த ஸ்திரீ கேட்டாள்.

இன்ஸ்பெக்டர் இல்லை என்று தலையை ஆட்டினார்.

''பாதாள கணபதி! உனக்கு இருபது தேங்காய் உடைக்கிறேன்'' என்று கண்ணை மூடிக் கும்பிடு போட்டுக் கொண்டு கூறினாள். பிறகு இன்ஸ்பெக்டரிடம், அந்த ஆளுக்கு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதுக்குக் கேஸ் வருமே என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தேன்'' என்றாள்.

''சுந்தரி, ஒன்றும் இல்லாததற்கெல்லாம் பயப்படுவாள்....'' என்று மாணிக்கம் கூறிக் கொண்டிருந்தபோது சுவரிலிருந்த கடிகாரத்தில் அரை மணி அடித்தது. அப்போது இரவு பதினொன்றரை மணி. துரைசாமி கடிகாரத்தையும் அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''நாங்கள் இருவரும் ஒரு சினிமா பார்க்க இராத்திரி ஆட்டத்துக்குப் போயிருந்தோம். திரும்பி வந்து வாசத் கதவுப் பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்தோம். மாடியில் மங்கலாக வெளிச்சம் தெரிந்தது. நாங்கள் போகும்போது விளக்குப் போட்டு விட்டுப் போகவில்லை. திருடனாகத் தான் இருக்க வேண்டும் என்று சந்தேகம். என்னிடம் அதோ அந்த மேஜை போல் இருக்கிறதே, அந்தப் பெரிய

டார்ச்சு லைட் இருந்தது. அதாலேயே அடிக்கலாம் என்று மெதுவாக மாடிப் படியில் ஏறினேன்'' என்று மாணிக்கம் கூறிச் சற்று நிறுத்தினார்.

''நான் போகாதீர்கள் என்று பிடிக்க இழுத்தேன். திமிறிக் கொண்டு போய் விட்டார்'' என்று சுந்தரி குறுக்கிட்டுக் கூறினாள்.



''பீரோக் கதவு இரண்டும் அப்படியே வெட்டி மல்லாத்திக் கிடந்தது. இவன் தரையில் மண்டியிட்டு உட்கார்ந்து நடுவில் இருக்கும் டிராயரைத் திறக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். அந்த மும்முரத்தில் நான் வந்ததை இவன் கவனிக்கவில்லை. ஓங்கி மண்டையில் போட்டேன். பொத்தென்று கீழே விழுந்துவிட்டான்'' என்று மாணிக்கம் தெரிவித்தார்.





பையன்: அப்பா! மீன்களெல்லாம் ஜோரா குளிக்கிறது பாரு!

''எனக்குக் கீழே இருப்புக் கொள்ளவில்லை. நானும் அவர் பின்னாலேயே வந்து விட்டேன். உடனேயே வெளிச்சத்தைப் போட்டேன்'' என்றாள் சுந்தரி.

''அப்போதுதான் நீங்கள் கதவு இடித்த சத்தம் கேட்டு வந்து திறந்தோம். உங்களுக்கு இங்கே திருடன் வந்திருக்கிறது எப்படி சார், தெரியும்? யாராவது அக்கம்பக்கத்தில் டெலிபோன் செய்தார்களா? இங்கே சுற்று வட்டார சமீபத்தில் வீடு கூட இல்லையே?'' என்றார் மாணிக்கம்.

''நான் வேளச்சேரிக்கு ஒரு காரியமாகப் போய் விட்டு வந்து கொண்டிருந்தேன். இந்த வீட்டு மாடியில் விளக்கு எரிவது தெரிந்தது. ஒரு வேளை திருடனாக இருக்கலாமோ என்று ஒரு சந்தேகம். வந்து பார்த்தேன்'' என்றார் துரைசாமி.

''உங்கள் மாதிரி இப்படியெல்லாப் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் எங்களுக்குப் பாதுகாப்பளிப்பதில் சிரத்தை கொண்டால் அப்புறம் குற்றம் என்கிறதே, நடக்காது, சார்!'' என்று மாணிக்கம் இன்ஸ்பெக்டரைப் புகழ்ந்து கூறினார். பிறகு, ''அவன் தலை எப்படி யிருக்கிறது என்று பாருங்கள். காயம் இருந்தால் மருந்து போடலாம்'' என்றார்.

கான்ஸ்டபிள்களுள் ஒருவர் திருடன் தலையைத் தடவிப் பார்த்தார். தலையில் மயிர் அடர்ந்து வளர்ந்திருந்தது. அவர் கையை வெளியே எடுத்து, ''ரத்தம் கசியவில்லை. இலேசாகப் புடைத்திருக்கிறது'' என்று தெரிவித்தார்.

''நல்ல வேளை!'' என்றாள் சுந்தரி.

துரைசாமி, அவனை இப்படியும் அப்படியுமாகப் புரட்டிப் பார்த்தார். ''ஏய்!'' என்று நாலைந்து முறை உரக்கக் கூப்பிட்டு அவனை எழுப்ப முயன்றார். அவனைக் கான்ஸ்டபிளைக் கொண்டு உட்கார வைக்கச் செய்தார். ஆனால் அவன் உடல் கீழே விழுந்தது.



''திருட்டுப் பயல், பாசாங்கு பண்ணுகிறான்'' என்று தமக்குத் தாமே கூறிக் கொண்டு, தமது சட்டைப் பையிலிருந்து ஒரு நெருப்புப் பெட்டியை எடுத்தார். ஒரு குச்சியை எடுத்துக் கிழித்து அவன் உள்ளங் காலில் வைத்தார்.

திருடன் அசைந்து கொடுக்கவில்லை. அவன் தன் காலை 'உஸ்' என்று இழுத்துக் கொள்ளவில்லை. ''நன்றாக மயக்கம் போட்டிருக்கிறது'' என்றார்.

மாணிக்கமும், சுந்தரியும் திருடனையே கவனித்துக் கொண்டிருந்தனர். ''மயக்கந்தானே! மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறானே! எப்படியாவது அவன் பிழைத்து இவர் மேல் கேஸ் வராதிருக்கணும். பாதாள கணபதி! உங்களுக்கு இன்னும் ஒரு ஐந்து தேங்காய் உடைத்து விடுகிறேன்'' என்று சுந்தரி வேண்டிக் கொண்டாள்.

''ஸார்! நான் அவனை வேண்டுமென்று தாக்க வில்லை. திருடிக் கொண்டிருந்ததை நேருக்கு நேர் பார்த்து விட்டதில் அடக்க முடியாத ஆத்திரம் வந்துவிட்டது. அடித்து விட்டேன், சார்!'' என்று மாணிக்கம் அழாக் குறையாகக் கூறினார்.

''நீங்கள் அநாவசியமாகத் தொந்தரவு செய்து கொள்கிறீர்கள், மிஸ்டர் மாணிக்கம்! நீங்கள் அவனை இவ்வளவு தைரியமாக அடித்துப் போட்டதற்கு உங்களைப் பாராட்ட அல்லவா வேண்டும்?''

''அப்படிச் சொல்லுங்கள்!'' என்றாள் சுந்தரி.

''நீங்கள் சினிமாப்படம் பார்த்துக் கொண்டிருந்த போது இப்படி உங்கள் வீட்டில் ஒரு திருட்டு நடக்கும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள்?''

''இந்தப் பக்கத்தில் திருட்டுப் பயம் இல்லை என்று பெயர். நாங்களே இங்கே குடி வந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. திருட்டைப் பற்றி எதற்காக நினைக்கப் போகிறோம்?''

''அது என்ன படம்?''

''வந்து..... 'இவனே அவன்' என்று பெயர்.''

''கடைசியில் தேசிய கீதம் பாடுகிற போது ஒருத்தரும் எழுந்திருக்கிறதில்லையென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது எப்படி? நான் சினிமாக் கொட்டகை பக்கம் தலைகாட்டுகிறதில்லை.''

''இப்போது எல்லோரும் எழுந்திருக்கிறார்கள்.''

''நீங்கள்!'' என்று இன்ஸ்பெக்டர் சிரித்துக் கொண்டே கேட்டார்.

''நாங்கள் கூடத்தான் எழுந்திருந்து நின்றோம்!'' என்றார் மாணிக்கம்.

''என்னமோ பேச்செடுத்து எங்கேயோ போய் விட்டது. அதோ சுவரில் மகாத்மா காந்தி ராட்டினத்தில் நூற்றுக் கொண்டிருக்கும் படத்தைப் பார்த்ததும் இந்த விஷயம் ஞாபகம் வந்தது. இந்த ஆள் எப்படி உள்ளே வந்திருப்பான்? வாசற் கதவு திறந்திருக்கவில்லையே!''

''இல்லை. பின் பக்கமாகத்தான் வந்திருக்க வேண்டும். போய்ப் பார்க்கலாமா?'' என்று மாணிக்கம் கேட்டார்.

பிறகு, அவரும் சுந்தரியும், துரைசாமியுமாக வீட்டின் பின்பக்கக் கதவைப் பார்த்



தீபாவளி
வெளியீடு
சென்னை
பிளாசா
கிரௌன்
மேகலா
சீனிவாசா
கௌரி பிக்சர்ஸ்
பரிசு
தயாரிப்பு
யோகானந்த் • K.P. கொட்டாரக்கரா
டைரக்ஷன் • யோகானந்த்
மஹாலக்ஷ்மி பிலிம்ஸ்
(SOLE PROPRIETOR • K.T.S.)
மதுரை, சென்னை - 4.

ELEGANT

தார்கள். அது தாளிடாமல் வெறுமனே சாத்தப்பட்டிருந்தது. தாழ்ப்பாள் பெயர்த் தெடுக்கப்பட்டிருக்கவில்லை.

''மரத்தில் ஏறி வந்து மொட்டை மாடியில் இறங்கியிருப்பான் போல் இருக்கிறது. மாடிக் கதவு தாழ்ப்பாள் போடப்பட வில்லை. அந்த வழியாக வந்திருக்கலாம்.''

''இருக்கலாம். அதை யெல்லாம் காலையில் வந்து பார்த்துக் கொள்கிறேன். இப்பொழுது நீங்கள் இந்தத் திருட்டைப் பற்றிய விவரங்களைச் சொல்ல வேண்டும்'' என்றார்.

உடனே கான்ஸ்டபிள்களுள் ஒருவர், ஒரு கடிதத்தையும் பேனாவையும் எடுத்துக் கொண்டார். மாணிக்கம் தாம் துரைசாமியிடம் கூறிய விஷயங்களை அப்படியே திரும்பவும் சொன்னார். கான்ஸ்டபிள் அதை எழுதி முடித்ததும் அதில் தம் கையெழுத்தைப் போட்டார்.

''அந்த ஆளை என்ன செய்யப் போகிறீங்க?'' என்று சுந்தரி கேட்டாள்.

திருடன் அசையாமல் கட்டை போல் படுத்திருந்தான்.

''வண்டியில் எடுத்துக் கொண்டு போய் விடுகிறோம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''மருந்து?''

''எங்கள் டாக்டர் பார்த்துக்கொள்வார்.''

''அப்படி என்றால் ஒரு கவலை விட்டது'' என்றாள் சுந்தரி.

கான்ஸ்டபிள்கள் இருவரும் திருடனைத் தூக்கிக் கொண்டு சென்றனர். துரைசாமியும் கிளம்பினார். போகும் போது சம்பவம் நடந்த அறையையும் மற்ற இடங்களையும் கவனித்துப் பார்த்துக் கொண்டே சென்றார்.

கணவனும் மனைவியும் கீழே இறங்கி வந்து போலீஸ்காரர்களை வழியனுப்பினார்கள். பிறகு கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு மேலே போனார்கள்.

வண்டி கிளம்பும் சத்தம் கேட்டது.

''தப்பித்தோம்!'' என்றாள் சுந்தரி.

''இப்படிப் போலீஸ்காரர்கள் தாங்களாகவே வருவார்கள் என்று யார் எதிர்பார்க்க முடியும்?'' என்றார் மாணிக்கம்.



''சீக்கிரம் எல்லாவற்றையும் மூட்டை கட்டுங்கள். அந்த ஆளுக்குப் பலமான மயக்க மருந்து கொடுத்திருக்கிறோம். நாளைக் காலை வரையில் அவன் விழித்துக் கொள்ள மாட்டான்.''

''தப்பித் தவறி வண்டியிலேயே எழுந்து விட்டாலோ ?''

''நான் திருடவில்லை என்று கத்துவான். ஆனால் போலீஸ்காரர்கள் அதை நம்ப மாட்டார்கள். மேலே பேச விடாமல் நாலு அறை கொடுப்பார்கள். ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டுபோய் நன்றாக விசாரணை செய்வார்கள். பிறகுதான் சந்தேகம் ஏற்படும்.

'' நிஜமாகவே சந்தேகம் உண்டாக ரொம்ப நேரமாகும்! நீங்கள் அவன் கட்டியிருந்த துணியை அவிழ்த்து எறிந்து விட்டீர்கள். அவன் இடுப்பிலே டிராயரும் மேலே பனியனும் மட்டுமே இருந்தன. உடம்பு குண்டோதரனது மாதிரி இருக்கிறது. முகம் வேறே சற்று விகாரம். அவன்தான் திருடன் என்று நினைப்பார்கள். நம்மைப் போல் டிப்டாப்பாக டிரஸ் செய்து கொண்டிருக்கிறவர்களைப் பார்த்தால் யார்தான் தவறாக எண்ணுவார்கள்!''

இப்படி அவர்கள் பேசிக் கொண்டே தங்கள் காரியத்தில் கண்ணாக இருந்தார்கள். மாணிக்கம், வெள்ளி, தங்கப் பாத்திரங்கள் வைத்துத் திணிக்கப்பட்டிருந்த ரப்பர் பையை எடுத்துக் கொண்டான். சுந்தரி பீரோ டிராயரிலிருந்து ஒரு கத்தை நூறு ரூபாய் கரன்சி நோட்டுக்களை எடுத்துத் தன் இடுப்பில் செருகிக் கொண்டு, ஜாக்கெட்டை அதன் மீது இழுத்து மூடிக்கொண்டு புடவைத் தலைப்பை மேலே போர்த்திக் கொண்டாள்.

அப்போது வாசற் கதவை இடிக்கும் சத்தம் கேட்டது. இருவரும் ஒரு கணம் திகைத்துப் போய் நின்றிருந்தனர்.

அட்டைப் பட விளக்கம்

தீபாவளிப் பரிசு


மாமனார் மாப்பிள்ளைக்குப் புத்தாடையுடன் பரிசு வழங்கலாம்:

மாப்பிள்ளை தன் மைத்துனன்மார்களுக்குப் பட்டாசுகளும், மத்தாப்புக்களும் பரிசு வழங்கலாம்.

புது மணப் பெண் ஆவலுடன் தன் கணவனிடம் எதிர்பார்க்கும் பரிசு கல்கி தீபாவளி மலர்.

இம் மலரைப் பரிசாக வழங்குவதில் காதலனுக்கு மகிழ்ச்சி; பெற்றுக் கொள்வதில் காதலிக்கு அதை விட இரட்டிப்பு மகிழ்ச்சி.

இப்படி மகிழ்ச்சி பொங்க நிற்கும் புதுத் தம்பதிகளை இவ்வார அட்டை இதழில் பார்க்கும் இளம் மணமக்கள் யாவரும், ''ஏது, நம் படத்தைக் கல்கி ஓவியர் இவ்வார அட்டைச் சித்திரமாக வரைந்து விட்டாரே!'' என்று அதிசயப் படுவார்கள். வயதானவர்களோ, ''நாமும் இப்படி ஒரு காலத்தில் இருந்தோமல்லவா?'' என்று பழைய நினைவுகளில் ஈடுபட்டு மகிழ்வார்கள். இவர்கள் அனைவருக்கும் நமது தீபாவளி வாழ்த்துக்கள்.



"எங்கள் கம்பெனியில் ஒரு முக்கிய மான அம்சம் என்னவென்றால், நீங்கள் ஒரு கார் வாங்கினால், கூட எங்கள் செலவில் ஓர் ஆள் அனுப்புகிறோம்."

"டிரைவர் எதற்கு? எனக்கே கார் விடத் தெரியுமே!"

"அதற்கில்லை, சார்! ஒவ்வொரு தடவையும் நீங்கள் 'ஸ்டார்ட்' செய்யும் போது காரின் பின்னாலிருந்து தள்ளி உதவி புரிய!"

மாணிக்கம் மாடியின் கோடிக்குச் சென்று ஜன்னல் வழியாக வீட்டின் முன்புறத்தைக் கவனித்தான். அங்கே ஒரு கான்ஸ்டபிள் நின்றுகொண்டிருந்தார். உடனே அவன் ரப்பர் பையை அது முன்னமே இருந்த இடத்தில் வைத்தான். "நோட்டை டிராயரில் வைத்து விடு" என்று கூறி விட்டுப் படிகளில் இறங்கிச் சென்று வாசற் கதவைத் திறந்தான்.

"ஒன்றுமில்லை. வாக்குமூலம் கொடுத்தீர்களே, அதில் ஒரு சின்ன சந்தேகம். அதைக் கேட்டு விட்டுப் போகலாம் என்று வந்தேன். காலையில் உங்களுக்குப் பல ஜோலி யிருக்கும். அப்போது தொந்தரவு செய்ய விரும்பவில்லை" என்று கூறினார் அந்தப் போலீஸ்காரர். எல்லோரும் மாடிக்குச் சென்றார்கள்.

"அந்த ஆளுக்கு ஒன்றும் இல்லையே!" என்று சுந்தரி கவலையுடன் விசாரித்தாள்.

"இல்லை, நன்றாகத் தூங்குகிறார்!" என்று துரைசாமி கூறி விட்டு, "நீங்கள் பார்த்த படத்துக்குப் பேர் என்ன? அதைச் சரியாக எழுதிக் கொள்ளவில்லை" என்றார்.

"இவனே அவன்!" என்று பதில் வந்தது.



"அந்த இரண்டு வார்த்தைகளும் என் மனத்தில் வேலை செய்து கொண்டிருந்தது. இவனே தான் அவன். இவனே தான் திருடன்" என்று கூறிக் கொண்டே மாணிக்கத்தின் இரண்டு கைகளையும் பின்பக்கமாக இழுத்துப் பிடித்துக் கொண்டார்.

"சுந்தரி! நீ பேசாதிரு!" என்று மாணிக்கம் அவளை எச்சரித்தான். கான்ஸ்டபிள் அவன் கைகளை ஒரு துணியால் கட்டினார்.

"சட்டை மடிப்பெல்லாம் கலைந்து போய் விடும், ஸார்!" என்று மாணிக்கம் மிகவும் நிதானமாய்க் கூறினான். "என்னமாக சார், சந்தேகம் ஏற்பட்டது?" என்று கேட்டான். அவனுக்குத் தான் இனி தப்ப முடியாது என்று தெரியுமாதலால் அநாவசியமாக உதை வாங்கிக் கொள்ள விரும்ப வில்லை.

துரைசாமி உண்மையிலேயே அவன் சாமர்த்தியத்தைப் பற்றி வியந்து கொண்டிருந்தாராதலால் அவனிடம் மரியாதையாகவே பேசிப் பதிலளித்தார்.

"நீ தேசிய கீதம் கேட்டு எழுந்திருந்து நின்றதாகச் சொன்னாயல்லவா? அதனால் படம் முடியும்வரை இருந்திருக்க வேண்டும். ஆனால் நீ வீட்டில் இருந்தபோது மணி பதினொன்றரை. டாக்ஸி பிடித்து வந்திருந்தால் என்று வைத்துக் கொண்டாலும்கூடக் கொட்டகையை விட்டுப் பதினொன்றேகால் மணிக்குக் கிளம்பியிருக்க வேண்டும். இந்த ஐம்பது வருஷ காலமாக ஒரு தமிழ்ப் படமாவது ஒன்பதரை மணிக்கு ஆரம்பித்துப் பதினொன்றரைக்குள் முடிந்து பார்த்திருக்கிறாயா?"

"அடடா! அந்த விஷயம் தெரியாமல் போச்சே. மகாபாபிகள் மூன்று மணிநேரம் படம் பிடித்து நாங்கள் மாட்டிக் கொள்ளும் படி பண்ணி விட்டார்களே!" என்று சுந்தர் பிரலாபித்தான்.

"இந்தச் சந்தேகம் தோன்றி இன்னொரு சந்தேகத்தைக் கிளப்பி விட்டது" என்று கூறி விட்டு, "மாணிக்கம்! நீ இடுப்பில் என்ன துணி பாண்ட்ஸ் போட்டிருக்கிறாய்?" என்று துரைசாமி கேட்டார்.

"ஷார்க்ஸ்கின்!"

"மேற் சட்டை?"

"டெரிலின்!"

"இதோ இந்த மேஜை மீது என்ன துணி விரித்திருக்கிறது?"

"கதர்."

"ஜோபாவில்?"

"கதர்!"

"அதோ, அந்த ஜன்னல் திரைகள்?"

"எல்லாம் கதர்தான்."

"அந்த மனிதர் இடுப்பில் இருக்கும் டிராயர், மேலேயுள்ள பனியன், எல்லாமே கதர்தான். காந்திஜி நூல் நூற்கும் படம் அதோ இருக்கிறது பார்த்தீர்களா! இதையெல்லாம் சேர்த்துப் பார்த்த போது இந்த வீட்டுக்காரர் கதர் கட்டுபவராக இருக்க வேண்டும் என்று நிர்மானித்தேன். நீயோ மிக நாகரிகமான துணி உடை அணிந்திருக்கிறாய். மாணிக்கம்! ஒன்று ஞாபகம் வைத்துக் கொள். கதர்த் துணி கட்டிப் பழக்கமானவர்கள் பிறகு இலேசில் வேறு துணி கட்டுவதில்லை. அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் சரி தான். கதர்த் துணி கட்டிக் கொண்டு வருவது ஒரு தனி வியாதி! அந்தத் துணியைத் திட்டிக் கொண்டே, அதை விடாமல் வாங்கிக் கட்டிக் கொண்டு வருவார்கள்" என்று சிரித்துக் கொண்டே கூறினார் இன்ஸ்பெக்டர்.

பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் இருபத்தைந்து

கசப்பில் ஓர் இனிப்பு

நாகோதரன் அடுத்தபடியாகச் சொன்ன அந்தப் பயங்கரச் செய்தியைக் கேட்டதும் ஆந்திர இளவரசி உத்தமசீலியின் மகிழ்ச்சிக் குறுகுறுப்பெல்லாம் எங்கோ ஓடி மறைந்தன. தன்னை மீறிய பீதிப் படபடப்புடன், ''உண்மைதானா, நாகோதரா? சளுக்கியத் தளபதி வில்வேலியின் முடிவு அப்படியா ஆயிற்று?'' என்று நடுங்கிய குரலில் வினவினாள்.


''ஆம், அம்மணி! நமது பல்லவ மாமன்னரவர்கள் சமந்தபத்திரரிடம் அப்படித்தான் சொன்னார்!'' என்று தலை குனிந்து பதிலிறுத்தான் நாகோதரன்.

உத்தமசீலியின் உடலும் மனமும் வியப்பால் சிலிர்த்துச் சில்லிட்டன. 'எத்தனை அற்புதமான செய்தி இது! வாழ்நாளெல்லாம் அதர்மக் குடை விரித்து, அநீதிகளையும், அசத்தியங்களையுமே பக்கத் துணை பாதுகாவலாக வைத்துக்கொண்டு, மண்ணுக்காகவும் பொன்னுக்காகவும் பொருளுக்காகவும் புகழுக்காகவும் பதவிக்காகவும் எண்ணற்ற பஞ்சமாபாதகங்களைத் துணிந்து செய்து, அரசியலை ஒரு சூதாட்டமாக நடத்தி வந்த வில்வேலி, கடைசிக் காலத்தில், எங்கோ எப்போதோ கழற்றி வெறியப்பட்டுச் சிதைந்து புதைந்து கிடந்த தம் இதயத்தைத் தேடியெடுத்துச் சுத்தப்படுத்தி அதன் திவ்விய ஞான ஒளியிலே வழி நடக்க முற்பட்டார் என்றால் இந்த அதிசயத்தை என்னென்பது?'—

வில்வேலியின் திடீர் மனமாற்றத்துக்குரிய காரணம் என்னவாயிருக்கும் என்பது பற்றியும் அவள் இப்போது நெஞ்சு வியர்க்க நினைத்துப் பார்த்தாள்: 'ஆமாம்; அன்றொரு நாள் பெருவளநல்லூர் சிற்றாற்றங்கரையருகே தனித்திருந்த என்னையும் பரமேசுவரவர்மரையும் மறைந்து நின்று அவர் கொல்ல முயன்றபோது, பழையாறைச் சோழரின் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிராபத்தான நிலையில் வீழ்ந்து கிடந்த சமயம், அவரால் ஜன்மப் பகைவரெனக் கொண்ட பரமேசுவரவர்மரே ஓடோடியும் வந்து அவருக்கு உதவி செய்து உயிர்ப்பிச்சை அளித்து அனுப்பினாரே, அந்த மனிதாபிமானக் கருணை உள்ளப் பேரன்பை உணர்ந்துதான் அவர் அப்படி மனம் திருந்திய மாமனிதராக மாறியிருக்க வேண்டும்! இல்லையென்றால், சளுக்கிய விநயாதித்தனின் வெஞ்சின வேண்டுதலையும் தூண்டுதலையும் ஏற்காமல், நிராயுதபாணியாகத் தனியே இருந்த பல்லவ மன்னரைக் கொல்ல மறுத்துத் தம்மைத் தாமே குத்திக்கொண்டு அவரது காலடியில் போய் விழுந்து சாகத் துணிந்திருப்பாரா? தாம் சாகும் தருவாயில், தம்மால் பல காலம் விரோதியெனப் பகைத்து வெறுத்த அவரின் மடியில் தலை சாய்த்துப் படுக்கவும், அவருடைய வாயால் தம் பெயரை ஒரு முறை அன்போடு அழைத்துக் கேட்கவும் விரும்பியிருப்பாரா? வாழ்நாள் முழுதும் அதர்மத்தின் பிரதிநிதியாகவே இருந்து வந்த பயங்கரவாதியான அவரை இப்படி அரை நொடியில் ஒரு மாபெரும் மனிதராக மாற்றியமைப்பதென்றால் அது எளிதான காரியமா என்ன? அதைச் சாதித்த பரமேசுவரவர்மரின் 'அன்புச் சக்திதான் எத்தனை அகண்டாகாரப் பலம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்!'

இவ்வளவு நாட்களாக வில்வேலியின் மேல் தீராப் பகையும் சோராக் கோபமும் கொண்டிருந்த உத்தமசீலி இப்போது அவருடைய மறைவுக்காக உள்ளம் கசிந்து வருந்திக் கண் கலங்கினாள். அவரை ஒரு மாபெரும் ஞானியாக மதித்துத் தன் நெஞ்சாரப் போற்றி வணங்கினாள். இப்படி வியப்பில் ஆழ்ந்து, வருத்தத்தில் நெகிழ்ந்து நின்ற அவளது மனம் திடுமென்று ஒரு திகிலுக்குள் சிக்கி அதிர்ந்தது.

சோழ இளவரசி இளங்கோப்பிச்சியின் சிவிகையைப் பின்தொடர்ந்து வந்த சளுக்கிய விநயாதித்தன், தன்னை அந்தப் புதர்க் குடிலில் பார்த்ததும் அவசரமாகத் திரும்பிப் போய் வில்வேலியை அழைத்துக்கொண்டு வந்தபோது, தானும் அவளும் அங்கேயே இருந்திருந்தால் நிலைமை என்ன ஆகியிருக்கும் என்பதை நினைத்தே அவள் அவ்வாறு அதிர்ச்சியுற்று நடுங்கினாள். அத்துடன், சோழ இளவரசியினுடையவும், நாகோதரனுடையவும் வற்புறுத்தலுக்கிணங்கிப் பெருவளநல்லூரை விட்டுத் திருப்பருத்திக்குன்றத்துக்குப் பயணமாகி வராமல் இருந்திருந்தால், அங்கே அந்தச் சிற்றாற்றில் பெருக்கெடுத்த வெள்ளத்துக்குப் பலியாக நேர்ந்திருக்குமே என்ற எண்ணமும் தோன்றி அவளை மிரட்சியுற வைத்தது. இவை



ஜெகசிற்பியன்

எல்லாவற்றையும் விட இன்னொரு பயங்கர நினைப்பே அவளைப் பெரிதும் அலைத்துக் குலுக்கியது. அதாவது, 'என்னைப் பார்க்க வேண்டிப் பெருவளநல்லூருக்குப் போன பரமேசுவர வர்மரை, வில்வேலியின் மூலம் கொல்ல முயன்ற விநயாதித்தன், அதற்கு மாறாகத் தானே அந்தக் காரியத்தைச் செய்ய முனைந்திருந்தால்?...' என்ற நினைப்புத்தான் அது!

சண்டமாருதத்தில் சிக்குண்ட பூங்கொடிபோல் வெடவெடத்து நடுங்கிய உத்தமசீலி சட்டென்று நிமிர்ந்து, "நாகோதரா! பல்லவ மாமன்னர் நன்னலத்தோடு தானே இருக்கிறார்? அவரை நீ நேரில் பார்த்தாய் அல்லவா?" என்று அவசரத் துடிப்புடன் கேட்டாள்.

"அதிர்ஷ்டவசமாக மாமன்னரவர்களைத் தரிசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததால்தான் இவ்வளவு விஷயங்களையும் என்னால் அறிந்து வர முடிந்தது, தாயே! ஆனால்..." என்று முகம் மலர இழுத்தான் நாகோதரன்.

"என்ன விஷயம்? சீக்கிரம் சொல்!"

"நம் மன்னர்பிரான் நன்னலத்தோடு மட்டுமல்ல, முன்னைவிடப் பன்மடங்கு அழகுக் களையோடும் ஆபரணப் பொலிவோடும் விளங்குகிறார், அம்மணி! ஆயினும் அவர் முகத்தில் ஏதோ ஓர் ஆழ்ந்த கவலை சூழ்ந்து அவரைப் பெரிதும் வாட்டத்துடன் காட்டுவதாகவே எனக்குத் தோன்றியது. அது ஒன்றைத்தான் என்னால் தெரிந்து கொள்ளவும் முடிந்தது."

உத்தமசீலி இதைக் கேட்டு மென்னகை புரிந்தாள். தன்னைப் பார்க்காததால் ஏற்பட்ட துயரத்தினால்தான் பல்லவ மன்னன் அவ்வாறு மனம் சோர்ந்து முகம் வாடிக் காணப்படுவான் என்று எண்ணியே அவள் அப்படித் தனக்குள் சிரித்துக் கொண்டாள். தன் காதலன் தன்னுடைய பிரிவைத்தாளாது வருந்தி வாட்ட



ஓட்டல் முதலாளி: சரக்கு மாஸ்டர், இன்றைய ஸ்பெஷலாக என்ன போட்டிருக்கிறார்?

சர்வர்: லீவு!

முற்றிருக்கிறான் என்னும் சேதி, எந்தக் காதலிக்கும் ஓர் இன்ப வேதனையாகவும் கசப்பான ஆறுதலாகவும் இருப்பது இயற்கைதானே?

''என்னைப் பற்றிப் பல்லவ மன்னர் உன்னிடம் ஏதாவது கேட்டாரா, நாகோதரா?'' என்று நாணம் தேங்கிய ஆர்வக் குரலில் மெல்ல வினவினாள் உத்தமசீலி.

''அப்படி ஏதும் விசாரிக்கவில்லை, இளவரசி! சமந்தபத்திரரிடம் எதைப் பற்றியோ தீவிரமாக விவாதிப்பதிலேயே மன்னரின் முழுக் கவனமும் லயித்திருந்தது. அதைத் தெரிந்து கொண்டு நான் சமணப் பள்ளியை விட்டு வெளியேறி வந்து விட்டேன்.''

இதைக் கேட்டு அனிச்ச மலரென முகம் வாடிய உத்தமசீலி தணிந்த குரலில், ''பரவாயில்லை. அவர் மனம் சோர்ந்து இருக்கும்போதெல்லாம் சமந்தபத்திரரிடம் வந்து நேசப்பான்மையுடன் சைவ — சமணத் தத்துவ விவாதங்களில் ஈடுபடுவது வழக்கம் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் அவருடைய கவனம் இப்போது திரும்பி விட்டிருக்கும்'' என்று சொல்லித் தனக்குத் தானே புன்முறுவல் பூத்தவாறு மேலும் கூறினாள்: ''ஆயினும் அவர் சமணப் பள்ளியில் அதிக நேரம் தங்கியிருக்க மாட்டார். இப்போதோ இன்னும் கொஞ்ச நேரத்திலோ இந்த இல்லத்துக்கு வருகை தருவார்.''

குதூகலத்துடன் இவ்வாறு கூறிக் கொண்டே உள்ளே செல்லத் திரும்பிய அவள் சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவள்போல் நின்று, ''நாகோதரா! நேற்று நான் உன்னிடம் சொன்ன அந்தக் காரியம் என்ன ஆயிற்று?'' என்று அவசரமாகக் கேட்டாள்.

''இளவரசியாரின் கட்டளையை நிறைவேற்றிக்கொண்டு வருகிற வழியில் தான் நம் மன்னர்பிரானைச் சமணப் பள்ளியில் தரிசித்தேன், தாயே! அதைவிட இது முக்கியம் என்பதால் இதை முதலில் தெரிவித்தேன்......'' என்று கூறிய நாகோதரன் பின்னால் திரும்பி மெல்லக் கைதட்டினான்.

உடனே அந்த இல்லத்து முகப்பு வாயிலுக்கு வெளியே ஒதுங்கி நின்று கொண்டிருந்த ஒரு நடுத்தர வயதான மனிதன் பணிவும் குழைவுமாக உள்ளே வந்து ஆந்திர இளவரசியை வணங்கி நின்றான்.


''இவர்தான் அந்தப் பொற்கொல்லர், அம்மணி! பொன்னாபரணக் கலைத் தொழிலில் மிகவும் தேர்ச்சியுள்ளவர் என்று கேள்விப்பட்டே இவரை அழைத்து வந்திருக்கிறேன். மற்ற விவரங்களைத் தாங்களே இவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்'' என்றவாறு ஓரடி பின்னால் நகர்ந்து நின்று கொண்டான் நாகோதரன்.

''இந்த மனிதனை நான் எங்கோ எப்போதோ பார்த்த ஞாபகம் இருக்கிறதே!....'' என்று மெல்லிய குரலில் இழுத்தாள் உத்தமசீலி.

''பார்த்திருப்பீர்கள், இளவரசி! அடியேன் தங்கள் ஆந்திர நாட்டுப் பிரஜைகளில் ஒருவன். வேங்கி அரண்மனைப் பொற்கொல்லனாகப் பணிபுரிந்தவன். இந்த எளிய கலைஞனின் கையால் உருவான ஆபரணங்களில் சில இப்போதும் இளவரசியாரின் திருமேனியை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன'' என்று உள்ளார்ந்த மகிழ்ச்சிப் பெருமிதத்துடன் சொன்னான் அந்தப் பொற்கொல்லன்.

''ஓ,.... உன் பெயர் மல்லிநாதன் அல்லவா?'' என்று புன்னகை புரிந்தாள் உத்தமசீலி.

''ஆம், தாயே! ஆந்திர மாமன்னரின் உத்தரவுப்படி ஆபரணக் கலைத் தொழிலைத் தாற்காலிகமாகக் கைவிட்டு ஆந்திரக் காலாட்படையில் சேர்ந்து பல்லவ நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டேன். வெற்றிக்குப் பின் இந்த அழகிய பல்லவ நாடு என்னை வெகுவாக வசீகரித்து விட்டது. அதனால், நம் நாட்டுக்குத் திரும்பிய ஆந்திரப்படை வீரர்களோடு சேர்ந்து பயணப்படாமல், பல்லவ அரசாங்கத்தின் அனுமதியோடும் ஆதரவோடும் பல்லவப் பிரஜையாக இவ்வூரிலேயே தங்கி என் குலத் தொழிலில் ஈடுபட்டு, இனிதே வாழ்ந்து வருகிறேன். இந்நிலையில் எனது மதிப்புக்குரிய ஆந்திர இளவரசியாரை இன்று



ASP/ABF-35TAM

சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி நான் எல்லை கடந்த பேரானந்தத்தில் திளைத்து நிற்கிறேன்'' என்றான் பொற்கொல்லன் அகமும் முகமும் மலர.

''மெத்த மகிழ்ச்சி! உன்னால் எனக்கு ஒரு பெரிய காரியம் ஆக வேண்டியிருக்கிறது. அதை முடித்துத் தரும் தகுதியும் திறமையும் உன்னிடம் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். உன்னைத் தேர்ந்தெடுத்து அழைத்து வந்த நாகோதரனுக்கு என் பாராட்டுக்கள்!'' என்று கூறிக்கொண்டே உற்சாகத்துடன் உள்ளே ஓடிய உத்தமசீலி, சிறு பொழுதுக்குப் பின், தந்தத்தாலான அழகிய பேழையொன்றை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

நாகோதரனும், பொற்கொல்லன் மல்லிநாதனும் அவளை ஆச்சரியத்துடன் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அத்தியாயம் இருபத்தாறு

பேழையில் ஒரு புதிர்

அந்தப் பேழையைக் கீழே வைத்து அதன் எதிரில் அமர்ந்துகொண்ட உத்தமசீலி, ஏதோ ஓர் இன்ப மயமான கனவில் ஆழ்ந்தவள்போல் சற்று நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு முகத்தில் ஓர் அபூர்வப் புன்னகை ஒளிவிட அந்தத் தந்தப் பேழையை மெல்லத் திறந்து மூடியை நிமிர்த்தி வைத்து விட்டுத் தான் அதிகப் பிரியத்தோடு அணிந்திருந்த சில பொன்னாபரணங்களை ஒவ்வொன்றாகக் கழற்றிப் பேழைக்குள் வைத்தாள். சந்திர வட்டமாகத் திகழ்ந்த அவளது வதனத்தில் இப்போது முன்னிலும் பன்மடங்கு எழிலான புன்சிரிப்பு தவழ்ந்தது.

''மல்லிநாதா! இங்கே வந்து இந்தப் பேழைக்குள் என்ன இருக்கின்றன என்பதைப் பார்!'' என்றாள் தணிந்த குரலில்.

பணிவுடன் கைகட்டிக் கொண்டு ஓசைப்படாமல் மெல்ல நடந்து வந்த பொற்கொல்லன் சற்றுத் தள்ளியே நின்று உடம்பை வளைத்துக் கழுத்தை நீட்டிக் குனிந்து பார்த்தான். அவனுடைய கண்கள் வியப்பால் விரிந்து மலர்ந்தன.

ஆமாம்; இரண்டு அறைகளாகத் தடுக்கப் பெற்றிருந்த அந்தப் பேழையின் ஒரு பகுதியில் கருஞ் சிவப்பான புத்தம் புதிய உருத்திராக்கக் காய்கள் நிறைந்திருந்தன! அவை ஒவ்வொன்றும் மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்துப் பொறுக்கிச் சேர்த்த அழகிய மணிக் காய்களாக விளங்கின! அடுத்த அறைப் பகுதியில், ஆந்திர இளவரசிக்குச் சொந்தமான பல வகை அணிகலன்கள் நிறைந்திருந்தன! விலை மதிப்பற்ற நவரத்தினங்களாலும், மாற்றுக் குறையாத பசும் பொன்னாலும் உருவான அந்த எழிலார்ந்த ஆபரணங்கள் கண்ணைப் பறிக்கும் வண்ண ஒளிகளுடன் திகழ்ந்தன!

பேழையை மூடி விட்டு நிமிர்ந்த உத்தமசீலி, ''பார்த்துக் கொண்டாயா மல்லிநாதா? சரி; இப்போது நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேள்!'' என்றவாறு எழுந்தாள்.

உடம்பைக் கூனிக் குறுக்கிச் செவியைத் தாழ்த்திக்கொண்டு நின்றான் பொற்கொல்லன்.

உத்தமசீலி தன் கையில் சுருட்டி வைத்திருந்த ஒரு சிறிய பட்டுச் சீலையைப் பொற்கொல்லனிடம் நீட்டி, ''இதோ பார், மல்லிநாதா! இந்தச் சீலையில் மதிப்பு வாய்ந்த பொருள் ஒன்றின் வரைகோட்டுச் சித்திரத்தை என் கைப்படத் தீட்டியிருக்கிறேன். சிறு வயதில் நான் கற்ற ஓவியக் கலை இப்போதுதான் முதன் முதலாக எனக்கு உதவியிருக்கிறது. இதுவே நான் எழுதிய முதல் சித்திரம். இந்தச் சித்திரத்தை மாதிரியாகக் கொண்டு இதில் உத்தேசமாகக் குறித்துள்ள அளவின்படி இப்பேழையில் இருக்கும் உருத்திராக்க மணிகளால் அந்த உயரிய மதிப்பு வாய்ந்த பொருளை நீ உருவாக்கித் தரவேண்டும். அதற்குத் தேவையான பொன்னுக்கும் நவரத்தினங்களுக்கும் இதில் உள்ள எனது அணிகலன்களை அழித்துப் பிரித்தெடுத்துக் கொண்டு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். எனக்குச் சொந்தமான இந்தப் பொன்னையும் மணிகளையும் தவிர, நான் உருவாக்கச் சொல்லும் அந்தப் பொருளில், உனக்கோ அல்லது வேறு யாருக்குமோ உரித்தான ஒரு குன்றிமணி எடைப் பொன்னையோ மணியையோ கண்டிப்பாகச் சேர்க்கக் கூடாது. உன் வாழ்நாளில் நீ செய்யக் கூடிய மிக உயர்ந்த உன்னதப் பொருள் ஆனதால் இதற்கு ஊதியமாக நான் உனக்கு ஒரு மஞ்சாடிப் பொன்னும் தரமாட்டேன். பல்லவ சாம்ராஜ்யத்தின் எதிர்காலப் பட்டத்துப் பேரரசியின் மனப்பூர்வமான பாராட்டு ஒன்றுதான் கிடைக்கும். எனவே, உன்

முழுத் திறமையையும் காட்டி இதனை எழிலுறப் படைத்துத் தருவாய் என்று நம்புகிறேன்'' என்று கண்டிப்பும் கனிவுமான குரலில் கூறி நிறுத்தினாள்.

அளவு கடந்த உற்சாகத்துடனும் குதூகலத்துடனும் பரவசமாகி நின்ற பொற்கொல்லன், ''எனது ஈரேழு ஜன்மத்துக்கும் கிடைக்கப் பெறாத பெரும் பேறாக இப்பணியினை ஏற்று என்னால் இயன்றவரை சிறப்பாகவே முடித்துத் தருவேன் என்பதற்கு உறுதியளிக்கிறேன், அம்மணி!'' என்று உணர்ச்சிச் செருமலிட்டுக் கூறினான்.

ஒரு கணம் ஏதோ சிந்தனையில் நின்ற உத்தமசீலி சட்டென்று நிமிர்ந்து, ''இன்னொரு விஷயம், மல்லிநாதா! என்னுடைய உத்தரவின்பேரில் நீ உருவாக்கப் போகும் இந்தப் பொருளைப் பற்றிய விவரம் உன்னைத் தவிர வேறு யாருக்குமே தெரியக் கூடாது. அத்தனை பரம ரகசியமாகச் செய்து ஓரே வாரத்தில் என்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்துவிட வேண்டும். நீ வரும்போது நான் இந்த இல்லத்தில் இல்லையென்றால், நேரே காஞ்சி அரண்மனைக்கு வந்து என்னைச் சந்திப்பாயாக!'' என்றாள் தன்னை மீறிய மகிழ்ச்சியுடன்.

''அப்படியே ஆகட்டும், இளவரசி!'' என்று வணங்கிய பொற்கொல்லன், அந்தப் பேழையைப் பயபக்தியுடன் ஒரு பட்டுத் துணியில் கட்டி எடுத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

அவனுக்குத் துணையாக அவன் இல்லம்வரை போய் வருமாறு நாகோதரனை அனுப்பி விட்டு, அந்த இல்லத்தின் பூங்காப் பொய்கையிலேயே நீராடி எழுந்து வந்த உத்தமசீலி, அணிகலன்கள் இன்றியே தன்னை அலங்கரித்துக் கொள்வதில் முனைந்தாள்.

அவளுக்கு அப்போதுதான் இளங்கோப்பிச்சியைப் பற்றிய நினைவு எழுந்தது. அதிகாலையில் மஞ்சத்தை விட்டு எழுந்து வேகவதி ஆற்றில் நீராடி வருவதற்காகப் போனவன் இவ்வளவு நேரமாகியும் இன்னும் திரும்பவில்லை!

உண்மையில் அவன் நீராடத்தான் போயிருக்கிறானா, வேறெங்கேனும்சென்றிருக்கிறானா என்ற சந்தேகம் தோன்றிவிட்டது உத்தமசீலிக்கு. ஏனென்றால், காலையில் துயில் நீங்கி எழுந்து பார்த்தபோது, பக்கத்து மஞ்சம் வெறுமனே இருக்கவே, அவன் நீராடத்தான் போயிருப்பான் என்று இவளாகவே நினைத்துக் கொண்டாள். ஆனால் இவ்வளவு நேரமாகியும் இளங்கோப்பிச்சி திரும்பி வரவில்லையே, ஏன்? இதோ, இரண்டு பாடகம் தொலைவில் உள்ள வேகவதி ஆற்றங்கரைக்குப் போய் வர இவ்வளவு நேரமா?

உத்தமசீலியின் மனத்தில் ஏதோ ஒருவிதப் பயம் சூழ்ந்து கொண்டது.

'இளங்கோப்பிச்சி எங்கே போயிருப்பான்? இத்தனை நாட்களாகத் தினமும் என்னை எழுப்பி அழைத்துக்கொண்டு நீராடச் செல்லும் அவன் இன்று மட்டும் என்னிடம் சொல்லாமலே எழுந்து போனதன் காரணம் என்ன?'—

சோழ இளவரசியைப் பற்றிப் பல சந்தேக வினாக்கள் எழுந்து அவற்றுக்கு இன்றுவரை விடை கிடைக்காமல் ஏற்கனவே குழம்பிப் போய் இருந்த அவள் இப்போது இன்னும் அதிகக் குழப்பம் அடைந்தாள்.


ஆமாம்; ஆலம்பாக்கத்திலிருந்து பழையாறைக்குப் பயணப்பட்ட இளங்கோப்பிச்சி இடை வழியில் பெருவளநல்லூருக்குத் திரும்பி, உத்தமசீலியைச் சந்திக்க வந்த காரணம் இன்று வரை மர்மமாகவே இருந்தது. அது பற்றி இவள் அவனைப் பல முறை கேட்டும் அதற்கு அவன் நேராகப் பதில் சொல்லாமல் சுற்றி வளைத்து ஏதேதோ கூறி மழுப்பி வருகிறான். அவனுடைய வற்புறுத்தலின் பேரில்தான் இவள் பெருவளநல்லூரரை விட்டுத் திருப்பருத்திக் குன்றத்துக்கு வந்து சேர்ந்தாள். அதற்குக் காரணம், அப்போது பெய்த பெருமழையால் சிற்றாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஆபத்தை உண்டாக்கலாம் என்று பயந்தே அவன் அவ்வாறு இடம் பெயர வற்புறுத்தினான் என்று முதலில் எண்ணினாள். இங்கு வந்த பிறகு அவனுடைய நடத்தைகளையும் பேச்சுக்களையும் கொண்டு, அந்தக் காரணமும் சரியல்ல என்று இவளுக்குத் தோன்றிவிட்டது. இரவு பகல் எந்நேரமும் இவளை விட்டு அவன் அப்படியிப்படி அகலாமல் இருந்து வருவதை வைத்தே இவள் அவ்வாறு நினைக்கலானாள்.

இந்நிலையில், இன்று அவன் திடீரென்று ஏதும் சொல்லிக் கொள்ளாமல் வெளியே போய் இன்னமும் திரும்பி வராமல் இருக்கிறான் என்றால் இவள் கவலைப்படாமல் இருக்க முடியுமா?

நேரம் செல்லச் செல்ல உத்தமசீலியின் கவலையும் குழப்பமும் மிகுதியாயின. ஆற்றங்கரைக்குப் போய் இளங்கோப்பிச்சியைத் தேடிப் பார்க்கலாமா என்று ஒரு கணம் எண்ணினாள். ஆனால் மறுகணமே அந்த எண்ணத்தை அறுத்துக் கொண்டாள். காரணம், இவள் அவனைத் தேடிக் கொண்டு போகும் சமயம், பல்லவ மன்னன் பரமேசுவர வர்மன் வந்து விட்டால்?


ஏதும் செய்யத் தோன்றாமல் இருதலைக் கொள்ளி எறும்பென அங்கும் இங்குமாக அலைமோதித் தவித்தாள் உத்தமசீலி.

(தொடரும்)



ஸேப்டி பின்களில்
யூனிடிக்கு பதில்
வேறொன்றுமேயில்லை
Unity
REGISTERED TRADE MARK
STEEL SAFETY PINS
★ நேர்த்தியான தரம்
★ திருத்தமாக அமைக்கப்பட்ட தலைபாகம்
★ கூரான முனை
★ கனமான நிக்கல் பூச்சு
★ உன்னத தயாரிப்பு
'யூனிடி' யை ஜார்ஜ் குட்மேன் லிமிடெட்டின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்காகும்.
ரிஜிஸ்டர் செய்யப்பட்ட உபயோகிப்பாளர்:
கெஸ்ட், கீன், வில்லியம்ஸ், லிட்.,
கல்கத்தா பம்பாய் மதராஸ் புது டில்லி
GKW5187A


வாழ்க்கை ஒளிகளின் வனப்பான அழகு




சான்போரைஸ்ட் பாப்ளின்ஸ்:
கோல்ட் ட்ரிங்க், ப்ளூபர்ட், எவர் ப்ரைட், குட் ஷைன்.

ஷர்ட்டிங்ஸ்: ஸ்டிரைப், டாப்பி, செக்ஸ், பைஜாமா

தோதீஸ்: ராஜா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல், ப்ளாடினம், காம்ராஜ்





ஸூட்டிங்ஸ்:
காபர்டீன்

லேசான கலர் புட்டாக்கள்:

ப்ரிண்ட்ஸ்:

ப்ரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்,
ஸ்கிரீன் ப்ரிண்ட் ஸாரீஸ்

2x2 கவர்ச்சியான முழு வாயில்கள்—[illegible]
புட்டாக்களிலும்

·SANFORIZED·

Arvind Quality Fabrics

அரவிந்த்

மில்ஸ் லிமிடெட் அஹமதாபாத்

தீபாவளி கலாட்டா

ராஜேந்திரகுமார்

ஒரு கையில் தர்மாஸ் பிளாஸ்க், மறு கையில் சின்னதொரு டிபன்பாக்ஸ், கோட்டுப் போட்ட கையின் இடுக்கிலே ஒரு பைல், தலையிலே தலைப்பாகை இவ்வளவையும் சுமந்து கொண்டு, அவசரம் அவசரமாக ஆபீஸில் நுழைந்த அக்கௌண்டெண்ட் கோபதி நாராயணனுக்கு மூக்கு 'ஜிவ்'வென்று சிவந்து போயிற்று. கோபத்தினால்தான்! "அண்ணாசாமி" என்று கூவினார்.

"இன்னா சாமி?" என்று ஆஜரானான் பியூன் அண்ணாசாமி.

"உன்னே என் எதிரிலே 'இன்னா' நாற்பது பாடாதேன்னு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்?"

"நான் இன்னா சார், பண்ணுவேன்? பழக்கம் ஆயிபூட்சி!"

"ராமா! ராமா! ஏண்டாப்பா இவன் வாயிலே தமிழைப் போட்டு இப்படிக் கொல்லறே?" என்று அவனது மதராஸ் தமிழின் கோரம் தாங்காமல் காதுகளை மூடிக் கொண்டார் கோபதி நாராயணன். "கிடக்கட்டும். ஏண்டா, நான் வருவதற்குக் கொஞ்சம் நாழியாகிட்டா ஒரு பயலாவது அவனவன் இடத்திலே தேமேன்னு உட்கார மாட்டான்களோ? எங்கே எல்லாம் தொலைந்து போயிட்டான்கள்? காப்பி கிளப்புக்கா?"

"ஒருத்தருமே வல்லே, சார்!"

"என்னது?"

"ஒருத்தர் மட்டும்தான் வந்தாரு!"

"யாரு, டெஸ்பாட்ச் நரசிம்மனா? நினைச்சேன். நேத்திக்கே போஸ்ட் பண்ணச் சொல்லிக் கொடுத்த லெட்டரை மறந்து போயிருப்பான். இப்ப எனக்குத் தெரியாமல் ஒளிச்சு வைக்கத்தான் சுருக்க வந்திருக்கான். அந்தத் தடிப் பயல்!"

"ஐயய்யோ! இன்னா சார், அவரைப் போய்த் தடிப் பயலுங்கறே?"

"ஐய! மரியாதை வேறே கேடா அவனுக்கு. நான் பார்த்துப் பொறந்தவண்டா அவன்."

"அதில்லே, ஸார்...." பியூன் பதறினான். "வந்துகிறது அவரில்லே....மானேஜரய்யா!"

"ஆங்! என்னது! மானேஜரா? வந்துட்டாரா?" என்று கோபதி பதறும் போதே குளுமை சாதன அறையிலிருந்து, சீறிக் கொண்டு வெளியே வந்தார் மானேஜர்.

அடுத்த சில நிமிடங்களில் .... தலையைக் கையால் தாங்கிக் கொண்டு அமர்ந்திருந்த அக்கௌண்டெண்ட் கோபதி மெல்லத் தலையை நிமிர்த்திப் பார்த்தார்.

மேஜையைச் சுற்றிலும் நின்று பல ஜோடிக் கண்கள் அவரையே பார்த்துக் கொண்டிருந்தன. "அந்தாப்போல ஏன் உட்கார்ந்திருக்கீங்க?" என்றார் ஹெட் கிளார்க் மாணிக்கவேலு – அவர் ஒரு திருநெல்வேலி ஜில்லாக் காரர். "ஏதாச்சும் விவகாரமா ?"

"அட, எங்கானும் வயத்தெரிச்சலைக் கிளப்பாதீர்?" என்று சீறினார் கோபதி நாராயணன். "எல்லாரும் எங்கே தொலைந்து போய் விட்டீர்கள்?"

தலைக்குத் தலை கூவலானார்கள். "பஸ்ஸே கிடைக்கல்லே சார்....!" "சைக்கிள்..... பஞ்சர்......" "வண்டி பிரேக் டவுன்! நான் என்ன பண்ணறது?"

"உமக்கென்னங்காணும், சொல்ல மாட்டீரா? எனக்குத்தான் நன்னா டோஸ் கிடைச்சுது. 'இதான் நீர் ஆபீஸ் நடத்தற லட்சணமா'ன்னு துரை நாக்கைப் பிடுங்கிக்கிறாப் போல கேட்டுட்டுப் போறான். சரி, சரி! அட்டெண்டன்ஸிலே கையெழுத்துப் போட்டு விட்டு அவரவர் காரியத்தைக் கவனியுங்கோ !"

ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டு, முட்டி மோதிக் கையொப்பமிட்டு நகர்ந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம்.... 'டப் டப்' பென்ற டைப்ரைட்டர்களின் இடைவிடாத மெல்லிசையும், 'டொப்... டொப்' பென்று லெட்ஜர்கள் தூக்கிப்போடப் படும் சத்தமும், நொடிக்கொருதரம் டெலிபோனின் கிணுகிணுவென்ற அழைப்புமாக ஆபீஸ் களை கட்டியது.

அந்த ஆபீசுக்குத் 'தமிழ் நாடு பெர்டிலைசர் லிமிடெட்' என்று பெயர் கொடுத்த புண்ணியவானின் வாயில் ஒரு பிடி சர்க்கரையைத் தான் போட வேண்டும். தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் ஒவ்வொரு ஆளைத் தூக்கிப் போட்டிருந்தார்கள். சுருங்கச் சொன்னால் முழுத் தமிழ் நாடே அந்த ஆபீஸில் இருந்தது.

மெட்ராஸ் 'தமிள் மொளி' பேசும் பியூன் அண்ணாசாமி முதல் அய்யங்கார்த் தமிழ் பேசும் அக்கௌண்டெண்ட் கோபதி நாராயணன் வரை பேசுவது பொதுவாகத் தமிழ் மொழிதான் என்றாலும், பலவித மாறுபாடுகளுடன் அவரவர் பக்கத்துப் பழக்கப்படி பேசுவார்கள். ஒவ்வொரு சமயம் அந்தத் தமிழர்களுக்கே மற்றவரின் தமிழ் புரியாமல் போவதும் உண்டு.

"ஒரு விசேஷமில்லே...." என்று ராகம் இழுத்தவாறு வந்தார் 'லெட்ஜர் கிளார்க்' ஆவுடையாபிள்ளை. அவர் ஒரு கொங்கு நாட்டவர்.

"தெரியும், ஓய்!" கோபதி நிமிராமலே சொன்னார். "இன்னைக்குத் தேதி பதினேழுதானே? 'அட்வான்ஸ்'க்கு வந்து நிப்பீர், வேறென்ன?"

"அட, அட்வான்ஸ் எதுக்குங்க..... ?" ஆவுடையாபிள்ளை இழுத்தார். "இன்னைக்குப் போனஸ் தரப் போறீங்கல்லே?" என்றதும்தான் கோபதிக்கே போனஸ் விஷயம் ஞாபகம் வந்தது.

அக்கௌண்டென்டுக்கே போனஸை ஞாபகப்படுத்திய பெருமையில், கேட்க வந்த விஷயத்தைக் கூடக் கேட்காமல் போய்ச் சேர்ந்தார் ஆவுடையா பிள்ளை.

'போனஸ்' என்ற வார்த்தை காதிலே விழுந்ததும், அனைவர் முதுகுகளும் சட்டென்று நிமிர்ந்தன. வேலையிலும் அசாதாரண சுறுசுறுப்பு நிரம்பியது.

"ஸார், ஸார்!" ரெட்டைப் பின்னல் இரண்டும் துள்ள அக்கௌண்டென்டிடம் ஓடி வந்தாள் தேவகி. "இதிலே ஒரு கையெழுத்துப் போடுங்க சார்!" என்றாள்.

அவள் நீட்டின பைலை, ஆராய்ந்தவாறு கேட்டார் கோபதி: "கொழுந்தே! நீ போன மாசம் வாங்கின பதினைஞ்சு ரூபாயைப் போனஸிலே பிடிச்சுடவா?"

"ஸார், ஸார்! வேண்டாம் ஸார்!" அவள் கெஞ்சினாள்: "பட்டுப் புடவை வாங்கணும்னு 'பிளான்' போட்டு வைச்சிருக்கேன் சார்!"

தேவகியை ராமநாதன் செட்டியார் கூப்பிடுவதாகப் பியூன் கூறவே அவள் செட்டியார் மேஜைக்கருகே தேவகி போய் நின்றாள்.

"இருங்க!" என்றார் ராமநாதன் செட்டியார். தேவகி விழித்தாள். "நான் உங்களை இருக்கச் சொன்னேன்" என்றார்.

"இருக்கேன் ஸார்" என்று நடுங்கி நின்றாள் தேவகி.

"பின்னே ஏன் நிக்கிறீங்க?" என்று செட்டியார் காச்சு மூச்சென்று கத்தினார்.

"ஸார், ஸார்! அவள் புதுசு!" என்று பாஸ்கரன் சமாதானப்படுத்தினான். "இந்தா தேவகி, இவரோட செட்டிநாட்டுத் தமிழிலே 'இருங்க'ன்னு சொன்னால் 'உட்காரு' என்று அர்த்தம். புரிந்ததா!"

'ஓ' வென்று அழ வேண்டும் போலாகிவிட்டது தேவகிக்கு. "ஸார்! எல்லோரும் தயவுசெய்து என்னோடு மட்டும் பொதுத் தமிழிலே பேசுங்க. இல்லேயானால் ஆங்கிலத்திலே பேசுங்க" என்று கைகூப்பிப் பொதுவேண்டுகோளொன்றை விடுத்தாள்.

டிபன் வேளை....

"என்னடாப்பா? எனக்கு இடமில்லேயோ?" டிபன் டப்பாவுடன் சாப்பாட்டு அறைக்கு வந்தார் கோபதி நாராயணன்.

"இங்கே வாங்க, சார்!"

"உங்களுக்கு இல்லாத இடமா?"

"இன்னைக்கு மூழுக்க நீர் மகாராஜன் தானே ஐயா.... இங்கிட்டு வாரும்!"

"அட, ஏங்காணும், மானத்தை வாங்குறீர்? என்ன என்னுடைய பணத்தையா போனஸா அள்ளித் தரேன்?" என்று கூறிவிட்டுப் பாஸ்கரனைப் பார்த்து, "என்னடாப்பா, அந்தக் கடிதாசு அனுப்பியாச்சோ?" என்று கேட்டார்.

"க்கும்.... ஆம்க்கும்...." என்று குழறினான் பாஸ்கரன்.

"நன்றாய்த்தான் பேசேண்டா! வாயிலே என்ன கொழுக்கட்டையா அடைச்சிருக்கு?" என்று அவர் சீற, வாய் நிறைய இருந்ததை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவன் தவிக்க..... "கொழுக்கட்டை இல்லே சார்! அடை!" என்று தேவகி சிரித்தாள்.

"அடையா?" கனவில் ஆழ்ந்து போனார் கோபதி. "அடைன்னதும் எனக்கு எங்க வீட்டுக்காரி நினைப்புத்தான் பளிச்சென்னு தோணறது! எவர்சில்வர் தட்டை எடுத்துப் போட்டு அதிலே கடக்கட ரெண்டு அடையை வைச்சு, மேலே சாம்பார் விடுவா, பாரும்..." என்று பெருமூச்செறிந்தார்.

எல்லாரும் கொஞ்ச நேரம் வாய் பேசாமல் மென்று கொண்டிருந்தார்கள்.

"என்னடாப்பா?" கோபதி கேட்டார். "தீபாவளி வர்றதே.... பட்டாசு வாங்க யாரும் ஏற்பாடு பண்ணலியா?"

'பட்டாசு' என்றதும் பாஸ்கரன் சட்டென்று நெளிந்தான். குடித்துக் கொண்டிருந்த தண்ணீர் புரை ஏறிக் கொண்டு விடவே, 'லொக், லொக்'கென்று இருமினான்.

மூக்குக் கண்ணாடியின்மேல் விளிம்பைக் கடந்து அவனை நோக்கினார் கோபதி.

"என்னடா, கொஞ்சம் மெதுவாய்க் குடிக்கப்படாதோ! இதிலே காட்டும் அவசரத்தை ஆபீஸ் காரியத்திலே காட்டினால் தேவலாம்."

"அப்ப பட்டாஸுகளுக்கான 'லிஸ்டை' எடுக்க வேண்டியதுதானே....." என்ற டெஸ்பாட்ச்' நரசிம்மன் சொன்னான். "எல்லோரும் கலந்து கொள்வார்களா? சந்தேகமாயிருக்கே......"

"உன் சந்தேகத்தைக் கொண்டு குப்பைக் கூடையிலே போடு" என்றார் கோபதி.

'குப்பைக் கூடை' என்று அவர் சொன்னதும் மேலும் ஒரு துள்ளுத் துள்ளினான் பாஸ்கரன். அவன் துள்ளலில், கையிலிருந்த கிளாசும் துள்ள, அதனுள்ளிருந்த சூடான காப்பியும் துள்ள, காப்பி கறையாகி விட்ட நைலக்ஸ் தாவணிக்காகத் தேவகி துள்ளிக் குதிக்க.... கோபதி கத்த ஒரே கலாட்டாவாக இருந்தது.

"என்னடா, இது?" என்று கோபதி இரைய, பாஸ்கரன் அசடு வழியப் பல்லை இளித்தான்.

"எனக்கு ஒரு டஜன் மத்தாப்பு போட்டாலே போதுங்கதேன்" என்றார் ராமநாதன் செட்டியார்.



''என்ன மனுஷன் நீர்!'' சீறினார் கோபதி. ''சேல்ஸ் மானேஜரா லட்சணமா அறுநூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறீரே, ஒரு பத்து ரூபாய்க்காவது சொல்லப்படாதா?''

அசட்டுச் சிரிப்புடன் தலையாட்டி விட்டு, உலையில் மூழ்கிப் போனார் செட்டியார்.

''ஸார், ஸார்.... எனக்கு நாலு பெட்டி யானை வெடியும், எட்டு டஜன் அணுகுண்டும் வேணும்'' என்று தேவகி கூறியதும் அத்தனை பேரும் அசந்து போய் விட்டார்கள்.

''ஆச்சி! நீ கேட்கிறது ரொம்பவும் பயங்கரமாயிருக்கு'' என்றார் ஆவுடையாபிள்ளை.

''ஏண்டி, கொழுந்தே! இதெல்லாம் நீ விடற பட்டாசுகளா? பெண் பிள்ளையா, லட்சணமா, நாலு கம்பி மத்தாப்பும் வாணமும் வாங்கப்படாதோ?''

''ஐயையோ!'' நீட்டி முழக்கினாள் தேவகி. ''அதெல்லாம் எனக்கில்லே, சார். ஊட்டி கான்வென்டிலே படிக்கிற என் தம்பிக்கு. எனக்குப் பட்டாஸென்னாலே ரொம்பப் பயம்'' என்று தோளைக் குலுக்கினாள்.

''ஆவுடையாபிள்ளைவாள்! உங்களுக்கு எவ்வளவு வேண்டும்?''

''அதெல்லாம் வாயிலே சொல்லிக் கட்டுப்படியாகாதுங்கோ. 'லிஸ்ட்' போட்டுத் தரேன்.''

''அதுதான் சரி'' என்ற டெஸ்பாட்ச் நாமிமன், ''கோபதி சார், நீங்களும் தானே?'' என்று கேட்டான்.

''ஆமாண்டாப்பா. அப்படித்தான் செய்யணும். போன தரம் என்னமோ ராக்கெட்டோ, ஜாக்கெட்டோ குறைந்து விட்டதென்று என் கடைசிப் பிள்ளை அடம் பிடிக்க, நாலு நாளைக்கு விடாமல் அழுதான். இந்தத் தடவை கவனமா லிஸ்ட் போடணும். ஆமாம்! ஏண்டா, இதெல்லாம் காலா காலத்திலே ஏற்பாடு பண்றதில்லையா? இதையெல்லாம் கூடவா நான் ஞாபகப்படுத்தணும்? கிடக்கட்டும். என்ன கம்பெனிப் பட்டாசு வாங்கப் போகிறீர்கள்? சிவகாமி ட்ரேடா, இல்லே 'வேடி மார்க்கா? வேடி வேண்டாம்டா, போன தரம் வாங்கின்டு போனேனே. அந்த மத்தாப்பு எரியவில்லை. என் மனைவிதான் எரிஞ்சு விழுந்தாள்! 'பட்டாஸ்' வெடிக்கல்லே. என் பட்டாளம்தான் வெடியா வெடிக்க என் பிராணனை வாங்கி விட்டாங்க. இந்தத் தடவை எச்சரிக்கையா யிருக்கணும். மார்க்கெட்டிலே இப்ப வெல்லாம் புலிதான் அதிகமாப் போறது....!''

மாணிக்கவேலு நாயக்கர் அரையுங்குறையுமாக இதைக் காதில் வாங்கிக் கொண்டு அலறினார். ''புலியா? போவுதா? எந்தாப் போல.....''

''ஓய்.... ஓய்.... கண்ணைத் திறவும் காணும். ராத்திரி முழுதும் சர்க்கஸ் பார்த்துக் கண் விழிக்க வேண்டியது! பகலிலே உளறிக் கொட்ட வேண்டியது! டிபன் நேரத்திலேயுமா தூங்கி வழியணும்? இப்போ எந்தக் கம்பெனி பட்டாசு வாங்கறதுன்னே தெரியல்லியே....''

தலைக்குத் தலை கூவலானார்கள்.

''மகாராஜா மார்க்!''

''ஜெட்டோ துங்கறேன். மூன்று மாம்பழமும் தான்....''

''கோவேறு கழுதைதான்.''

''ஸார், ஸார்! ஒரு யோசனை பேசாமல் 'குரங்கு' வாங்கிடுவோம். அதுதான் நல்லது!'' பாஸ்கரன் உற்சாகமாய்ச் சொன்னான்.

''வேண்டாம், வேண்டாம்!'' கோபதி மறுத்தார்.

''இல்லே, ஸார்! ரொம்ப நல்லா வெடிக்கும். நம்புங்கள்.''

''ஏண்டாப்பா, குரங்குக்காரன் என்ன கமிஷன் தருகிறான் உனக்கு? என்னமோ பெரிதாக விளம்பரம் பண்ணுகிறாயே! இந்த வேலை எத்தனை நாட்களாக நடக்கிறது?''

சிறு நேரத்துக்கெல்லாம் ''என்னடா இது? காகிதம் பொசுங்கும் நெடி......?'' என்று கோபதி கூவியதைத் தொடர்ந்து பைல்கள் வைக்கும் அறை, மேஜை டிராயர்கள், குப்பைக் கூடைகள் ஆகியவற்றை ஆராய ஆரம்பித்தார்கள்.


பாஸ்கரனின் மேஜையடியிலே யிருந்த குப்பைக் கூடையிலே எட்டிப் பார்த்த கோபதி நாராயணன், அதிலிருந்து படாரென்று ஓசை வெளிவரவே துள்ளிக் குதித்து, அலறியடித்து அப்பால் விலகினார்.

தொடர்ந்து பல வெடிகள் 'படார் படார்' என்று வெடிக்க, வாணங்கள் புஸ்ஸென்று கிளம்ப, மத்தாப்புக்கள் வர்ணத்தோடு எரிய, ஆபீஸே அதிர்ந்து போயிற்று.


இங்கு இருப்பவர்கள் அங்கு ஓட, அங்கு இருப்பவர்கள் இங்கு ஓடி வர, ஒருவரையொருவர் முட்டி மோதித் தள்ள, ஒரே களேபரம்தான்!

அதே நேரத்தில் சாப்பிட வீட்டுக்குப் போயிருந்த மானேஜர் பாய்ந்து சீறிக்கொண்டு உள்ளே வந்தார்.

சில நிமிடங்கள் கழித்துக் கன்னத்தை இரண்டு கைகளாலும் தாங்கிக் கொண்டு அமர்ந்திருந்தார் கோபதி நாராயணன்.



வரவென்றால் செலவு !



'உங்களுக்கு 'வரவு – செலவு'ன்னு லாபமாகப் பணம் குவியும். என் கதை அப்படி இல்லையே! மாப்பிள்ளை வரவு எனக்குச் செலவுதானே?''

''எலே, கடங்கார பாஸ்கரா? வாடா, இப்படி! உன்னாலே இன்னைக்கு இரண்டாம் முறை மானேஜரிடம் அர்ச்சனை வாங்கிக் கொண்டேன்! ஏண்டா, பட்டாஸை ஆபீசுக்குக் கொண்டு வந்தே?''

'' வந்து.... வந்து...... ஸார். நானாகக் கொண்டு வரவில்லை. கடைத் தெருவிலே என் சிநேகிதன் ஒருத்தன் பட்டாசுக் கடை வைத்திருக்கிறான். ஆபீசுக்கு வருகிற வழியிலே என்னை நிறுத்தி என் தலையிலே இதை யெல்லாம் கட்டியனுப்பிட்டான். வெளியே வைத்தால் உங்களுக்குத் தெரிந்து விடுமே என்று குப்பைக் கூடையிலே ஒளித்து வைத்தேன்''

''அது எப்படிப் பத்திக்கிச்சுங்கறேன்?'' என்றார் நாயக்கர்.

''இது வேறே கேட்கணுமா? எல்லாம் இந்தப் பிரகஸ்பதியாலே வந்தது'' என்றவர் 'டெஸ்பாட்ச்' நரசிம்மன் மீது எரிந்து விழுந்தார். ''ஏண்டா, சிகரெட்டைப் போடுகிறவன் அணைத்துப் போடப் படாதோ? உனக்கு என்மேலே ஆத்திரமிருந்தால் அதை ஏண்டா ஆபீஸ் மேலே காட்டறே?''

''நான் தரையிலேதான் சார், எறிந்தேன். அது தவறிக் கூடையிலே விழுந்துவிட்டது!'' என்று இளித்தான் நரசிம்மன்.

''சரி, சரி..... போய் அவா அவா காரியத்தைக் கவனியுங்கோ....'' என்று நடந்த கோபதி ஸாரின் காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து அதை எடுத்துப் பார்த்தவர், ஒரு விநாடி யோசித்து முகம் விகசிக்க, ''டேய்! நரசிம்மா! எந்தப் பட்டாசு வாங்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன்'' என்றார்.

''என்ன ஸார்? எது ஸார்?'' என்று அனைவரும் சூழ்ந்து கொள்ள, ''பொன் மயில் மார்க் பட்டாசு வெடிகள்தான்'' என்று கூறி விட்டு அப்பால் நகர்ந்தார்.

''இப்ப இவர் மட்டும் என்ன கமிஷன் வாங்குகிறாராம், பொன் மயிலிடம்?'' என்று முணுமுணுத்தவாறு நகர்ந்தான் பாஸ்கரன்.

தீபாவளிக்கு மறுநாள். ஆபீசுக்கு வந்து தம் இடத்திலே போய் அமர்ந்த கோபதி நாராயணன் கையிலிருந்த அந்தப் பாதியெரிந்து போன அட்டைப் பெட்டியை மேஜை மீது வைத்தார். அதன் மீது ஒட்டியிருந்த லேபிலில் 'பொன் மயில் மார்க்' என்று எழுதப் பட்டிருந்தது.

தீபாவளியன்று காலையில் பொழுது விடிய, விடிய, ஆபீசே கூடியிருந்தது கடைத் தெருவில்.... ''அந்தாப் போல எங்கே வந்தீங்க?'' என்றார் மாணிக்க வேலு நாயக்கர்.

''ஆமாம். உங்க எல்லார் வீட்டிலேயும் அதே கதைதானா?''

''பின்னே என்னங்கறேன்?''

''வெடி யெல்லாம் புஸ் வாணம் மாதிரி புகைஞ்சுண்ணு போச்சு.''

''ஏனுங்களே! பிரமாதமா 'ரெகமண்ட்' பண்ணினீரே, பொன் மயில் மார்க்கை. எல்லாமே வீணாப் போச்சுங்களே?''

'' நான் என்னத்தைங்காணும் கண்டேன்? வந்து ஆபீசிலே பிரமாதமா வெடிச்சுதே. பட்டாஸ், அதைத்தானேங்காணும் நானும் சிபாரிசு பண்ணினேன்?''

''அதெல்லாம் பொன் மயில் மார்க் என்று யார் சொன்னது?'' என்றான் பாஸ்கரன்.

''எரிஞ்சு தெறின அட்டைப் பெட்டியிலே லேபிளைப் பார்த்தேனே!''

''எது? பெரிய அட்டைப் பெட்டியா? அட, கடவுளே?'' என்று விழுந்து விழுந்து சிரித்தான் பாஸ்கரன். ''அது சும்மா கிடந்த பெட்டி. நான் வாங்கின பட்டாசுகள் அசல் குரங்கு மார்க் பட்டாசுகளாக்கும்.''

''என்னது?'' என்று கேட்டுக் கோபதி அயர்ந்து போனார்.

''பின்னே என்ன? என் சிநேகிதன்தான் சாம்பிளுக்குக் கட்டிக் காட்டினானே, பிரமாதமாக இருந்தது. அவனே சொன்னான், பொன் மயில் மோசம் என்று. அதைத்தான் அப்பவே சொல்ல வந்தேன். நீங்கள்தான் 'என்ன கமிஷன்னு கேட்டு விரட்டி விட்டீங்க'' என்றான் பாஸ்கரன் பெருமையுடன். எல்லோரும் கையைப் பிசைந்து கொண்டிருந்தனர்.

''ஸார்.... ஸார்...!'' கோவிந்துக்குப் போய்த் திரும்பும் தேவகி ஓடி வந்து சொன்னான். ''ஊட்டியிலேயிருந்து என் தம்பி கடிதம் போட்டிருக்கான். ஹாஸ்டலிலே அவன் மானமே போயிடுச்சாம். கோபதி ஸார், நான் என்னதான் உங்களுக்குப் பதினைஞ்சு ரூபாய் பாக்கி தரணும்னாலும், இப்படியா பழி வாங்கறது?'


அவனை முறைத்துப் பார்த்து விட்டு, ''ஏண்டாப்பா, இத்தனை பட்டாசு வைத்திருக்கிறாயே! குரங்கு வைத்திருக்கிறாயா?'' என்று கேட்டவாறு ஒரு பட்டாசுக் கடையில் நுழைந்தவரின் மூக்கு சிவந்து போயிற்று.

அன்று கடையில் மாட்டி வைத்திருக்கும் 'பொன் மயில் மார்க்' வாண வெடிகளின் விளம்பரத் தட்டிகளைப் பார்த்துப் பல்லைக் கடித்தார். வேறு என்ன செய்ய முடியும்?

வாட்டர்பரீஸ்

வைட்டமின் காம்பவுண்ட்

சாப்பிடவேண்டியது எப்பொழுது?



■ எந்த சீதவெப்ப நிலையிலும், எப்பருவத்திலும் வயதுவந்தோர், சிறுவர் யாவரும் சுவைத்துப் பருகுவதற்கு உகந்த பொது டானிக் வாட்டர்பரீஸ் வைட்டடமின் காம்பவுண்ட்.

■ வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ், மால்ட் எக்ஸ்ட்ராக்ட் ம்ற்றும் உடல் நலம், தெனபு ஆகியவற்றுக்கு அவசியமான பொருள்கள் செறிந்தது வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட். பசியைத்தூண்டுவதுடன், ஆரோக்கிய உணர்வை ஊட்டுகிறது அது.

வாட்டர்பரீஸ்

வைட்டமின்

காம்பவுண்ட்

வார்னர் - லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏவில் இணைக்கப்பெற்றது)

WLY-9 TAM



பூட்டிய கடைக்குள்!

கதிர்

இரவு மணி இரண்டு. தீபாவளிக்கு ஜவுளி வியாபாரம் அந்த மட்டும் முடிந்துவிட்டது. கடைச் சிப்பந்திகளுக்கு இனாமும், துணிமணிகளும் கொடுத்துவிட்டு, ''சிங்காரம் சில்க் ஸ்டோர்ஸ்'' முதலாளி வெளியே வந்து கதவைத் தாளிட்டுப் பூட்டினார். கடை ஆட்கள் முதலாளிக்கு முன் கூட்டியே தீபாவளி வணக்கங்களைத் தெரிவித்துவிட்டுத் திக்குக்கு ஒருவராகச் சென்று மறைந்து விட்டார்கள். முதலாளி சிங்காரஞ் செட்டியார் அந்த இரவு நேரத்தின் நிசப்தத்தைக் குலைத்தவண்ணம் மிதியடிகளைத் தரையில் தேய்த்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்.

ஒவ்வொரு நாளும் கடையைப் பூட்டிக் கொண்டு வீடு சென்றதும், நிம்மதியாக அப்படியே உறங்கிவிட மாட்டார் செட்டியார். சாப்பாட்டை முடித்துக் கொண்டு இரவு மழை கொட்டினாலும் இடி இடித்தாலும் மீண்டும் ஒரு முறை கடைக்கு வந்து வெளிப் பூட்டு சரியாகப் பூட்டியிருக்கிறதா என்று பார்த்துச் செல்வது அவருக்கு வழக்கம். அந்த வழக்கத்தை இந்தத் தீபாவளி இரவிலும் அவர் விட்டுக் கொடுக்கவில்லை. சூடாகத் தேத் தண்ணீர் போடச் சொல்லி அதை அருந்திவிட்டுக் குளிர் பனி இவற்றால் அசைக்க முடியாத கம்பளி ஒன்றை எடுத்துப் போர்த்திக் கொண்டு ஒரு பர்லாங் தூரத்திலுள்ள தமது கடையை நோக்கிப் புறப்பட்டார். அமாவாசை இருளும், நிசப்தமும் சூழ்ந்த நிலைமையில், ஒற்றை மனிதராகச் சிங்காரஞ் செட்டியார் நடை போட்டுச் செல்வதை விரும்பாத தெரு நாய் ஒன்று மட்டும் எதிர்ப்புக் குரல் கொடுத்து ஈனக் குரலில் குரைத்தது. தமக்குப் பின்னால் குரைத்துக் கொண்டே பின்பற்றிவந்த நாயைத் திரும்பிப் பார்த்தார் செட்டியார். அவர் நின்றதும் நாயும் நின்று அச்சத்துடன் பார்த்தது.

''என்ன? தீபாவளி இனாம் வேணுமா? பின்னாலேயே வறியே... அடப்... போ!'' என்று அதட்டிவிட்டுத் தமது முரட்டுக் கம்பளிப் போர்வையை உதறினார் செட்டியார்! அப்படி உதறும்போது மடியிலிருந்து கீழே விழுந்த சாவிக் கொத்தைத் தேடி எடுத்துப் மடியில் போட்டுக்கொண்டு தமது ''சிங்காரம் சில்க் ஸ்டோர்ஸ்'' வாயிற்படியை நெருங்கிக் கதவுகளைப் பார்த்ததும் அவருக்குத் ''திக்'' என்றுவிட்டது. வெளிக் கதவு பூட்டியபடிதான் இருந்தது! ஆனால், உட்புறம் விளக்கு எரிந்து கொண்டிருப்பதற்கு அடையாளமாகக் கதவுப் பலகைகளின் இடுக்கு வழியாக வெளிச்சம் கீற்றுப்போல் வந்துகொண்டிருப்பதைப் பார்த்தார் செட்டியார்.

''வெறும் சோம்பேறிப் பசங்கள்!'' என்று தமது கடைச் சிப்பந்திகளைக் கடிந்துகொண்டார் செட்டியார்.

''வீட்டுக்குப் போகும்போது விளக்குகளைச் சரிவர அணைக்காமலே போய் விட்டார்கள். அவசரம்..! அவசரம்...! தீபாவளி அவசரம்....!''

மீண்டும் ஒரு முறை ஒரு விநாடி நினைத்துப் பார்த்தார். ''இல்லை...இல்லை... தவறு என்மேல்தான்... எல்லோரும் போன பிறகு தானே, நான் கதவைப் பூட்டினேன். விளக்குகளை நான்தான் அணைக்க மறந்திருக்க வேண்டும். எது எப்படியானால் என்ன? வீட்டுக்குப் போய்த் திரும்பிவந்தது நல்லதாகப் போயிற்று...'' என்று தம்மைத் தாமே சமாதானப்படுத்திக்கொண்டு, பூட்டைத் திறக்க முயன்றபோது அவருடைய வியப்பும், பரபரப்பும் இன்னும் அதிகரித்தன. ஏனெனில் உள்ளேயிருந்து ''ஊஊம்... அப்பப்பா ... என்னால் முடியாது... எப்படியோ நீயே முடிவு பண்ணு...!'' என்று ஒரு குரல் கேட்டது. இதைத் தொடர்ந்து சிறிது மௌனம். நிசப்தம். 'பொத்' என்று பிறகு ஓர் ஓசை தரையில் அடித்துக் கொள்வதுபோல்...

இடுக்கிட்டு நின்ற சிங்காரம் செட்டியாரின் உடலில் ஒருவித நடுக்கமே கண்டுவிட்டது. கம்பளிப் போர்வையினுள், படபட வென்று அடித்துக்கொண்ட தமது நெஞ்சை அழுத்திக் கொண்டார். மனித சஞ்சாரமற்று, இருளில் மூழ்கிக் கிடந்த தெருப்பக்கம் தமது பார்வையைச் செலுத்தினார். ஓர் ஆள் நடமாட்டம் கூடக் கிடையாது. சாதாரண நாட்களில் அயர்ந்து தூங்குவோரின் உறக்கத்தைக் கலைத்துக்கொண்டு தார் போட்ட சாலையில் தடிக் கம்பினால் தட்டிப் பள்ளம் பண்ணிக்கொண்டு, அடிக்கடி அலைந்து கொண்டிருப்பானே கூர்க்கா! ஒரு கூர்க்காவைக் கூட இப்போது காணவில்லை! ஒரு ரோந்துப் போலீஸ்காரர் உண்டா? கிடையாது! பொழுது விடிந்தால் இவர்கள் எல்லோரும் வந்து நிற்பார்கள் தீபாவளி இனாமுக்கு!

உள்ளே கதவு இடுக்கு வழியாக மறுபடியும் சிங்காரம் செட்டியார் எட்டிப் பார்த்தார்.

பயங்கரம்! பயங்கரம்! பளபளப்பான கத்திரிக்கோலைப் பிடித்த முரட்டுக் கரம் ஒன்று மட்டும் தெரிந்தது. முழு உருவத்தை யும் பார்க்க முடியாமல் இடையில் ஒரு கண்ணாடி பீரோ!

தமது தைரியம் முழுமையும் நெஞ்சில் ஒன்றுயித் திரட்டி, ''யார்...அது...? உள்ளே.... டேய்...!'' என்று உரக்க அதட் டினார் முதலாளி. ஒரு கண நேரம் பதில் இல்லை. பிறகு, ''நான்தான் நரகாசுரன்...!'' என்று பதில் வந்தது.

''நரகாசுரனா?... இரு உன்னை... இதோ பார்... அங்கேயே இரு!'' செட்டியார் சீறினார். ஆனால், அந்தச் சீற்றத்தின் எதி ரொலி அடங்குவதற்குள்ளேயே அவருடைய வியப்பையும், திகைப்பையும் பன்மடங்காக வளர்த்தது உள்ளேயிருந்து கேட்ட ஒரு ஸ்திரீ யின் சிரிப்பொலி!

பூட்டைத் திறந்துகொண்டு, உள்ளே எட் டிப் பார்த்தார் செட்டியார். சடகோபய் யங்காரும், அவருடைய மனைவியும் சில பட்டுப் புடவைகளை ஆராய்வதில் ஈடுபட் டிருந்தார்கள். ஆராய்ச்சியில் முடிவு காண இயலாத நிலைமையை எடுத்துக் காட்டிற்று, சடகோபனின் கலைந்த தலை.

''அடாடா! என்ன இது? நீங்களா!'' என்று வர்த்தக முறையில் கேட்டுவிட்டு நகைத்தார் செட்டியார்.

''நான்தான், நரகாசுரன் இல்லை.''

''என்ன வேடிக்கை போங்க.... நான் உள்ளபடியே கொஞ்சம் மிரண்டுதான் போய்விட்டேன்...., பாருங்க... நம்ம கடை ஆட்கள் வேலை பார்க்கிற லட்சணத்தை. உள்ளே புடவை பார்க்கிறது கூடத் தெரி யாமல், விளக்கைக்கூடச் சரிவர அணைக்கா மல்... கதவைப் பூட்டி என்னிடம் சாவியைக் கொடுத்துவிட்டுப்போய்விட்டான்களே! நல்ல வேளை. நான் திரும்பி வந்தேனே இல்லையோ? வராதிருந்தா உங்க நிலைமை என்ன ஆகும்?'' என்று தமது கவனக் குறைவை மறைத்துப் பழியைச் சிப்பந்திகள் மேல் போட்டுச் சமாதானம் கூறினார் செட்டியார்.

''நீங்கள் ஏன் இப்போது வந்தீர்கள்? கொஞ்ச நேரம் கழித்து வந்திருக்கக் கூடாதா? இங்கு இன்னும் தீர்மானமாக வில்லை!'' என்றார் சடகோபய்யங்கார்.

''அதெல்லாம் தீர்மானமாகிற்றுபோலத் தான். இருநூற்று எண்பது... விலை சற்று அதிகம்தான். இருந்தாலும் இந்த பனாரஸ் தான் கடைசித் தீர்மானம்'' என்றாள் அவரது மனைவி வசந்தி.

''நிச்சயம்தானே?... அப்புறம் அவுரங்கா பாத், காஞ்சீபுரம், பங்களூர் என்று ஆரம் பிக்கக் கூடாது.''

வருடத்துக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் துணி மணிகள் வாங்கும் ஒரு நல்ல வாடிக் கைக்காரர் சடகோபய்யங்கார் 'வீடு'.

அவர்கள் இருவரும் சென்ற பின், விளக்கு களை அணைத்துக் கொண்டு, சிங்காரஞ் செட்டி யார் கடைக் கதவைத் தாளிட்டுப் பூட்டி னார். கம்பளியினால் தலையைப் போர்த்திக் கொண்டு தெரு இருளில் வேகமாக நடந்து மறைந்தார்.

சடகோபய்யங்காரும் அவரது மனைவியும் பேசிக்கொண்டே முதலில் விரைவாகத்தான் நடந்தார்கள். ஒரு தெருவின் திருப்பத்தில் மெர்க்குரி விளக்குக்கு அடியில் அவர்கள் வரும்போது அவர்களுடைய நடையின் வேகம் குறைந்தது.

''உள்ளபடியே இந்த நீலக் கலர் பனாரஸ் உங்களுக்குப் பிடித்திருக்கிறதென்று கூறு கிறீர்களா?....!'' என்று கேட்டாள் வசந்தி.

''இதை விட நல்ல கலர் இருக்காதென்று நான் நிச்சயமாகக் கூறுவேன். அசல் ஆகாய நீலம் இதுதான்'' என்றார் அய்யங்கார்.

''ஆகாய நீலமா? கருநீலமா? எங்கே இந்த மெர்க்குரி வெளிச்சத்தில் கொஞ்சம் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்...!'' சட கோபய்யங்கார் பனாரஸ் பொட்டலத்தை அவள் கையிலிருந்து வாங்கி, வெளிச்சத்தில் பிரித்து பார்த்துவிட்டுக் ''கருநீலம்தான்!'' என்று சொல்லித் திருப்பிக் கொடுத்தார்.

''பின்னே ஏன் ஆகாய நீல நிறம் என் றீர்கள்? அந்த அவுரங்காபாத் கரும் பச்சை நிறம்தான் உங்கள் கண்களிலேயே நிற்கிறது. அந்தப் பிரமைதான் 'ஆகாய நீலம்' என்று எதைப் பார்த்தாலும் தோன்றுகிறது. எனக்கே கண்களில் இன்னும் அவுரங்காபாத் தான் நிற்கிறதென்றால் நீங்க நம்புவீர்களா?''

''அப்படியானால் ஒன்று செய்வோமா? வெட்கத்தைப் பாராமல் மறுபடியும் அவர் கடைக்குப் போய்...!'' என்று கேட்டார் சடகோபய்யங்கார்.

''தீர்மானம் என்றால் தீர்மானம்தான். இவ்வளவு நேரம் சிங்காரம் செட்டியார் வீட்டுக்குப் போயிருப்பார். ஆகவே, பேசாமல் நாமும் போய்விட வேண்டியது தான்....!''

மனத்தில் அவுரங்காபாத்தும், கையில் பனாரசுமாக அரைகுறை மனத்துடன் இரு வரும் மெல்ல மெல்லத் தயங்கியபடியே நடந்து வீடு திரும்பும் போது காலை நான்கு மணி. தெரு விளக்குகள் முழுமையும் அணைந்து விடும் பின்னிருட்டு நேரம். வாசற்படி இருளில் ஏதோ ஒரு புது உருவம் நகருவதைப் பார்த் துச் சடகோபய்யங்கார், துள்ளிக் குதித்து, ''யார் அது?''என்று இரைந்தார்.

''ஏன், நான்தான் நரகாசுரன்!'' என்று சொல்லிவிட்டுப் போர்த்திக் கொண்டிருந்த முரட்டுக் கம்பளியை விலக்கிக்கொண்டார் சிங்காரம் செட்டியார்.

''அடாடா! உம்மைத்தான் நினைத்துக் கொண்டு வந்தோம். இங்கே ஏன் வந்தீர்?'' என்று வினவினார் சடகோபய்யங்கார்.

''ஏன் வந்தேனா? ஒருவேளை மறுபடியும் ஜவுளி மாற்ற நினைத்தால் நீங்கள் ஏமாறு வானேன்? சந்தேகத்துக்குக் கடைசியாக ஒரு முறை கேட்டுவிட்டுப் போக வந்தேன். நான் போகலாமா?'' என்றார் முதலாளி.


''எங்கே?'' என்று கேட்டாள் வசந்தி.

''என் வீட்டுக்குப் போகச் சொன்னாலும் போகிறேன், கடைக்குப் போகச் சொன்னா லும் போகிறேன். வாருங்கள்!'' வசந்தி சிறிது நேரம் சிந்தித்த பின், தன்னுடைய கையிலிருந்த பனாரஸ் பொட்டலத்தால் சடகோபய்யங்காரை இடித்தாள்.

''அதுவும் ரொம்ப சரி. போகலாம் கிளம்புங்கள் செட்டியாரே, கடைக்கு!'' என்றார் சடகோபய்யங்கார்.

''அதுதானே பார்த்தேன். தெரியுமே எனக்கு?'' என்று கூறியவாறு சிங்காரம் செட்டியார் எழுந்து அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்.


மகிழ்ச்சி மிகுந்து நடந்து செல்லுங்கள்....
9.95
11.95
9.95
13.50
9.95
12.95
13.50
Bata



தலைவலியா?



பல்வலியா?



உடல்வலியா?




அசௌகரியமான
நாட்களா?

ஸாரிடான்

'ரோஷ்'
சாப்பிடுங்கள்

நிவாரணம் அளிக்கிறது, ஆசுவாசப் படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது



வலிகளிலிருக்தும் நோவுகளிலிருக்தும் விரைவில் நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். தலைவலி, பல்வலி, உடல்வலி, சாதாரண உடற்கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் இணையற்றது. ஸாரிடான் விரைவாக, அபாயமின்றி, நிச்சயமாக வேலை செய்கிறது. உங்களுக்கு ஒரு வில்லை ஸாரிடான் போதுமானது! குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.



ஒரு வில்லை ஸாரிடான் போதும்
ஒரு வில்லை 13 நயா பைசா



'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்: **வால்டாஸ் லிமிடெட்**

JWT-VT 4793

நிமிஷக் கதைகள்

இந்தத் தங்கக் கட்டுப்பாடு பொற்கொல்லர்களின் வேலைக்குத் தட்டுப்பாட்டை உண்டு பண்ணி விட்டதல்லவா? அவர்கள் படும் துயரத்தைக் காணச் சகிக்காத அரசாங்கம், அவர்களுக்கு ஐந்நூறு ரூபாய் பொருளுதவி செய்யத் திட்டமிடவே, அத்துறையைச் சேர்ந்த அலுவலகத்தில் ஏராளமான விண்ணப்பங்கள் குவிந்தன. எனவே, இலேசில் பொற்கொல்லர்களின் கைக்குப் பணம் வருவதாகத் தெரியவில்லை.

தமது பணத்தை எப்படியாவது விரைவில் பெற்றுவிட வேண்டும் என்று மார்க்கண்டேய ஆச்சாரி மிகவும் பாடுபட்டார். அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அடியிலிருந்து தலை வரை பார்த்தார். ஒருவாறு காரியம் சாய்ந்தது. ஐந்நூறு ரூபாயைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தவர் கணக்குப் பார்த்தார். இந்தத் தொகையைப் பெறுவதற்காகத் தாம் செலவு செய்த தொகையை—அரசாங்க அலுவலகங்களில் தான் எந்தக் காரியமும் வெள்ளையப்பனின் துணையில்லாமல் நகருவதில்லையே—புள்ளி போட்டுக் கணக்கெழுதிக் கூட்டிப் பார்த்த பொழுது ரூபாய் நானூற்றைம்பதை எட்டிப் பிடித்தது.



'இந்த ஐம்பது ரூபாய்க் காசுக்காகவா இவ்வளவு பாடுபட்டோம்?' என்று சிந்தனை செய்த அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

''தங்கள் தயாள சிந்தனையினால் பொற்கொல்லர்களுக்கும் பொருளுதவி கிடைக்க வழி செய்ததற்கு என் நன்றி. அதைப் பெறப் பாடுபட்டதற்கு எனக்குச் செலவு ஆகிய தொகை நானூற்றைம்பது. தாங்கள் பெரிய மனம் பண்ணி இந்த உதவி கிடைக்கச் சிரமமேற்றுக் கொண்டதற்குக் காணிக்கையாக மீதியுள்ள ஐம்பது ரூபாயைத் தங்களுக்கே அனுப்பியுள்ளேன். பெற்றுக் கொள்ளவும்'' என்று எழுதிச் சம்பந்தப்பட்ட மந்திரிக்கே அனுப்பி வைத்து விட்டார்.

★

திருடன் ஒருவன் கலீபா ஹாரூனின் ராஜ்யத்தில் திருடிவிட்டு வேறு ஒரு ராஜ்யத்துக்கு ஓடி விட்டான். அவனைத் தேடிப் பிடிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் பயன்படவில்லை. கடைசியில் வேறு ஒரு வழியும் தோன்றாமற் போகவே, கலீபாவின் ஆசாமிகள் திருடனின் சகோதரனைப் பிடித்து அவர் எதிரே கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

''உன் சகோதரனின் இருப்பிடத்தைச் சொல்லு. இல்லாவிட்டால் உனக்குத் தண்டனை கிடைக்கும்!'' என்றார் கலீபா.



திருடனின் சகோதரன் அமைதியான குரலில் கேட்டான்: ''தங்களுக்குக் கீழுள்ள அதிகாரிகள் ஒருவனைப் பிடித்துத் தண்டனை யளிக்கிறார்கள். தாங்கள் அவனை மன்னித்து விடுகிறீர்கள். இவ்விஷயத்தில் யாருடைய உத்தரவு செல்லும்?''

கலீபா பதில் சொன்னார்: ''ஏன்? என்னுடையதுதான். என் பதவிதானே அவர்களைக் காட்டிலும் மேலானது!''

''அப்படியானால், எசமான்! என்னை விட்டு விடுங்கள். ஏனெனில், மன்னர்களுக்கெல்லாம் மன்னரான ஆண்டவன் தமது திருக்குரானில், 'ஒருவன் செய்த குற்றத்துக்கு வேறு ஒருவன் தண்டனை பெறக்கூடாது' என்று கூறியிருக்கிறார்!'' என்றான். கலீபா என்ன செய்திருப்பார் என்று சொல்ல வேண்டியதில்லையே!

★

கிரம்ளின் மாளிகைக் காம்பவுண்டுச் சுவரில் 'குருஷேவ் பெரும் முட்டாள்' என்று கொட்டை எழுத்தில் எழுதி யிருந்ததைக் காணக் குருஷேவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. எழுதியவனை உடனே சிறைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பித்தார்.

ருஷ்யப் போலீஸார் குருஷேவின் ஆணையைச் சிரமேற்கொண்டு குற்றவாளியை உடனே பிடித்துவிட்டார்கள்.

''குறைந்தது இருபதாண்டு இந்தக் குற்றவாளிக்குத் தண்டனை அளிக்க வேண்டும்'' என்று குருஷேவ் உத்தரவிட்டார்.

இருபதாண்டு தண்டனையை இந்தக் குற்றத்துக்கு எப்படிக் கொடுப்பதென்று நீதிபதிகள் யோசிக்கலாயினர். 'குற்றவாளி செய்த குற்றமென்ன? ருஷ்யப் பிரதம மந்திரியின் அறிவில் சிறிது சந்தேகம் கொண்டான். அவ்வளவுதானே? அதற்கு அதிகபட்சம் ஆறு மாதம் தண்டனை தரலாம். இருபது வருடம் எப்படித் தண்டனை கொடுப்பது? அது சிறிதுகூட நியாயம் இல்லையே!' என்று தயங்கினர்.




ஆனால் உத்தரவு பிறப்பித்தவர் குருஷேவ் ஆயிற்றே! அவரை மீறி ஒருகாரியம் செய்ய முடியுமா? அநியாயம் என்றாலும் ஒரு நியாயம் வழங்க வேண்டும் அல்லவா? எனவே குருஷேவையும் திருப்திப்படுத்தி நியாயத்தையும் நிலைநாட்டும் முறையில் அவர்கள் அளித்த தீர்ப்பு இதோ, இதுதான்:

''குற்றவாளிக்கு இருபது ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்படுகிறது. கிரம்ளின் மாளிகையின் சுவரை எழுதிக் குட்டிச் சுவராக்கியதற்காக ஆறு மாதம். ருஷ்யாவின் மாபெரும் இரகசியத்தை எதிரிகளுக்கு எட்டவிட்ட இராஜத் துரோகக் குற்றத்துக்காக மீதியுள்ள பத்தொன்பதரை ஆண்டுகள். ஆக இருபது ஆண்டுகள் குற்றவாளிக்குச் சிறைத் தண்டனை விதிக்கிறோம்.''

மாதர் உலகம்

கங்கா ஸ்நானம் ஆச்சா?



இந்தத் தீபாவளிப் பண்டிகை இருக்கிறதே. இது ஒரு பெரிய வேடிக்கையான பண்டிகை. அலாரம் கடிகாரத்தை வைத்துக் கொண்டு எழுந்து கொண்டாடும் பண்டிகை உலகத்தில் இது ஒன்றுதான்.

காலையில் எட்டு மணிக்கு அரைக் கண் விழித்துக் கொண்டு, அப்போதே எழுந்திருக்க வேண்டுமா, பின்னும் சில நிமிஷங்கள் கழித்து எழுந்திருக்கலாமா என்று சிலர் தினமும் சிந்தித்துப் பார்த்துக் கொண்டிருப்பது வழக்கம். அத்தகையவர்களை வருஷத்தில் ஒரு நாளாவது அதிகாலையில் எழுந்திருக்கச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகையோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

இந்தப் பண்டிகை எப்படியோ ஆரம்பித்து எப்படி யெல்லாமோ கொண்டாடப்பட்டு வந்து இன்று நாம் கொண்டாடி வரும் விதத்தில் அமைந்திருக்கிறது.

வாத்ஸ்யாயனர்தான் தமது காமசூத்திரத்தில் முதன் முதலாக இந்த இராத்திரிப் பண்டிகையைப் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார். இதைப் பிறகு சுக்ர ராத்திரி என்றும் தீபோத்சவம் என்றும் சொல்லி வந்தார்கள். இரவில் ஸ்நானம் செய்து விட்டு, தித்திப்புப் பட்சணங்களைத் தின்பார்கள். பிறகு பகடைக் காய் ஆட்டம் ஆடுவார்கள். அதில் யார் ஜெயிக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த வருஷம் முழுதும் லாபகரமாக இருக்கும் என்று நம்பி வந்தார்கள்.

தீபாவளி அமாவாசைக்கு மறு நாள்தான் மஹாபலி பூஜை தினம். அதே தினந்தான் விக்கிரமாதித்திய மன்னன் சாகர்கள் மீது வெற்றி கொண்டது. அன்று ஜைனர்களின் ஆசாரியரான மகாவீரர் நிர்வாண மெய்தினார். ஆயுர்வேத வைத்தியத்தைத் தோற்றுவித்தாரே தன்வந்திரி பகவான், அவருக்கு விசேஷமான தினம் தீபாவளிக்கு முந்தைய நாளாகும். அன்று அவருக்குச் சுக்குத் திப்பிலி இலேகியம் செய்து நைவேத்தியம் செய்வார்கள். தீபாவளி சதுர்த்தசிக்கு முந்தைய நாளைத் தன்தேரஸ் என்பார்கள். அன்று மஹாலட்சுமியையும், குபேரனையும் பூஜை செய்வது வழக்கம்.

கிருஷ்ண பகவானால் கொல்லப்பட்டு மோட்ச லோகம் சென்றானே, அந்த நரகாசுரனை உத்தேசித்துத்தான் நாம் இரவில் ஸ்நானம் செய்து பண்டிகை கொண்டாடுவது என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த நரகாசுரனுக்கும், இந்தப் பண்டிகைக்கும் ஸ்நானப் பிராப்திகூட இல்லை என்று புராணங்களைப் படித்துக் கரைத்துக் குடித்த சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

நரக சதுர்த்தசி என்பதில் வரும் நரகம் என்பது மோட்ச லோகத்துடன் போட்டி போட்டுக் கொண்டு, வருஷா வருஷம் கோடிக் கணக்கான மனித ஆவிகளைக் குடியேற்றிக் கொண்டு வருகிறதே அதே நரகம் தானாம். அது யமதர்ம ராஜனது ஆட்சிக்குட்பட்டது. தீபாவளி அமாவாசைக்கு அடுத்த துவிதியைக்கு யம துவிதியை என்று பெயர். யமதர்ம ராஜனைத் திருப்தி செய்யத்தான் அன்று தர்ப்பணஞ் செய்வது.

இப்படியாகத் தீபாவளியன்றும், அதற்கு முந்தைய பிந்தைய நாட்களிலும் விளக்குகள் ஏற்றுவது, ஸ்நானம் செய்வது, தித்திப்புப் பட்சணம் தின்பது, சுக்குத் திப்பிலி லேகியஞ் செய்வது, தமாஷாக இருப்பது, தர்ப்பணம் செய்வது என்ற பல காரியங்கள் நடந்தேறின. இந்த அம்சங்களை யெல்லாம் சேர்த்து வைத்து நாம் இன்றைய தீபாவளிப் பண்டிகையைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தப் பண்டிகையைப் பல பலவிதமாகக் கொண்டாடுகிறார்கள். மார்வாரிகள் நேரடியாகப் பண தெய்வத்தையே பூஜை செய்வது வழக்கம். பண தெய்வம் என்றால், லட்சுமியோ, குபேரனோ அல்ல. வெள்ளி நாணயங்கள், பவுன் நாணயங்கள், கரன்ஸி நோட்டுகள் இவற்றைக் கும்பலாகக் கொட்டி வைத்து அந்தக் கும்பலைப் பூஜை செய்வார்கள்.

யமனும் யமியும் அண்ணனும் தங்கையுமாவார்கள். இவர்களுக்கிடையே அளவற்ற சகோதர பாசம் ஏற்பட்டிருந்ததாம். இதைக் கொண்டாடும் வகையில் சகோதர சகோதரிகள் ஒருவருக்கொருவர் தீபாவளி சமயம் பரிசுகள் கொடுத்துக் கொள்வார்கள். சகோதரியின் கையிலிருந்து சகோதரன் உணவு உண்பான். இதற்கு 'பாயிலி ஹஸ்த போஜனு' என்று பெயர். இதெல்லாம் வடநாட்டு வழக்கங்கள்.

தமிழ் நாட்டில் நாம் இந்தப் பண்டிகையை எத்தனையோ நாகரிகமானதாகச் செய்து கொண்டிருக்கிறோம்.


தீபாவளி இராத்திரி என்றால் காலை ஐந்து மணியோ, ஆறு மணியோ, ஏழு மணியோ

என்று அர்த்தம். ஏதோ கொஞ்சம் இருட்டா யிருந்தால் அதுதான் இராத்திரி.

எண்ணெய் தேய்த்துக் கொள்வதென்றால் பலர் ஏதோ பெயருக்குத் தலையில் கொஞ்சம் வைத்துக் கொண்டு 'சட்டுப்புட்டு' என்று ஸ்நானம் செய்துவிட்டு வருவார்கள். பண்டிகையைப் பலமாகக் கொண்டாடுபவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தலையில் தாளம் போட்டுக் கொண்டு எண்ணெய் தேய்த்துக் கொள்வார்கள். உள்ளங் காலில் தேய்த்து இறக்குவார்கள். கண்களை எண்ணெயால் அபிஷேகம் செய்வார்கள். ஸ்நான அறைக்குள் புகுந்தால் அரை மணி நேரம் பிடிக்கும். தலை தீபாவளி நடக்கும் பெரிய குடும்பங்களில் 'கியூ' வரிசையில் நின்று ஸ்நானம் செய்யும்படியாயிருக்கும். இந்தக் கலாட்டாவில் வீட்டுக்கார அம்மாள் எண்ணெய் தேய்த்துக் கொள்ளவே மறந்து போய் விடுவாள்; அவகாசமும் இருக்காது.

தீபாவளி மருந்து பலவிதம். கேரள வாசிகள் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் கிடைக்கும் மிளகு, திப்பிலி இவற்றுடன் சுக்கையும் சேர்த்து லேகியமாகச் செய்து நைவேத்தியம் செய்வார்கள். இந்த மருந்தை மருந்து போல் கண்ணை மூடிக் கொண்டு விழுங்கும்படியாகக் கிளறி வைக்கும் சாமர்த்தியம் சில பெண்மணிகளுக்கு உண்டு. சிலர் அதை ஒரு பட்சணம் போல் இன்று அநுபவிக்கும்படி தயாரிப்பார்கள். இந்த வருடம் ஓர் ஆயுர்வேத வைத்திய சாலையில் 'தீபாவளி இலேகியம்' என்று விற்று வருகிறார்கள்.

தீபாவளிப் பட்சணம்: இது சம்பந்தமாகப் பல வீடுகள் அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கும். என்னென்ன செய்கிறது என்று ஒரு மாதத்துக்கு முன்னாலேயே ஜாபிதா தயாரித்து விடுவார்கள். தீபாவளிக்கு முதல் வாரத்தில் அது அடியோடு மாறுதலடையும். முன் காலத்தில் ஒக்காரை, தேன் குழல், முறுக்கு இது மாதிரி இருக்கும். இப்போது பாதுஷா, தர்பார், கலெக்டர், சட்டசபைக் கூட்டம் இது மாதிரி பெயர்களாக இருந்தால்தான் பெருமையுடன் அவற்றைப் பற்றிச் சொல்லிக் கொள்ளத் தோன்றுகிறது. முதலில் தீபாவளி கொண்டாடப்பட்ட போது வெறும் தித்திப்புப் பட்சணங்கள் மட்டும் தான் உண்டு. இப்போது காலையில் காப்பி சாப்பிட்டாக வேண்டுமே! அதற்காகக் கார பட்சணங்களையும் சேர்த்துக் கொண்டோம். ஹோட்டல்களில் தீபாவளிப் பட்சணப் பைகள் விற்கிறார்கள். சுத்தமான நாசி விருந்து கிடைக்கும் வர்ண எஸென்ஸ்களை உபயோகித்துப் பஞ்ச வர்ணங்களிலும் பட்சணங்கள் செய்கிறார்கள்.



பட்டாசு வெடிக்காத தீபாவளி, மேளம் கொட்டாத கல்யாணத்துக்குச் சமமாகும். ஒரு பெரிய பொருளாதார நிபுணர் "காசைக் கரியாக்காமல் வாணத்தை வாங்கிச் சுடு" என்று சொல்லி யிருக்கிறார். இதில் சிறுவர்கள், இளம் தம்பதிகள், நடுத்தர வயதானவர்கள் சுடுவது வேடிக்கையல்ல. வயதான கிழவர் ரகசியமாக ஒரு ஊசிப் பட்டாசுச் சரத்தை எடுத்துத் தம் மனைவியிடம் கொடுத்து அவள் அதை வெடிப்பதைப் பார்த்து ஆனந்தப்படுவதைப் பார்க்க வேண்டுமே!

ஒரே ஒரு பிள்ளையை மட்டும் பெற்றெடுத்து விட்டுப் பெண்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்த ஒரு ஸ்திரீதான் முதன் முதலில் 'தலை தீபாவளி' என்று கொண்டாட வேண்டும் என்று ஏற்படுத்தியிருக்க வேண்டும். அந்தத் தலை தீபாவளிக்குப் பையனோடு வருகிற தாயார், தகப்பனார், அவன் சகோதரிகள், அவர்களுடைய கணவன்கள் எல்லோருக்கும் பெண் வீட்டார் புடவை வேஷ்டி வாங்கிக் கொடுக்க வேண்டும் என்கிற சம்பிரதாயம் உண்டு. ஆனால், அவர்கள் வந்த ரயிலை ஓட்டிய எஞ்சின் டிரைவர், அவர்கள் ஏறி வந்த டாக்ஸியின் டிரைவர் இவர்களுக்கு ஒன்றும் வாங்கிக் கொடுக்க வேண்டியதில்லை! சில சமயம் தலை தீபாவளி, தலைச்சன் தீபாவளியாகவும் அபிவிருத்தியடைவதுண்டு. ஐப்பசி மாதத்தில் கல்யாணமானால் அடுத்துவரும் முதல் தீபாவளியின்போது பெண் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டிருக்கக் கூடுமல்லவா?

தலைதீபாவளிக்கு வரும் மாப்பிள்ளைகளைப் பற்றிக் கதை எழுதுபவர்கள், தயாராக ஒரு குடம் தண்ணீரையும் எடுத்து வைத்துக் கொண்டு உட்காருவது வழக்கம். ஏனென்றால் பையனுக்கு மனைவியைப் பார்க்க வேண்டும் என்று தோன்றினால் தண்ணீர் வேண்டும் என்று கேட்பான். அவன் மனைவியை இருபது இருபத்தைந்து தரம் தண்ணீர் கொண்டு வரச் செய்வதற்கு ஒரு குடமாவது வேண்டாமா? இப்போதுதான் பசங்கள் மனைவியை அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்கே போய் விடுகிறார்களே!

தீபாவளிப் பண்டிகை அம்சங்களைப் பரிகசித்து எத்தனையோ வேடிக்கையாக எழுதலாம். அதைக் கொண்டாடா விட்டால் பாபம் ஒன்றும் ஏற்பட்டு விடாது; அதைக் கொண்டாட வேண்டிய அவசியமில்லை

என்றெல்லாம் சொல்பவர்களை அதன் மோகனயந்திரத்தினின்றும் தப்புவதில்லை.

''இதென்ன தீபாவளி வேண்டிக் கிடக்கிறது? புதுசு கட்டிக்கிறதாம்; பட்டாசு சுடுகிறதாம்'' என்று கணவனும் மனைவியும் பேசாதிருப்பார்கள். ஆனால் தீபாவளியன்று மாலை இருட்ட ஆரம்பித்து நேரம் ஆக, ஆக அவர்கள் மனசு என்னமோ போல் இருக்கும். இரவு பத்து மணிக்குப் படுத்துக் கொள்ளச் செல்லும் போது, ''இப்படிக் கடைத் தெருப் பக்கம் போய் வேடிக்கை பார்த்து விட்டு வரலாமா?'' என்று யாராவது ஒருவர் கேட்பார். பிறகு இருவரும் கடைத் தெருப் பக்கம் செல்வார்கள். துணிக் கடைக்குள் அவர்கள் கால் அவர்களை இழுத்துச் செல்லும். ''இந்தப் புடவை உனக்கு நன்றாயிருக்கும் போல் இருக்கிறதே. அடுத்த மாசம் வாங்குகிறதை இப்போதே வாங்கி விட்டால் போச்சு'' என்பான் கணவன். ''பணம்?'' என்பாள் மனைவி. ''இதோ கொண்டு வந்திருக்கிறேன்'' என்று மணிபர்ஸை எடுப்பான். பிறகு அவள், ''உங்களுக்கு!'' என்று கூறி வேஷ்டியை எடுத்துப் போடச் சொல்வாள். 'பணமில்லையே' என்று அவன் சொல்லும் போது அவள் உள்ளங் கையில் மடித்து வைத்துக் கொண்டிருக்கும் சில பத்து ரூபாய் நோட்டுக்களைக் காண்பிப்பாள். அப்படியே ஒரு பட்சணப் பொட்டணம் வாங்கிக் கொண்டு, அப்படியே கொஞ்சம் பட்டாசு மத்தாப்பு வாங்கிக் கொண்டு வீடு திரும்புவார்கள். இத்தகைய சிலர் துணி முதலியன வாங்க வந்து கொண்டிருப்பார்கள் என்று கடைக்காரர்களுக்குத் தெரியும். அதனால்தான் விடிய விடியக் கடையைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



சென்னை நகரத்தில் மட்டும் பதினைந்து லட்சம் ரூபாய் பெறுமான வாணங்களும் வெடிகளும் விற்பனையாகின்றன. மற்றத் தமிழ் ஜில்லாக்களில் சரியாவது நாற்பத்தைந்து லட்சம் ரூபாய். சுமார் மூன்று கோடி ரூபாய் பெறுமான துணி மணிகள் தீபாவளிக்காக விற்பனையாகின்றன.

தீபாவளிப் பண்டிகை கிட்டத்தட்ட ஒரு தேசிய அந்தஸ்தை அடைந்து விட்டது. இந்தியாவில் எல்லோரும் ஒருமித்து ஒரே நாளில், ஒரே வேளையில் கிட்டத்தட்ட ஒரே விதமாகக் கொண்டாடும் பண்டிகை அது ஒன்றுதான். அந்தப் பண்டிகையை இன்னும் கொஞ்சம் மணக்கும்படி நாம் செய்யலாம்.

அன்று பட்டுத் துணிகளும், மில் துணிகளும் வாங்குகிறபடி வாங்குவோம். அத்துடன் கொஞ்சம், பேருக்கு ஏதோ கதர்த் துணியையும் வாங்கி வைப்போமே. ஒரு துண்டு ஒரு கைக்குட்டை வாங்கினாலும் சரிதான். இது நம்மிடையே தேசிய உணர்ச்சியைத் தோற்றுவிக்கப் பயன்படும். அத்துடன் அன்று கிருஷ்ண பகவானைப் பற்றிச் சிறிது எண்ணிப் பார்ப்பது போல் காந்தியடிகளைப் பற்றியும் ஞாபகப்படுத்திக் கொள்ளத் தோன்றும்.

தீபாவளிப் பண்டிகையைப் பற்றி நான் பெரிதும் பயப்படுவது ஓர் அம்சம்தான். வாணங்கள், வெடிகளைப் பற்றிச் சொல்லவில்லை. ப...ட்...ச...ண...ங்...க...ள்.... தீபாவளி ஆகிவிட்டதா என்று விசாரிக்கப் போகும் ஒவ்வொரு வீட்டிலும் அதைக் கொஞ்சம் தின்றாக வேண்டும்; ஒரு பெரிய பையை எடுத்துக் கொண்டு போய் எல்லாவற்றையும் கட்டி எடுத்துவந்து நாலைந்து நாட்களுக்குத் தின்கலாமென்றால், அதற்கு இந்த 'நாகரிகம்' குறுக்கிட்டுத் தடுக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் கொஞ்சம் கொஞ்சம் தின்றாலும் வயிற்றில் குறைந்தது அரைப்படி கடலைமா சேர்ந்துவிடும். ஜீரணப் பை இப்போதே கட, முடா என்கிறது. அதாவது அது முன்கூட்டியே கடவுளைப் பிரார்த்தனை செய்து கொள்ளத் தொடங்கி யிருக்கிறது.

'கங்கா ஸ்நானம் ஆகி விட்டதா?' நான் முன் கூட்டியே விசாரித்து விடுகிறேன்.

உள்ளம் கவர்ந்தவன்

ஜோமாஸ்

“உமா! இந்தத் தடவை வரும் தீபாவளி உன் தலை தீபாவளி என்பது மாத்திரம் அல்ல. உன் விஷயத்தில் ஒரு பெரிய குழப்பத்தைத் தீர்த்து வைத்த தீபாவளியுங்கூட... நான் வாங்கி வந்த புடவையைக் கட்டிக் கொள்வதா?... சின்னண்ணா வாங்கி வந்த புடவையைக் கட்டிக் கொள்வதா என்று நீ குழம்பித் தவிக்க வேண்டாம். மாப்பிள்ளை அனுப்பியிருக்கும் புடவையைத்தான் கங்காஸ்நானம் செய்ததும் கட்டிக் கொள்ள வேண்டும். மத்தியானம் சின்னண்ணா வாங்கிய புடவையைக் கட்டிக் கொள்ள வேண்டும். சாயந்திரம் நான் வாங்கித் தந்த புடவையைக் கட்டிக் கொள்ளுவாயாம்....!”

உமாவுக்கு மகிழ்ச்சி ஒருபுறம்; வியப்பு ஒரு புறம். கணவனைப் பற்றிக் கூறியதும் அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. வியப்புக்குக் காரணம் பெரிய அண்ணாவின் பேச்சுத்தான். அப்பொழுது திடீரென்று அவளுடைய சின்னண்ணா அங்கே வந்தான்.

“.......உமா, பெரியண்ணா சொல்லுவது சரிதான். ஆனால் அதில் ஒரு திருத்தம். தீபாவளியன்று மத்தியானம் நான் வாங்கித் தந்த புடவையைக் கட்டிக் கொள்ளச் சொன்னார், இல்லையா? அதற்குப் பதிலாக, பெரியண்ணா வாங்கிய புடவையைக் கட்டிக்கொள்வாயாம்....!” என்று கூறவே உமாவுக்குப் பெருமை தாங்கவில்லை.

அருமைத் தங்கை உமாவினிடம் போட்டி போட்டுக் கொண்டு, அன்பு செலுத்திய சங்கரனும், நாராயணனும் அந்தப் பாசம் காரணமாகவே சதா ஒருவருக்கொருவர் சண்டை போட்ட வண்ணமாக இருப்பார்கள். இன்று அவர்கள் இருவரும் இவ்வளவு ஒற்றுமையாய்ப் பேசுவதைக் கண்ட உமா வியக்காமல் என்ன செய்வாள்?

விடிந்தால் அவளுக்குத் தலை தீபாவளி. குடும்பத்தில் ஒரு குழப்பத்தைத் தீர்த்து வைத்த தீபாவளியுங்கூட! அவள் இதயமே மகிழ்ச்சியில் தளும்பியது.

அந்த நாட்களை அவள் எப்படி மறப்பாள்!

பிறந்த உடனேயே தந்தையை இழந்து விட்ட உமாவுக்குத் தாயின் அன்பும், அண்ணன்மார்களின் அளவுகடந்த பாசமும் அந்தத் துயரத்தையே நினைக்கவொட்டாமற் செய்து விட்டன. மேலும் அவள் தந்தை பெரிய தனவந்தர். ஆகவே, அவளுக்கு வேண்டிய மட்டும் செல்வத்தைத் தேடி வைத்திருந்தார். போதாக் குறைக்கு அவள் அண்ணன்மார்கள் இருவரும் நல்ல உத்தியோகத்தில் இருந்து கொண்டு கைநிறையச் சம்பாதித்தனர். தங்கையை இருவரும் கண்ணினைக் காக்கின்ற இமையை விட அக்கறையாய்க் காத்தனர். இதை விவரமாகச் சொல்ல வேண்டுமானால் அண்ணன்மார்களின் பாசத்திலும், பரிவிலும் சிக்கிக் கொண்டு உமா தனியாய்த் தவித்தாள். அவள் தாயார் இதைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தாள்.

ஒரு நாள் சங்கரன் உமாவுக்கு ஒரு வாசனைச் சோப்பு வாங்கி வந்தான். அது ரொம்ப நன்றாயிருக்கிறதென்று பாராட்டி உமா பூரித்துப் போனாள். மறுநாளே நாராயணன் வேறொரு உயர்ந்த வாசனைச் சோப்பு வாங்கி வந்து உமாவினிடம் கொடுத்தான். அதுவும் நன்றாயிருந்தது. இப்போது உமாவின் பாடு ரொம்பத் திண்டாட்டமாய்ப் போய் விட்டது.

சோப்பு மாத்திரமா? பாவாடை, தாவணி, ஜாக்கெட், நாகரிகச் செருப்பு, ரிப்பன் ஆகியவைகளெல்லாம் உமாவுக்கு இரட்டைப் பங்குகளாகவே கிடைத்து வந்தன. சிறுமியாயிருந்தவரையில் உமா இதை உற்சாகத்



தோடு வரவேற்றாள். ஆனால்பெரியவளாக ஆக அது பெரிய தொந்தரவாகப் போய்விட்டது. பெரியண்ணா வாங்கிக் கொடுத்ததைப் புகழ்ந்தால் சின்னண்ணாவுக்குப் பிடிக்காது; சின்னண்ணா வாங்கிக் கொடுத்ததைப் புகழ்ந்தால் பெரியண்ணாவின் முகம் சிறுத்துவிடும். பாவம் அவர்கள் இருவரும் மிகவும் நல்லவர்கள்; ஒருவருக்கொருவர் அன்புடையவர்கள்தான். தங்கையிடம் கொண்ட அபரிமிதமான பாசம் காரணமாக இருவரும் அர்த்தம் இல்லாமல் விரோதித்துக் கொண்டனர். அண்ணன்மார்கள் இருவரையும் சமாதானப்படுத்துவதற்காக உமா பட்ட சிரமம் சொல்லி முடியாது.

பெரியண்ணாவைத் திருப்திப்படுத்துவதற்காக அவன் வாங்கிக் கொடுத்த நீலப் பட்டுப் பாவாடையையும், சிவப்பு நிறப் பட்டுச் சோளியையும் அணிந்து கொண்டு மேலே மஞ்சள் நிற நைலான் தாவணியுடன் ஒரு நாள் காட்சியளிப்பாள் உமா. மறுநாளே சின்னண்ணா வாங்கித் தந்த சிவப்புப் பட்டுப் பாவாடையும், மஞ்சள் பட்டு ஜாக்கெட்டும் அணிந்து வெள்ளை ஜார்ஜெட் தாவணியுடன் பள்ளிக்கூடம் போவாள்.

உமாவை எந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது என்பது பற்றி அண்ணன் தம்பிகளுக்குள் எழுந்த சண்டை அவள் கல்லூரியில் சேர்ந்த பிறகும் நிற்கவில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்

திலும் அவர்கள் தாயார் தலையிட்டு அந்த அன்புப் போட்டியில் நியாயம் வழங்கி, இருவரையும் சமாதானப் படுத்தி வைப்பாள்.

அண்ணன்மார்களின் எத்தனையோ போருக்கும் புயலுக்கும் இடையில் உமா எல்லாப் பரீட்சைகளிலும் முதன்மையாகத் தேறி, பி. ஏ. பரீட்சையிலும் சிறப்பாகத் தேறினாள்.

சிறுமி உமாவுக்கும், குமாரி உமாவுக்கும் தான் எத்தனை வித்தியாசம்! அழகான அரும்பு மலராகி, மணம் வீசுவது போல் பருவம் அடைந்த உமாவும் வனப்பின் உறைவிடமாகத் திகழ்ந்து எழிற் பதுமையாகத் தோன்றினாள். அவள் வயது வளர வளர அழகும் வளர்ந்தது. அவள் அழகு வளர வளர அவளது தாயாரின் கவலையும் வளர்ந்தது. 'இவளுக்குத் தகுந்த கணவனாகக் கிடைக்க வேண்டுமே' என்று நினைத்து அவள் பெருமூச்சு விட்டாள்.

சங்கரன், நாராயணன் இருவருமே போட்டி போட்டுக்கொண்டு வரன் பார்த்தார்கள். இரண்டு பேர் பார்த்த வரன்களும் தனித்தனியாகப் பெண் பார்க்க வந்தார்கள். அழகின் பிரதிபிம்பமென நின்ற உமாவைப் பிடிக்காமல் போக அவர்களுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? இருவருமே சம்மதம் தெரிவித்துவிட்டார்கள். உமாவின் பாடுதான் மிகவும் திண்டாட்டமாய்ப் போய்விட்டது.

ஒரு நாள் முழுவதும் எந்த விதமான முடிவுக்கும் வர முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள் உமா.

பெரியண்ணா சங்கரன் திடீரென்று அவளிடம் வந்தான். அவன் எப்போதுமே அப்



படித்தான். எதிலுமே ஒரு பரபரப்பு. அதுவும் அவன் மேற்கொண்ட காரியமாக இருந்து விட்டால் கேட்கவே வேண்டாம். அதைப் பற்றிப் பிறர் என்ன நினைப்பார்கள் என்று தெரிந்துகொள்ளும் ஆர்வமே அவனுக்கு உண்டாகாது.

''உமா, நீ ராகவனைத்தான் மணந்து கொள்ள வேண்டும். அவன்தான் உனக்கு எல்லா விதத்திலும் ஏற்ற கணவன். பி. காம் பாஸ் செய்துவிட்டு ரிசர்வ் பாங்கியில் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான். ரொம்பக் கெட்டிக்காரன். அவன் தகப்பனார் பெரிய வக்கீல். நல்ல சொத்துள்ள குடும்பம். அவர்கள் வீட்டு மருமகளாய்ப் போனால் நீ ஒரு வேலையும் செய்ய வேண்டாம்.... என்ன? யோசித்து எனக்குச் சீக்கிரமாக உன் பதிலைத் தெரிவி. உன் அநுகூலமான பதிலைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். நீதான் அவனைப் பார்த்தாயே! ஆள் வாட்ட சாட்டமாய் எத்தனை அழகாய் இருக்கிறான் பார்!'' என்றான் சங்கரன்.

உமா பெரியண்ணனை நிமிர்ந்து பார்த்துப் பேசத் தைரியம் இல்லாமல் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவன் போன சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் சின்னண்ணா நாராயணன் அங்கு வந்து சேர்ந்தான்.

''என்ன உமா, அண்ணா என்ன சொல்லி விட்டுப் போகிறான்? அவன் தேடிப் பிடித்தவனுக்கே மாலையிடு என்று அதிகார தோரணையில் சொல்லியிருப்பானே! நீ அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாதே. உனக்குத் தகுந்தவன் தியாகராஜன்தான். எம். ஏ. முதல் வகுப்பில் தேறியிருக்கிறான். இப்போது காலேஜ் லெக்சரராக இருக்கிறான். சீக்கிரத்தில் புரொபசராகிவிடுவான். பரம ரசிகன். அதோடு சொத்துக்காரனும் கூட. நீ பி. ஏ. பாஸ் செய்திருப்பதற்கு அவனைத்தான் மணந்து கொள்ளவேண்டும்!'' என்று கூறினான்.

ஏற்கனவே தனக்குரிய மணமகனைத் தேர்ந்தெடுக்கும் பிரச்னையில் முடிவு காணாமல் குழம்பிக் கொண்டிருந்த உமாவுக்குச் சின்னண்ணாவின் பேச்சைக் கேட்டதும் இன்னும் குழப்பம் அதிகரித்துவிட்டது.

பெரியண்ணா சங்கரன் முன்கோபக்காரன். ஒரு காரணமும் இல்லாமலே அவனுக்குக் கோபம் நினைத்தபோதெல்லாம் வந்துவிடும். அவன் ஒன்று சொல்லி அதன்படி நடக்கவில்லையென்றால் நெற்றிக் கண்ணைத் திறந்து விடுவான். நாராயணன் மகா ரோஷக்காரன். அவனைத் திருப்திப்படுத்தவில்லை என்றால், அவன் அந்த வீட்டை விட்டே வெளியேறி விடுவான். இந்தத் தர்மசங்கடமான நிலைக்கு என்ன செய்வதென்று புரியாமல் தவித்தாள்.

இவ்விரண்டு பிரச்னைகளையும் தவிர அவளுக்கு மூன்றாவது பிரச்னை ஒன்று இருந்தது. அதுதான் அவள் உள்ளம் கவர் கள்வனைப் பற்றிய பிரச்னை. அண்ணன்மார்கள் இருவருடைய பாசத்துக்கும் கெடுபிடிகளுக்கும் இடையே தன் உள்ளத்தை அவர்களிடம் காட்ட அவளுக்குச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. அண்ணன்மார்களுக்காக அவனை மறந்து விடவும் முடியவில்லை.

வாசுதேவனுக்கும் உமாவுக்கும் அறிமுகம் ஆனதே மிகவும் சுவாரஸ்யமான சந்தர்ப்பத்தில்தான். ஆனால் மறக்க முடியாதது.

உமாவின் சொந்தச் செலவுக்கென்று அவளது இரண்டு அண்ணன்மார்களும் தாராளமாகப் பணம் கொடுப்பார்கள். அவள் மிகவும் கெட்டிக்காரி. வீண் செலவு செய்ய மாட்டாள். கையில் நிறையப் பணத்தை வைத்துக் கொள்ளவும் மாட்டாள். தன் பெயரில் ஒரு சேவிங்ஸ் பாங்க் கணக்கைத் தொடங்கி, அதில் அந்தத் தொகையைக் கட்டுவதை வழக்கமாகக் கொண்டாள். தேவைப்படும்போதெல்லாம் பாங்கிக்குச் சென்று பணத்தை எடுத்துக் கொண்டு வருவாள். உமா பணம் கட்டியிருந்த பாங்கியில்தான் வாசுதேவன் 'காசாள'ராக (காஷியராக)ப் பணிபுரிந்து வந்தான். இருவரும் ஒருவரையொருவர் நன்கு அறிந்தவர்கள்தான் என்றாலும் அவர்கள் பழக்கம் வெறும் அறிமுகமாகவே நின்றது. பாங்கிக்குப் போனபோதெல்லாம் உமா அவனைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பாள். அவனும் பதிலுக்கு ஒரு புன்னகை புரிவான்.

ஒரு நாள் உமாவின் தோழி ஒருத்தியின் தாயாரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்க அவசரமாகப் பணம் தேவைப்பட்டது. உமா பாங்கிக்கு ஓட்டமாக ஓடினாள். பணம் கொடுக்கும் ஜன்னலுக்கு அருகில் அவள் சற்றுக் காத்துக் கொண்டிருக்க நேர்ந்த சமயத்தில் ஞாபக மறதியாகத் தன் கைக் கடிகாரத்தைக் கழற்றி வைத்துவிட்டுப் போய்விட்டாள். அவள் போன பிறகுதான் வாசுதேவன் அவளுடைய கைக் கடிகாரத்தைப் பார்த்தான். அது மிகவும் விலை உயர்ந்தது. உடனே அதை எடுத்து மிகவும் பத்திரமாக வைத்துக் கொண்டான். வேலை முடிந்து வீட்டுக்குப் போகும்போது அந்தக் கடிகாரத்தை உமாவினிடம் சேர்த்துவிடலாம் என்று தீர்மானித்தான். பாங்கியில்தான் அவள் விலாசம் இருக்கிறதே.

ஆனால் மாலையில் வீட்டுக்குப் புறப்படும் போது மனம் குழம்பியது: 'அவள் வீட்டுக்குச் சென்று கடிகாரத்தைக் கொடுக்கப் போக ஏதேனும் விபரீதம் விளைந்தால்...!' தன்னால் அவளுக்கு எந்தவித இழுக்கும் ஏற்படக் கூடாது என்று அவன் மனம் எண்ணியது. அவள் யார்? அவன் யார்? அவளிடம் அவனுக்கு அத்தனை கரிசனம் ஏற்படக் காரணம்? ஒரு வேளை.... ஒருவேளை....!.... அப்படியிருக்குமோ? சீச்சீ, அப்படியெல்லாம் இருக்கவே முடியாது. அவன் எங்கே? அவள் எங்கே?

இன்னொரு தடவை அவள் பாங்கிக்கு வரும் பொழுது கடிகாரத்தை அவளிடம் சேர்த்து விடுவது என்ற முடிவுக்கு வந்தான் வாசுதேவன். ஆனால் மனம் மட்டும் நிம்மதி இழந்து தவித்தது. நேரே வீட்டுக்குப் போகாமல் மெரினா கடற்கரைக்குச் சென்றான். வெகு தூரம் நடந்து கூட்டம் இல்லாத இடமாகப் பார்த்து மணலில் அமர்ந்தான். குளிர்ந்த காற்று வீசியும் ஏனோ அவன் மனம் மட்டும் புழுங்கியது. தான் செய்தது தவறோ என்ற எண்ணம் எழும்பி அவன் மனத்தை ஒரு பாரமாக அழுத்தியது. நிஜார் பாக்கெட்டில் மிகவும் பத்திரமாக



மூட்டு வலி, கீல் வாதம், கடின உழைப்பு, இதர வலிகள்...



வலி
எதுவாயினும்
நிவாரணம்
பெற

ஸ்லோன்ஸ் பாம்

"எந்த வலிக்கும் ஏற்ற மருந்து"

ஸ்லோன்ஸ் லினிமெண்ட் டையும் உபயோகிக்கலாம். சிறிது தடவினால் போதும். இதமான அதன் வெப்பம் உடனடி நிவாரணம் தருவதை உணரலாம்.



வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது.)



இருந்த உமாவின் கைக் கடிகாரத்தை அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டான். அது அடிப்பது அவன் காதில் விழவில்லை தான். ஆனால் அவன் இதயம் 'படபட' வென்று பலமாக அடித்துக் கொண்டது.

சூரியன் அஸ்தமிக்கும் நேரம். வாசுதேவனால் இனிமேலும் அங்கே உட்கார்ந்திருக்க முடியவில்லை. மனச் சோர்வுடன் வீட்டுக்குப் போகலாம் என்று எழுந்திருக்கும் சமயத்தில் தேவகன்னிகை மாதிரி உமா அவன் கண்ணில் தென்பட்டாள். அந்தி வேளையின் பொன்னிற ஒளியில் உமா உருக்கி வார்த்த பொற் சிலையாகத் தோன்றினாள். வாசுதேவன் அவளைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லையாதலால் அயர்ந்துதான் போனான்.

வாசுதேவன் அவள் அருகில் சென்று, "நமஸ்காரம்.... மிஸ்....' என்று முடிக்காமல் தயங்கினான்.

"....என் உமா என்று சொல்லலாம்..." என்று கூறிப் பதிலுக்குக் கைகூப்பிய வண்ணம் புன்னகை பூத்தாள் உமா.

அவள் இத்தனை சரளமாகப் பழகுவாள் என்று வாசுதேவன் எதிர்பார்க்கவில்லை.

"....இன்று உங்கள் ரிஸ்ட் வாச்சை.... பாங்கிக் கவுண்டரில் விட்டுவிட்டீர்கள்....!" என்று கூறிக்கொண்டே நிஜார்ப் பைக்குள்ளிருந்து கைக் கடிகாரத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான் வாசுதேவன். அதே சமயத்தில் அவள் கையில் ஏற்கனவே அணிந்து கொண்டிருந்த கைக்கடிகாரத்தையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

"ரொம்ப தாங்க்ஸ். உட்காருங்கள், மிஸ்டர்!" என்று கூறிக் கொண்டே உமா தானும் உட்கார்ந்தாள். வாசுதேவனும் உட்கார்ந்து கொண்டான்.

"காணாமற் போன ரிஸ்ட்வாச்சைப் போலவே என் கையில் இன்னொரு ரிஸ்ட் வாச் இருப்பதைப் பார்க்க உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது இல்லையா, மிஸ்டர்....?" என்ற உமா மேலும் தொடர்ந்து, "எனக்கு இரண்டு அண்ணன்மார்கள். இருவரும் என்மேல் உயிரையே வைத்திருக்கிறார்கள். எதிலும் எனக்கு இரட்டைப் பங்கு கிடைக்கும். அதனால்தான் ரிஸ்ட் வாச்சிலும் இரட்டை! அதிருக்கட்டும். உங்களுக்கு நான் ரொம்ப ரொம்ப நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றாள்.

அவளது படபடக்கும் இமையின் அழகிலும், பவளம் போன்ற அதரங்களின் அசைவிலும், முத்துப் பற்களின் மோகன ஒளியிலும் தன்னை மறந்து விட்ட வாசுதேவன் சட்டென்று சமாளித்துக் கொண்டு "இதில் நன்றி பாராட்டும்படியாக என்ன இருக்கிறது?" என்று கூறினான்.

"ஸார், ஸார்! அப்படிச் சொல்லிவிடாதீர்கள். அந்தக் கைக்கடிகாரம் என் பெரியண்ணா வாங்கித் தந்தது. அது தொலைந்து விட்டதென்றால்....!"

"....அவர் ரொம்பக் கோபிப்பாரோ?"

"இல்லை. அதற்காகக் கோபிக்கமாட்டார். சின்னண்ணா வாங்கித் தந்த கடிகாரத்தை மாத்திரம் தொலைக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறாயே என்றுதான் கோபித்துக் கொள்வார்!" என்று கூறிக் கலகலவென்று சிரித்தாள் உமா. வாசுதேவனும் சிரித்தான்.

மாப் - பிள்ளை வாதம்



"உங்கப்பா இவ்வளவு சீக்கிரம் மண்டையைப் போட்டிருக்க வேண்டிய இல்லை...!"

"ஏன் இத்தனை கரிசனம்?"

"பின்னே என்னவாம். இப்படி மாப்பிள்ளைகளும் பெண்களும் தீபாவளி வந்தா பிடுங்கித் தின்கிறதுகள்...., உன் அப்பா உயிரோடு இருந்தால் ஜாய்யா அங்கே போய்த் தீபாவளிக்கு இருந்து விட்டு வரலாமே!"

அன்று தொடங்கிய அறிமுகம் வெகு வேகமாக வளர்ந்து காதலாக மாறியது. இந்த நிலையில் உமாவுக்கு அண்ணன்மார்களின் ஏற்பாடு பெரிய அதிர்ச்சியாக வந்து சேர்ந்தது.

அன்று சங்கரன் மிகவும் உற்சாகத்தோடு வீட்டுக்கு வந்தான். ஒருநாளும் இல்லாத புதுமையாகத் தம்பி நாராயணனை மிகவும் அன்போடு அழைத்துப் பேசினான்.

சினிமாவுக்குப் போய்விட்டுச் சற்று முன்புதான் திரும்பியிருந்த உமாவுக்கு இதைக் காண ஆச்சரியம் தாங்கவில்லை. இத்தனைக்கும் அவள் தன் திருமண விஷயமாக மனம் பெரிதும் குழம்பிப் போயிருந்தாள். அப்படியிருந்தும் பெரியண்ணனின் இந்த அதிசயப் போக்கை அவளால் கவனியாமல் இருக்க முடியவில்லை.

சங்கரன் ஆபீஸிலிருந்து வந்தால் ஒரு வருடனும் பேசமாட்டான். வந்ததும் வராததுமாக உடைகளை மாற்றிக் கொண்டு, அவசரமாகச் சிற்றுண்டி, காப்பி அருந்தி விட்டு வெளியே போய் விடுவான்.

பெரியண்ணனின் பேச்சில் தன் பெயர் அடிபடுவதைக் கேட்ட உமா கூர்ந்து கவனிக்கலானாள்.

> உணருவதற்கு ஓர் இதயமும், எண்ணுவதற்கு ஓர் அறிவும், செயல் புரிவதற்கு ஒரு திடமான புஜமும் நமக்குத் தேவை. இதில் அறிவுக்கும் இதயத்துக்கும் முரண்பாடு உண்டாகுமானால், இதயத்தையே பின்பற்றுங்கள். —ஸ்வாமி விவேகானந்தர்

''நாராயணா! உமாவுக்கு நீ பார்த்திருக்கும் வரனை 'வேண்டாம்' என்று சொல்லிவிடு'' என்றான் சங்கரன்.

உடனே, நாராயணன் கோபத்துடன், ''ஏன், நீ பார்த்த வரனை நிச்சயம் செய்து கொண்டு வந்து விட்டாயோ? நீ ஒரு அவசரக் குடுக்கை. உமாவின் மனசைத் தெரிந்து கொண்டாயா?'' என்று கேட்டான்.

''அவள் விருப்பத்தைத் தெரிந்துகொண்டு விட்டதனால்தான் நீ பார்த்திருக்கும் வரனை வேண்டாமென்று சொல்லிவிடு என்கிறேன்'' என்றான் சங்கரன்.

உமாவுக்குத் திக்கென்றது. அண்ணாவிடம் தன் விருப்பத்தை அவள் எப்போது தெரிவித்தாள்?

''....உமா உன்னிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்துவிட்டாளா...?'' என்று திகிலோடு கேட்டான் நாராயணன்.

''இல்லேயடா, நாராயணா! நீதான் இப்பொழுது அவசரக் குடுக்கை! நான் சொல்ல வந்த சமாசாரத்தைக் கேட்காமலே பேசுகிறாயே! அவளே தனக்குத் தகுந்த வரனைத் தேடிக்கொண்டு விட்டாளடா! இனிமேல், உனக்கும் எனக்கும் அவளுக்காக வரன் தேடும் வேலையும் இல்லை. இதற்காக நீயும் நானும் அநாவசியமாய்ச் சண்டை போட்டுக்கொள்ள வேண்டியதும் இல்லை....!''

உமாவுக்கு இதைக் கேட்டதும் உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது.

''....நீ என்னடா சொல்லுகிறாய்...?'' என்று பதற்றத்துடன் கேட்டாள் கூடத்தில் உட்கார்ந்திருந்த அவர்கள் தாயார்.

''விளக்கமாகச் சொல்லு, அண்ணா!'' என்றான் நாராயணன் பரபரப்புடன்.

''இன்றைக்கு ஆபீஸில் வேலை முடிந்ததும் என்னவோ சோர்வாக இருந்தது. சினிமாவுக்குப் போனேன். அது ஒரு குடும்பக் கதை. பெண்ணின் மனசை அறிந்துகொள்ளாமல் தகப்பனார் பல இடங்களில் வரன் தேடுகிறார். கடைசியில் ஒரு நாள் அவருக்குத் தன் பெண்ணின் மனத்தைத் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிட்டுகிறது. அதற்கு முன்பு தன் பெண்ணின் விவாகத்தைப் பற்றி அவளுக்கு ஒரு அபிப்பிராயம் இருக்கும், அதைக் கேட்டு அறிவது தமது முக்கியமான கடமை என்பதே அவருக்குத் தெரியாமல் இருந்தது. பெண்ணின் உள்ளத்தைத் தெரிந்து கொண்டதும் அவர் தம் வரன் தேடும் படலத்தை நிறுத்தி விடுகிறார். எனக்கும் அந்தப் படத்தைப் பார்த்த பிறகு தான் நம் தவறு தெரிந்தது. உமாவின் விவாக விஷயமாக நாம் செய்திருக்கும் முயற்சிகளை நினைத்து வெட்கப்பட்டேன். படத்தின் இடைவேளையில் உமாவின் உள்ளம் கவர்ந்தவனையும் பார்த்துவிட்டேன்....'' என்று சங்கரன் மேலே ஏதோ பேசுவதற்குள் நாராயணன் இடைமறித்து, ''அண்ணா! உனக்குக் கூட நிதானமாக யோசித்துப் பார்க்க வேண்டும் என்று தோன்றிவிட்டது என்றால் அப்புறம் பேசுவதற்கு ஏதுவுமே இல்லை: உமாவைக் கூப்பிடு. அவன் யார் என்று கேட்டுத் தெரிந்து கொண்டு மேலே நடக்க வேண்டியதைக் கவனிக்க வேண்டியது தான்'' என்று கூறிவிட்டு ''உமா, உமா!...'' என்று இரைந்து கூப்பிட்டான்.

''அட நாராயணா, சுத்த முட்டாளாயிருக்கிறாயே! உமாவிடம் அவனைப் பற்றி விசாரிப்பதற்கு நாம் இரண்டு பேருமே லாயக்கில்லை. அதை அம்மாவிடம் விட்டுவிடுவோம்!'' என்றான் சங்கரன்.

அதற்கு மேலும் உமாவால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. தன் விருப்பம் நிறைவேறப் போகிறது என்பதில் ஒருபுறம் ஆனந்தமும், ஒருபுறம் வெட்கமும் சூழ்ந்து கொண்டன. தாயாரிடம் வந்து எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாள்.

''உமா, நானும் அவனைப் பார்த்தேன். நீயும் அவனும்தான் சினிமாவுக்கு வந்திருந்தீர்களே! லக்ஷ்மி பாங்கியில் காஷியராக இருக்கிறானே, அவன்தானே! நல்ல பையன் தான்....!'' என்று சங்கரன் சொன்னதும் உமா நாணித் தலை குனிந்தாள்.

''அண்ணா! இதில் ஒரு விசேஷம் கவனித்தாயா? நீ பார்த்த வரன் நிச்சயம் ஆகியிருந்தால் என் மனசுக்குச் சங்கடமாகியிருக்கும். நான் பார்த்த வரன் நிச்சயமாகியிருந்தால் உன் மனசுக்குக் கஷ்டமாக இருந்திருக்கும். இப்பொழுது இந்த வரனை நிச்சயம் செய்வதிலே எனக்கும் திருப்தி, உனக்கும் திருப்தி....!'' என்றான் நாராயணன்.

''...ஏன் அத்துடன் நிறுத்திவிட்டாய்? உமாவுக்கும் திருப்தி என்று சொல்லு!'' என்றான் சங்கரன்.

உமாவுக்குத் தன் உள்ளம் கவர்ந்தவனையே மணந்து கொள்வதில் மாத்திரம்தான் திருப்தி என்று சொல்லிவிட முடியாது. பெரியண்ணா, சின்னண்ணா இருவரையும் சம்மதிக்க வைக்க முடியும் என்று உமா கொஞ்சம்கூட நம்பவில்லை. அவர்கள் இருவரையும் ஒத்துப் போகச் சொல்வதற்கு என்ன செய்யலாம் என்று உமா ஒரு முடிவுக்கும் வர முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். கடைசியில் பழம் நழுவிப் பாலில் விழுந்து விட்டது!

உமாவின் கல்யாணக் காட்சி அவள் மனத்திரையில் தோன்றியது. பெரியண்ணாவும் சின்னண்ணாவும் போட்டி போட்டுக்கொண்டு விருந்தினரை உபசரித்தது நினைவுக்கு வந்தது. இருவருமாகச் சேர்ந்து கொண்டு அவளை ஓயாமல் பரிகாசம் செய்ததை நினைத்துப் பார்க்கும்போது அவளுக்குத் தன்னையும் அறியாமல் சிரிப்பு வந்தது.

''என்ன உமா, நீயாகவே தனியாகச் சிரித்துக் கொள்கிறாயே, என்னிடம் சொல்லக்கூடாதோ?'' என்று கேட்டுக்கொண்டே அவள் கணவன் வாசுதேவன் அருகில் வந்து அவளது பூங்கரங்களைப் பற்றினான். உமாவின் முகம் செவ்வல்லியாய்ச் சிவந்தது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



அம்மா ஆ ஆ ஆ ஆ

அவனுடைய வேதனையைப் போக்கி அவனைச் சிரிக்கச் செய்யுங்கள், உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் கொடுப்பதன் மூலம். இப்பொழுது ஒரு நூற்றாண்டுக்கு மேலாகக் குழந்தைகள் (லட்சக்கணக்கில்) வாயு, வயிற்றுக் கோளாறு மற்றும் பல் முளைக்கும் போதுள்ள வேதனைகள் முதலியவைகளிலிருந்து நிவாரணம் அடைந்திருக்கின்றன. இத்தகைய நிவாரணத்தை உடவர்ட்ஸ் மட்டுமே அளிக்கிறது. தலைமுறை தலைமுறையாகத் தாய்மார்கள் செய்தது தவறாகவே இருக்கமுடியாது!

உட்வர்ட்ஸ்
'கிரைப் வாட்டர்'



100 வருஷங்களுக்கு மேலாக உலகெங்கிலும் உபயோகிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள்: ஹெர்பர்ட்ஸன்ஸ் லிட். பம்பாய், கல்கத்தா, & லக்னோ ● டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கோ. மதராஸ், எம். ஜி. ஷஹானி & கோ. (டில்லி) பிரைவேட் லிட்., டில்லி.

Aiyars AT. 357-TM. A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



L. 38-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.